Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU


ராம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்

100 வீத சாதாரண போட்லான்


சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/1460)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 31 ஞாயிற்றுக்கிழமை (13.05.2012) பக்கங்கள் 20 ஓசை – 225


கடன்காரப் பணக்காரர்கள் 09


ஒரு நாளைக்கு 8 முறை 17


அம்மா! அம்மா! 10


குருப்பெயர்ச்சி பலன்கள் 12


மாவையின் உ.நோக்கங்கள் 08

# அமெரிக்க எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் அரசு

(கொழும்பு)

ஜெனிவா தீர்மானத்திற்கு பொறுப்புக் கூறக்கூடிய முழுமையான செயற்றிட்ட வரைபினையே இலங்கையிடமிருந்து அமெரிக்கா எதிர்பார்க்கின்ற நிலையில் அதனை ஈடுசெய்யும் வகையிலேயே வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் வொஷிங்டன் பயணம் அமையும் எனத் தெரியவருகின்றது.

அமெரிக்காவில் நான்கு நாட்கள் தங்கியிருக்கவுள்ள வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தலைமையிலான அரசதரப்புக் குழுவினர் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டனுடன் எதிர்வரும் 18 ஆம் திகதி முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

இதன்போது அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டனிடம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்திட்ட வரைபைக் கையளித்து பீரிஸ் தலைமையிலான குழுவினர் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கடந்த கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானம் மற்றும் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முழுமையான செயற்திட்ட வரைபு போன்றவற்றை மையப்படுத்தியே பீரிஸுடனான பேச்சுவார்த்தையினை ஹிலாரி கிளின்டன் முன்னெடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயரதிகாரிகளையும்

19 ஆம் பக்கம் பார்க்க

## திருமலையில் கைது 21 பேர் விடுதலை

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த மாத இறுதியில் பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் விசாரணைக்கு என அழைத்துச் செல்லப்பட்ட முன்னாள் விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

பெண்கள் உட்பட இந்தச் சந்தேக நபர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு அழைக்கப்பட்டு, பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. இவர்கள் கைது செய்யப்பட்டதை உறுதிப்படுத்தும் வகையில் பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் உறவினர்களுக்கு பற்றுச் சீட்டும் அப்போது வழங்கப்பட்டிருந்தது.

19 ஆம் பக்கம் பார்க்க

## சந்தேகத்திற்கு இடமான வகையில் இரவு நேரம் நடமாடிய 16 பேர் கைது.



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய 16 பேர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் செ.ஸ்ரீ. குகநேசன் தெரிவித்துள்ளார். யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலத்தில் நேற்றுக் காலை 10.00 மணிக்கு இடம்பெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் நள்ளிரவு 12.00 மணியளவில் சந்தேகத்திற்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பின் வலி.தெற்குப் பிரதேச சபை தனியாரின் உடமைகளை அடாத்தாக அள்ளியது

(சுன்னாகம்)

சுன்னாகம் தெற்குப் பகுதியிலுள்ள தனியார் ஒருவரின் வீட்டின் முன்புறம் மதில் கட்டுவதற்காகப் பறிக்கப்பட்ட கற்கள் மற்றும் இதர பொருட்களைச் சுன்னாகம் பிரதேச சபையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் நேற்றைய தினம் அத்துமீறி பிரதேச சபை வாகனங்களில் ஏற்றிச் சென்றுள்ளதாகச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சுன்னாகம் தெற்குப் பகுதியிலுள்ள குறித்த வீட்டின் உரிமையாளர் தனது எல்லை வேலியொன்றுக்கு மதில் கட்டுவதற்காகப் பிரதேச சபையிடம் விண்ணப்பித்திருந்தார். அவர்கள் குறித்த இடத்தைப் பார்வையிட்டதுடன் பிரதேச சபையின் தொழில்நுட்ப அலுவலரால் மதில் கட்டுவதற்கான எல்லை குறித்தொதுக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டது. எனினும் எழுந்து பூர்வமான அனுமதி வழங்கப்பட்டு

19 ஆம் பக்கம் பார்க்க

## டெனிஸ் ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு



டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் ஊழியர்கள் யாழ். அலுவலத்தில் நேற்று காலை 6.30 தொடக்கம் 8.30 வரை இரண்டு மணிநேர பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் இன்று வரை தமக்கு வழங்கப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றை நிறுவனம் வங்கியில் வைப்பில் இடவில்லை எனத் தெரிவித்தே அவர்கள் பணிப்பகிஷ் கரிப்பில் ஈடுபடடனர்.மாதாந்தம் வழங்கப்படும் சம்பள சிட்டையில் 2010 ஆம்

19 ஆம் பக்கம் பார்க்க

## மீனவர் அத்துமீறல் விவகாரம் சுமுகமாகத் தீர்க்க இணக்கம்

(கொழும்பு)

பாக்குநீரிணையில் மீனவர்களின் அத்துமீறல் மற்றும் மீன்பிடி சம்பந்தமான பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்துக் கொள்வதற்கு இலங்கை மற்றும் இந்திய கடற்றொழில் அதிகாரிகள் இணக்கம் கண்டுள்ளனர். சட்டரீதியான நடவடிக்கைகளுக்குச் செல்லாமல் இப் பிரச்சினையை சுமுகமான முறையில் தீர்ப்பதற்கு இருதரப்பும் இணங்கியுள்ளன. சர்வதேச கடல் எல்லையை மீறிய குற்றச்சாட்டின் கீழ் கைது செய்து இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்கு இந்திய அதிகாரிகளும், இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர்களை விடுவிப்பதற்கு இலங்கை அதிகாரிகளும் இணங்கியிருப்ப தாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. இந்திய அதிகாரிகளுடன் நட்புரீதியான

19 ஆம் பக்கம் பார்க்க

## பொன்னாலை – கீரிமலை வீதி இருபது வருடத்தின் பின் திறப்பு

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை - கீரிமலை வீதி 20 வருடங்களின பின்னர் மக்கள் பாவனைக்காக அண்மையில் திறந்து வைக்கப் பட்டுள்ளது. கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த இவ் வீதி 1992 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு தடைசெய்யப்பட்டிருந்தது. எனவே மீளவும் இவ் வீதியை பயன்படுத்த அனுமதிக்குமாறு வலி.மேற்கு பிரதேச

19 ஆம் பக்கம் பார்க்க

## பரிந்துரை அமுலாகாவிடின் சர்வதேச விசாரணை நிச்சயம்

### அடித்துக்கூறுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்படுத்தாவிட்டால் அடுத்த வருடம் மார்ச் மாதம் சர்வதேச விசாரணை இலங்கை மீது நடத்தப்படுவது நிச்சயமென ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அத்துடன், வெளிவிவகார அமைச்சர் பீரிஸின் வொஷிங்டன் விஜயத்தின் போது அமெரிக்காவிடம் கையளிக்கப்படவுள்ள செயற்திட்டத்தை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு விவகாரம் தொடர்பில் நேற்று

19 ஆம் பக்கம் பார்க்க

## தமிழரசுக் கட்சித் தலைவராக மட்டக்களப்பு சட்டத்தரணி?

### சம்பந்தனை கழட்டிவிடத் திட்டம்

தமிழரசுக்கட்சியின் தற்போதைய தலைவர் இரா.சம்பந்தனை அப்பதவியிலிருந்து நீக்கிவிட்டு மட்டக்களப்பில் நீண்டகாலமாக தமிழரசுக்கட்சியில் இருக்கும் சட்டத்தரணி ஒருவரை தலைவராக தெரிவு செய்வதற்கு முயற்சிகள் நடைபெறுவதாக மட்டக்களப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கை தமிழரசுக் கட்சியின் 14 ஆவது தேசிய மாநாடு எதிர்வரும் 25, 26, 27ஆம் திகதிகளில் மட்டக்களப்பில் நடைபெற உள்ளது. 25 ஆம் திகதி மாலை மத்திய செயற்குழுவின் கூட்டம் நடைபெறும். 26 ஆம் திகதி காலை மாநாடு ஆரம்பமாக முதல் பொதுக்குழு

19 ஆம் பக்கம் பார்க்க

# பச்சிலைப்பள்ளியில் இறால், மீன் பண்ணை

## அமைப்பதற்கு அமைச்சர் ராஜித உறுதி

(பச்சிலைப்பள்ளி)

கிளாலி இறங்குதுறை விரைவாக புனரமைக்கப்படும். அத்தோடு பச்சிலைப்பள்ளியில் இறால் மற்றும் மீன் பண்ணைகளை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என மீன்பிடி நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் ஏற்பாட்டில் பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளை நாடாளுமன்றில் சந்தித்து கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின் போது மீள்குடியேறியுள்ள போதும் கிளாலி, புலோப்பளை அறத்திநகர் பகுதிகளில் கடற்றொழில் சார் அபிவிருத்தி செயற்பாடுகளில் பாரிய முன்னேற்றங்கள் எதுவும் எட்டவில்லையெனவும் தெரிவித்த கடற்தொழிலாளர்கள் போரினால் அழிந்துபோன கிளாலி மற்றும் புலோப்பளை இறங்குதுறைகள் இதுவரை புனரமைக்கப்படவில்லை எனவும் இறங்குதுறைக்கான பாதையையும் புனரமைத்துத்தருமாறு அமைச்சரிடம் கேட்டுக்கொண்டனர். அத்தோடு மீனவர் ஓய்வு மண்டபம் ஒன்றினையும் அமைத்துத்தர வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டனர்.

இச்சந்திப்பின் போது பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எதிர்கட்சித் தலைவர் அன்ரன் அன்பழகன், கிளாலி, புலோப்பளை, அறத்திநகர் கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (29)

# சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்காலிகமாக கடமையாற்றி வந்த 110 சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை நேற்றும் இன்றும் யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்று வருகின்றது.

இவ்விரு நாட்களிலும் 180 நாட்களுக்குக் குறையாது யாழ். போதனா வைத்தியசாலையில் தற்காலிக சிற்றூழியர்களாக கடமையாற்றி வந்த சிற்றூழியர்களின் ஆவணங்கள் மற்றும் வினைத்திறன் குறித்து இந்நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)




உலக மலேரியா தினத்தை முன்னிட்டு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மலேரியா தடுப்பு இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'மலேரியா நோயை இலங்கையிலிருந்து ஒழிப்போம்' எனும் தொனிப்பொருளிலான நடைபவனியை காணலாம். (படம் - சுமித்தி)

## கொடியேற்றம்



(இணுவில்)

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து எதிர்வரும் 24 ஆம் திகதி தேர்த்திருவிழா வும், 25 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

தினமும் கோவில் மணிமண்டபத்தில் மதியம் அன்னதானம் நடைபெறும்.

## தூக்க நோயால் செத்து விழும் கோழிகள்

(வரணி)

வரணி வடக்கு பிரதேசத்தில் தற்போது கோழிகளுக்கு ஒரு வித தூக்க நோய் பரவியுள்ளது. இந்த நோயால் கோழி வளர்ப்போர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். வளர்ப்பு கோழிகள் கூண்டோடு இறந்து விட்டதால் இனிவரும் மாதங்களில் அதிக விலைக்கு பணம் கொடுத்து தமது தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று கோழி வளர்ப்போர் கவலை தெரிவித்துள்ளனர்.


## நெஞ்சகலா நினைவலைகள்

தோற்றம் 13 06 1958



மறைவு 11 04 2012

### அமரர் மகாலிங்கம் சிவஞானசுந்தரம் (அப்புலிங்கம்)

(கீர்த்திகா என்ரர்பிறைஸ், அப்சரா ராடஸ், ஹவுஸ்கோல்ட் குட்ஸ் சென்ரர், வட்டபிளை மெற்றல் உரிமையாளர்)

**அன்னாரது 31 ஆம் நாளில் நினைவலைகளுடன்**

ச.சாம்பசிவம்
எஸ்.எல்.கே. லஷ்மி மாளிகை
சங்கானை.

(C/1479)








## Palmyrah Development Board

**Ministry of Traditional Industries and Small Enterprise Development**

### Vacancies

**1. Research Officers -**

**Qualification & Experience:** A Bachelor's Degree in Micro Biology/Food & Technology/ Food & Nutrition/ Bio-Technology/ Chemistry/ Botany from a university recognized by the U.G.C.

With

One year experience in relevant field inUniversities/ Research institutes

**Age:** Age should be below35 years

**2. Research Assistants -**

**Qualifications:**

a) Having passed the G.C.E. (O/L) examination in six sub jects in one sitting with credit passes in four subjects including
   i. Tamil/Sinhala
   ii. Mathematics

b) Having passed the G.C.E. (A/L) examination in Bio-Science / Mathematics to follow a tertiary education course by passing the required number of subjects other than the 'General Paper' at the G.C.E. (A/L) Examination.

With

Having successfully completed a Diploma or Certificate Course in Laboratory Technology /relevant field conducted by a recognized Institute

**Age:**Age should be below 35 years

**3. Technical Assistants -**

**Qualifications:**

a) Having passed the G.C.E. (O/L) examination in six sub jects in one sitting with credit passes in four subjects including
   i. Tamil/Sinhala
   ii. Mathematics

b) Having passed the G.C.E. (A/L) examination to follow a tertiary education course by passing the required number of subjects other than the 'General Paper' at the G.C.E. (A/L) Examination.

With

Having successfully completed a Diploma or Certificate Course in Laboratory Technology / Information Technology by a recognized Institute

**Age:** Age should be below 35 years.

**General Conditions:**

i. Self-prepared applications including detailed bio-data and copies of relevant certificates address to **"Chairman, Palmyrah Development Board, National Housing Development Authority Building, Kandy Road, Jaffna"**,should be reached on or before **23rd May 2012**.

ii. Application not complying with all the requirements mentioned above will be rejected.

Chairman
Palmyrah Development Board
Telephone No: 0212222034

(C/1563)

மற்றவர்களுடைய துன்பத்தைக் கண்டு இரக்கப்படு; ஆனால் உன்னுடைய சொந்த துன்பங்களை உன்னிடமே வைத்திரு! - அகிடன் பிரபு -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## அன்பைத் தவிர வேறு அறியாத...

குழந்தைகளுக்கு உலகில் இரண்டே இரண்டு பிரச்சினைகள் தான் இருக்கிறது என்பார்கள். ஒன்று அம்மா. மற்றது அப்பா. இன்று அம்மாவுக்குரிய நாள். மே மாதத்தில் வரும் இரண்டாவது ஞாயிறு, அன்னையர் தினம் – mother's day, உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

கடவுள் எல்லா இடங்களிலும் இருக்க முடியாததால் தாயைப் படைத்தார் என்று ஒரு யூதப் பழமொழி கூறுகிறது. தாயிற் சிறந்த கோவிலுமில்லை என்னும் தமிழ்ப் பழமொழியும் இதே கருத்தில் அமைந்தது தான்.

வருடம் தோறும் வரும் சித்திரைப் பூரணையில் இறந்து போன தாயை, விரதமிருந்து நினைவு கூரும் வழக்கம் தமிழ் இந்துக்களிடம் உள்ளது. உலகளாவிய அன்னையர் தினம் கொண்டாடப்படுதல் ஆரம்பமானது அமெரிக்காவில்.

1908–இல் அமெரிக்காவைச் சேர்ந்த அன்னா என்பவர், தனது தாயாரான ரீஸ் ஜார்விஸ் நினைவாக "தாயர் நட்பு தினம்" என்று ஒரு தினத்தைக் கொண்டாட ஒரு குழுவை அமைத்தார். அன்னாவும் அவரது நண்பர்களும் தேசிய ரீதியில் தாய்க்குரிய நாள் விடுமுறையை ஏற்படுத்தும்படி ஒரு கடிதப் பிரசாரத்தை ஆரம்பித்தனர்.

1912 டிசம்பரில் "அன்னையர் தின சர்வதேச சங்கம்" நிறுவப்பட்டது. மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையை தாய்க்குரிய நாளாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற கூட்டுத் தீர்மானத்தை, 1914 மே 8–இல் அமெரிக்க காங்கிரஸ் நிறைவேற்றியது.

பின்னர் இந்நாளில் தாயை அன்புடன் நினைவுகூருவதற்கு மேலாக, வர்த்தகர்களின் பேராசைக்கு இத்தினமும் பலியாகி, பரிசு வழங்குதலே பிரதானமாகியது. இதனால் கோபமடைந்த அன்னா, அன்னையர் தின விழாவை நிறுத்தும்படி 1923–இல் வழக்குத் தொடர்ந்தார். ஒரு நிகழ்ச்சியின் அமைதியைக் குழப்பியதாக அவர் பின்னர் கைது செய்யப்பட்டார். 1948 இல் இறப்பதன் முன்னர் இந்த தாய்க்குரிய நாள மரபை ஏற்படுத்தியதற்காக அவர் மிகவும் மனம் வருந்தினார் என்று கூறப்படுகிறது.

ஆயினும் எல்லா நாடுகளிலும் இந்த தாய்க்குரிய நாள் கொண்டாட்டங்கள் பிரபலம் அடைந்தன. அந்த நாளை தாயுடன் தொடர்புகொண்டு நன்றி தெரிவிப்பதற்கான நாளாக அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

தாயன்பின் சிறப்பைக் காட்ட எத்தனையோ கதைகள் உண்டு. அவற்றுள் சிறப்பான ஒரு நாடோடிக் கதை இது:

ஒருவன் ஒரு பெண்ணை மிக அதிகமாகக் காதலித்தான். ஆனால் அவள் மிகக் கொடுமையான மனம் கொண்டவள். எனவே, தான் அவனைத் திருமணம் செய்வதானால் அவன் தனது தாயின் இதயத்தைப் பரிசாகத் தரவேண்டும் என்ற ஒரு கொடிய வேண்டுகோளை இதயமே அற்றவளாகக் கேட்டாள். அவனுடைய கண்களை காதல் முற்றாக மறைத்திருந்தது. அவன் அவளது கோரிக்கைக்குச் சம்மதித்து தனது தாயைக் கொன்று அவளது இதயத்தை ஒரு தட்டில் வைத்து காதலிக்குத் தருவதற்காக எடுத்து வந்தான். வரும் வழியில் அவுன் கல் தடுக்கி ஓரிடத்தில் விழுந்து விட்டான். அப்போது அந்தத் தட்டில் இருந்த தாயின் இதயம் கேட்டதாம் "மகனே நோகிறதா?"

வானுலகு சென்று திரும்பிய நபித்தூதர் சொன்னார்: சொர்கம் விண்ணில் இல்லை; அது இருப்பது அன்னையின் மலர்ப் பாதத்தில்!

- ஆசிரியர் -

# மலேரியா அற்ற இலங்கை

# யாழ்.நகரில் நடைபவனி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் பிராந்திய மலேரியா தடுப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் "மலேரியா அற்ற இலங்கை" என்னும் தொனிப் பொருளிலான நடைபவனியும் கண்காட்சியும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் காலை 9.30 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார பணிமனையில் இருந்து இப்பேரணி ஆரம்பமாகியது. நடை பவனியில் கலந்துகொண்ட சுமார் 500 இற்கு மேற்பட்ட சுகாதாரத் திணைக்கள ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் மருந்தூட்டப்பட்ட நுளம்பு வலையினுள் உறங்குவோம், நுளம்பு கடிப்பதை தவிர்த்து மலேரியாவிலிருந்து எம்மைப் பாதுகாப்போம், நீர் தேங்கும் இடங்களில் குடம்பியுண்ணும் மீன்களை விடுவோம், காய்ச்சல் ஏற்பட்டால் மலேரியாவுக்காக குருதி பரிசோதனை மேற்கொள்வோம் போன்ற வாசகங்கள் எழுதிய சுலோகங்களைத் தாங்கியவாறு ஆஸ்பத்திரி வீதியூடாக கஸ்தூரியார் வீதியை சென்றடைந்து அங்கிருந்து யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபவனி முடிவடைந்தது.

அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றல் வைபவத்துடன் கண்காட்சி கூட்டத்தினை யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் மற்றும் யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, சர்வோதய நிறுவனத்தின் பணிப்பாளர், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் இணைப்பாளர் ஆகியோர் கண்காட்சியினை ஆரம்பித்து வைத்ததுடன், மலேரியாக் காய்ச்சல் ஏற்பட்டால் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளல், நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்தும் மீன் வகைகள் மற்றும் தாவரவகைகளை பார்வையிட்டனர். (எஸ்)

# பருத்தித்துறை சாலையின் பேருந்து அதிகரிப்பு

வடமராட்சி மக்களின் நலன் கருதியும் பயணிகள் தமது பயணத்தின் போது எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டு கடந்த .5 ஆம் திகதி முதல் பருத்தித்துறை சாலையினரால் இலங்கை போக்கு வரத்துச் சபைக்குச சொந்தமான பஸ் சேவைகளை அதிகரித்துள்ளதாக பருத்தித்துறை சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த காலத்தில் பயணிக்ள் தமது போக்குவரத்தின்போது நீண்டநேரமாக காத்திருக்க வேண்டிய நிலை இருந்தது. அத்துடன் பேருந்து வண்டிகளுக்கான உதிரிப்பாகங்கள் மற்றும் பேருந்துகள் போதியளவு இல்லாததே காரணம். இதனால் எமது சேவையை சிறப்பான முறையில் செய்வதற்கு முடியாமல் போய்விட்டது. இது வரை காலமும் 28 பேருந்துகளே சேவைக்கு விடப்பட்டிருந்தது ஆனாலும் இன்று 32 பேருந்துகளும் சேவையில் விடப்பட்டுள்ளது. இதனால் பயணிகள் தமது போக்குவரத்தை ஓரளவுக்கு நிவர்த்தி செய்ய முடிகின்றது. இதன் அடிப்படையில் தினமும் பருத்தித்துறையில் இருந்து 751 இக்கு 6 பேருந்துகளும், 750 இற்கு 8 பேருந்துகளும் யாழ்ப்பாணம் நோக்கிச் செல்கின்றது. அதேபோல் வடமராட்சி கிழக்குக்கு 5 பேருந்துகளும், கொழும்புக்கு 2 பேருந்துகளும், 766 மானிப்பாய் கடற்கரை வீதி ஊடாக 1 பேருந்தும் 767 மானிப்பாய 750 வீதியூடாக 1 பேருந்தும், யாழ். பல்கலைக கழகத்திற்கென 1 பேருந்தும், இரவு தங்கி வரும் 5 பேருந்துகளும், சேவையில் விடப்பட்டுள்ளன.

தற்போது கடன் அடிப்படையில் ஒரு பேருந்து பருத்தித்துறை சாலைக்கென கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் அந்தப் பேருந்து கொழும்பு சேவைக்கு விடப்பட்டுள்ளது. அத்துடன் காய்க்கும் சாலையாக பருத்துத்துறை சாலை விளங்கி வருகின்றது. அதாவது மிக வருமானம் நிறைந்த சாலையாக இருக்கிறது. காரணம் ஊழியர்களின் ஓய்வு இல்லாத அர்ப்பணிப்பான சேவையாகும். எதிர் காலத்திலும் எமது சேவையை மேலும் விஸ்தரிப்பதற்கு முழு முயற்சி எடுத்துவருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (116)

# பூசகர் மீது தாக்குதல்; நவாலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நவாலி - அட்டகிரி முருகன் கோவில் பூசகர், மதுப்பிரியர் ஒருவரால தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கணேசர்மானந்தா (வயது - 32) என்ற பூசகரே இவ்வாறு தலையில் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்ற இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது.

குறித்த பூசகர் ஆலயத்திற்கு வெளியாக உள்ள கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்த சமயம் மேற்படி மதுப்பிரியர் பூசகரைத் தாக்கியதாகத் தெரியவருகின்றது. இந்தச் சம்பவம் குறித்து .மானிப்பாய் பொலிஸில பூசகர் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது. (பா.)

# ஊனமுற்றோர் 40 பேர் பதிவு

(வரணி)

வடவரணி J/339 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் ஊனமுற்ற கண்பார்வையற்ற மனநலன் பாதிக்கப்பட்டவர்கள் போன்றவர்களுக்கான பதிவுகளும் புகைப்படம் எடுத்தலும் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி பிரதேச சபையினரால் (சமூக சேவைப் பகுதி) மேற்கொள்ளப்பட்டது. சுமார் 40 இற்கு மேற்பட்ட நோயாளிகள் தமது பதிவுகளை மேற்கொண்டனர். (150)

# காதலில் ஏற்பட்ட சர்ச்சை கண்ணாடியைப் பதம் பார்த்தது

(வடமராட்சி)

காதல் சர்ச்சை காரணமாக ஆத்திரமுற்ற இளைஞன் ஒருவன் வீட்டில் நின்ற இரு லொறிகளின் கண்ணாடிகளையும், வீட்டு யன்னல் கண்ணாடிகளையும் அடித்தும் கல்லால் ஏறிந்தும் நொருக்கி விட்டு தலைமறைவாகியுள்ளார்.

மேற்படி சம்பவம் பொலிகண்டி - சின்னக்கடைப் பகுதியில் உள்ள நடராசா பாஸ்கரசோதி என்பவரது வீட்டில் கடந்த புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இங்குள்ள வீடொன்றில் இருந்தவர்கள் பின்புறம் சமையல் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் மதில் ஓரத்தில் மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டு சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான லொறிகளின் கண்ணாடிகளையும் வீட்டு யன்னல் கண்ணாடிகளையும் உடைத்து அட்டகாசம் புரிந்துள்ளார். சத்தம் கேட்டு வீட்டார் பின்புறம் இருந்து வந்தபோது அட்டகாசம் புரிந்த இளைஞன் மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு தலைமறைவாகியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் புகார் தெரிவித்ததையடுத்து அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி சம்பவம் போன்று லொறி உரிமையாளரான நடராஜா பாஸ்கரசோதியின் சகோதரரான திருநெல்வேலியில் வசிக்கும் டாக்டர் சயந்தன் அவர்களின் வீட்டிலும் இடம்பெற்றுள்ளது. ஏனைய 5 சகோதரர்களுக்கும் உயிர் அச்சுறுத்தல் குறித்த இனம்தெரியாத நபரால் ஏற்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது. பொலிகண்டிப் பகுதியில் நடைபெற்ற சம்பவம் குறித்து அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (116)

# கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வாழ்க்கைப்படி வழங்க நடவடிக்கை

## கூட்டுறவு உதவி ஆணையாளர் அருந்தவநாதன்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் விசேட படிகள் வழங்குவது தொடர்பாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 02/2012 இலக்கச் சுற்றுநிருபத்திற்கு அமைவாக அனுமதி கோரும் கடிதங்கள் தயாரிக்கப்படாது அனுப்பிவைக்கப்பட்டமையால் அவற்றைச் சங்கங்களுக்குத் திருப்பி அனுப்பியுள்ளதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் தகவல் தருகையில்,

யாழ்.மாவட்டத்தில் 24 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் சில சங்கங்களைத் தவிர பல சங்கங்கள் 2010, 2011 ஆம் ஆண்டுகளில் நட்டத்திலேயே இயங்கி வந்துள்ளன. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபத்தில் சங்கங்களால் நடத்தப்படும் கிராமிய வங்கிகள் மூலம் கிடைக்கப்பெறும் இலாபத்தைத் தவிர்த்து சங்கம் சுய முயற்சிகளில் இலாபம் ஈட்டினால் அது தொடர்பில் இயக்குநர் சபை திருப்தி அடையும் பட்சத்தில் எனது அனுமதியினைப் பெற்று அப்படிகளை வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக சங்கங்களின் பணிநிலை தொடர்பாகவும, பணியாளர்கள் பெறும் மொத்தச் சம்பளம், சுற்றுநிருபப் பிரகாரம் பெறப்படும் விசேட படிகள் தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றைத் தருமாறு சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சம்பள மீளாய்வுப் படிவம் ஒன்றை அனுப்பி வைத்தபோதும் அதனைத் திருப்திகரமான முறையில் பூரணப்படுத்தி அனுப்பாமையால் அவை சங்கங்களுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கூட்டுறவுப் பணியாளர்களுக்கான புதிய சம்பளத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்றவகையில், அவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு சம்பள மீளாய்வுப் படிவத்தை உரிய முறையில் பூரணப்படுத்தி சங்க நிர்வாகங்கள் அனுப்பி வைக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.

# நிறுத்தப்பட்ட பேருந்துச் சேவையை மீள ஆரம்பிக்கக் கோரிக்கை

(பூநகரி)

பூநகரிப் பகுதியில் இருந்து அதிகாலை வேளையில் யாழ். நகருக்கு வருவோரின் வசதி கருதி காலை வேளையில் பூநகரி வாடியடியில் இருந்து முன்பு நடைபெற்று நிறுத்தப்பட்ட அரச பேருந்து சேவையை மீள ஆரம்பிக்குமாறு மக்கள் தரப்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

காலை வேளையில் யாழ். பகுதிக்கு வரும் அரச, தனியார் ஊழியர்கள், தனியார் கல்வி நிலையங்களுக்கு வரும மாணவர்கள் காலையில் மன்னாரில் இருந்து புறப்பட்டு பூநகரிக்கு 8 மணிக்கு வரும் தனியார் பேருந்து மூலம் பிரயாணம் செய்து 9.30 மணிக்கே யாழ். நகரம் வந்து சேரக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதால் பலரும் பெரும சிரமம் அடைவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

கடந்த பல மாதங்களுக்கு முன்னதாக மாலை யாழ்.பேருந்து நிலையத்தில் மாலை 5.30 இற்குப் புறப்படும் பேருந்து இரவு பூநகரியில் தரித்து நின்று காலை 6 மணிக்கு பூநகரியில் இருந்து யாழ்.நகருக்கு சேவையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (112)

# கூட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபை தெரிவுக்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (116)

# நகர மயமாக்கல் காரணமாக கிராமங்களின் அழகு பாதிப்பு

(யாழ்.நிருபர்)

யாழ்.நகரின் மத்தியில் உள்ள வர்த்தக நிலையங்களின் களஞ்சியசாலைகள் கொட்டடி போன்ற கிராமங்களில் அமைக்கப்படுவதால் இக்கிராம இயற்கை அழகை இழந்து விடுவதோடு சுகாதாரச் சீர்கேட்டினையும் எதிர்நோக்கியுள்ளது.

இவ்வாறு, கொட்டடி சன சமூக நிலையம் கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து நடத்திய புத்தாண்டு விழா மற்றும் சான்றோர் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ்மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் சி.யமுனானந்தா குறிப்பிட்டார்.

கொட்டடி சனசமூக நிலைய கலையரங்கத்தில் நிலையத் தலைவர் பொ.சிறிராஜ புலேந்திரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் தொடர்ந்து பேசுகையில்,

நகரமயமாக்கல் மூலம் கிராமங்கள் இயற்கைத் தன்மையை இழந்து விடுகின்றன. யாழ்.நகரின் அயற்கிராமங்களில் வர்த்தக நிலையங்களின் களஞ்சியசாலைகள் அமைக்கப்படுவதால் இக்கிராமங்களின் இயற்கைச் சூழல் பாதிக்கப்படுவதோடு சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன.

இப்பிரதேச மக்களை எனது குடும்ப அங்கத்தவர்கள் போன்று நேசித்து சுகாதாரத் திணைக்களத்திடமிருந்து தேவையான மருந்து வகைகளைப் பெற்றுக் கொடுக்கின்றேன. போதைப் பொருட்களைப் பாவிக்கும் இளைஞர்களில் பெரும்பாலானோர் காசநோய்க்கு ஆளாகியுள்ளனர்.

எமது மூதாதையர் எப்படி ஒழுக்கமாகவும் நேர்மையாகவும் வாழ்ந்தனரோ அவ்வாறு நாமும வாழப் பழக்கிக் கொள்ளவேண்டும். கல்வியறிவும், போதைப் பொருள் பற்றிய விழிப்புணர்வும் இல்லாமையே பெருமபாலான இளைஞர்கள் போதைப் பொருள்களுக்கு அடிமையாவதற்குக் காரணமாகும்.

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் ஒருமுறை தோற்றி சித்தி பெறத் தவறுவோர் இரண்டாவது தடவையும் தோற்றி சித்திபெற்று உயர்கல்வியைத் தொடர வேண்டும் எனவும் குறிபபிட்டார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பாதிகாரி சமன்சிகேரா, யாழ்.மாநகராட்சிமன்ற நீர்வழங்கல் பொறுப்பதிகாரி இ.முத்துக்குமாரன், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி ராஜினி முத்துக்குமாரன், வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் மு.மகேநதிரன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.யூட், கலாசார உத்தியோகத்தர் இ.கந்தவேள், கொட்டடி கிராம அலுவலர் எஸ்.சேந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (10)

# சேதமடைந்த நிலையில் முள்ளிப் பாலம்

(வரணி)

கொடிகாமம-பருத்தித்துறை பிரதான வீதியிலுள்ள முள்ளிப் பாலம் மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

வாகனங்கள் ஒருபகுதியால் மட்டுமே பயணிக்கின்றது. இப்பாலம் முற்றாகச் சேதமடைந்து போக்குவரத்துக்கள் தடைப்படும் அபாயம் உள்ளது.

இப்பாலத்தைப் புனரமைப்புச் செய்ய வேண்டுமென வாகன உரிமையாளர்களும் மற்றும் பயணிகளும் கோரிக்கை விடுகின்றனர். (150)

# வரணி சைவப்பிரகாச வித்தியாலய வீதியைப் புனரமைக்க கோரிக்கை

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை வீதி மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மழை காலத்தில் சேறும் சகதியுமாகவும் வெயில் காலத்தில் தூசி படிந்தும் காணப்படுகிறது. இவ்வீதியில் பாடசாலை, முன்பள்ளி, கிராம அலுவலர் அலுவலகம், பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கம் போன்ற முக்கிய அலுவலகங்கள் அமைந்துள்ளன. எனவே இந்த வீதியைப் புனரமைக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனா. (100)

# தனியார் சிற்றூர்தியிலும் வடமராட்சியில் பயணச்சீட்டு

வடமராட்சி தனியார் சிற்றூர்தி சேவை சங்கத்தின் கீழ் இயங்கும் தனியார் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகள் தாங்கள் இறங்கும் இடத்தைக் குறிப்பிட்டுப் பணத்தை அந்தந்த பேருந்து நடத்துனரிடம் செலுத்தி அதற்கான பயணச்சிட்டை பெற்றுக்கொள்ளுமாறு வடமராட்சி தனியார் சிற்றூர்தி சேவை சங்க தலைவர் அ.அன்ரன் தெரிவிததுள்ளார்.

தனியார் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் பிரச்சினை தொடர்பாக எமது செய்தியாளர் தொடர்புகொண்டு கேட்டபோது அவா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலத்தில் பயணச்சீட்டு நடைமுறை இருந்தாலும் செயற்படுத்த வேணடிய அவசியம் தேவையில்லை. ஆனாலும் இன்று எமது மக்கள் பயணத்தின்போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். ஆகவேதான் தனியார் பேருந்துகளில் பயணச்சீட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இப்பயணச்சீட்டின் இலக்கம் மற்றும் பயணச்சீட்டு பயன்படுத்தப்படும் அந்தப் பேருந்துகளின் இலக்கம் போன்றவை உள்ளடங்கலாக எமது சங்கத்தினால தேவையான சீட்டுக்கள் அடித்துக் கொடுக்கப்படுகின்றது.

எனவே பொதுமக்கள் இதனைக் கவனமாக வைத்து திடீர் பரிசோதனையின் போது நடத்துநர் சாரதி போன்றவர்களால் பிரச்சினை வரும் போதும் இதனை உரியவர்களிடமோ. சங்கத்திடமோ காண்பிக்க வேண்டும் எனவே இதுபோன்ற அதாவது பயணத்தின்போது ஏற்படுகின்ற பிரச்சினை தொடர்பாக கவனமாக இருப்பதுடன் எமது சங்கத்திற்கும் அறிவக்கும் பட்சத்தில் நடத்துனர் மற்றும் சாரதிகளுக்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பை நாடிநிற்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (116)

# நல்லின விருத்திக்காக யமுனா பாறி ஆட்டுக்கடா

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை கால்நடை வைத்தியத் திணைக்களத்தினால் இனவிருத்திக்காக நல்லின யமுனா பாறி இன ஆட்டுக்கடா விடப்படவுள்ளது. எனவே சிவப்பு, கறுப்பு நிறத்தில் உள்ள ஆட்டுக்கடா வைத்திருப்பவர்கள் பருத்தித்துறை கால்நடை வைத்திய அலுவலகத்தில் பதிவு செய்யுமாறும், மேற்படி இன ஆட்டுக்கடா பண்ணையாளர்கள் பதிவுசெய்யப்பட்டு வவுனியா, பேராதனை ஆகிய மாவட்டங்களுக்கு அனுப்பவுள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் 5 ஆடுகளுக்கு மேல் வளர்க்கும் பண்ணையாளர்களுக்கு 50 வீத மானிய அடிப்படையிலான ஆட்டுக்கொட்டகை வழங்கப்படவுள்ளது. இதில் 20 ஆயிரம் ரூபா திணைக்களத்தினாலும், ஏனைய செலவுகள் பயனாளிகளின் ஒத்துழைப்புடன் வழங்கப்படவுள்ளது. எனவே இதற்கான பதிவுகளையும், கால்நடைத் திணைக்களத்தில் மிக விரைவாகப் பதிவுசெய்யும்படி கால்நடைத் திணைக்கள் வைத்திய அதிகாரி டாக்டர் யூலியானா தெரிவித்துள்ளார். (116)

# கட்டாக்காலி நாய்களால் மாணவர்கள் அவதி

(வரணி)

வடவரணிப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் பாடசாலை செல்லும் சிறுவர்களை, பெற்றோர் கூட்டிச் செல்வதும் பின் கூட்டி வருவதும் தொடர்ந்த வண்ணமுள்ளது.

எனவே நாய் வளர்ப்போர் தமது நாய்களை பகலில் கட்டி வளர்த்து ஒத்துழைப்பு வழங்குமாறும், வீதியோரம் உரிமை கோராத நாய்களை சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுதது கட்டுப்படுத்த வேண்டுமென வும் பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (150)





இலங்கையின் தேசிய சமதானப் பேரவை ஏற்பாடு செய்த வடமாகாண சர்வமத மாநாடு கடந்த வியாழக்கிழமை மன்னாரில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி.வண.இராயப்பு ஜோசப் ஆண்டகை உரைநிகழ்த்துவதையும், இதில் வடமாகாணத்தில் போரினால் கைவிடப்பட்ட பெண்கள், சிறுவர்கள் சம்பந்தமான மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பதற்கு மன்னார் ஆயரிடம் கையளிப்பதையும் காணலாம். (21)

# மருத்துவர்களின் உளச் சிகிச்சையே மிகச் சிறந்த சிகிச்சையாகும்

(யாழ்.நிருபர்)

சிகிச்சைகளுக்கெல்லாம் தலையாய சிகிச்சை உளச்சிகிச்சை. எமது நாட்டின் மருத்துவர்கள் நோயாளர்களுடனும் பேசுவதற்கு அவகாசம் இல்லை.

உங்களை நம்பி வரும் நோயாளிகளுடன் கொஞ்சம் அன்பாகப் பேசி ஆதரவாக நடந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு செவிப்புலனற்றோருக்கும் வைத்தியத் துறையினருக்குமான தொடர்பாடலை இலகுவாக்கும் வழிகாட்டி நூல் வெளியீட்டு விழாவில் ஆய்வுரை நிகழ்த்திய பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் கவிஞர் அதிபர் சோ.பத்மநாதன் குறிப்பிட்டார்.

யாழ்.வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத் தலைவர் சமுதாய நலத்துறை வைத்தியர் டாக்டர் என்.சிவராஜா தலைமையில் யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை மாலை இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில், மனிதன் கண்டுபிடித்த அனைத்துச் சாதனங்களிலும் மகத்தானது மொழியாகும். மொழியைப் பயன்படுத்த முடியாதவர்கள் கருத்துத் தொடர்பாடலை மேற்கொள்ளுவதற்கு ‘உடல் மொழி’ பயன்படுகின்றது. ஆனால் இது மொழியைப் பயன்பாட்டின் பிரதியீடு அல்ல. செவிப்புலனற்றோரும் வாய் பேச. முடியாதவர்களும் தமது தொடர்பாடலுக்கு உடல் மொழியை (Body Lanugage) பயன்படுத்துகின்றார்கள்.


உடல் மொழியானது நாட்டுக்கு நாடு மொழிக்கு மொழி வேறுபடுகின்றது. மேலைத்தேய நாடுகளில் வைத்தியர்கள் நோயாளிகளுடன் நீண்ட நேரம் அன்பாக ஆதரவாகப் பேசுகின்றார்கள். அவர்களது உளச் சிகிச்சை மூலமே அரைப்பங்கு நோய் குணமாகிவிடுகிறது.

எமது நாட்டில் நோயாளிகளுடன் கதைப்பதற்கு கூட வைத்தியர்களுக்கு அவகாசம் இருப்பதில்லை. தயவு செய்து எங்கள் நாட்டு வைத்தியர்கள் தம்மை நாடிவரும் நம்பி வரும் நோயாளர்களுடன் அன்பாக ஆதரவாகப் பேச வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

மாற்று வலுவுடையோரின் தொடர்பாடலை விளங்கிக் கொள்ள இன்று வெளியிடப்படும் நூல் பெரிதும் உதவும் என்றும், இது ஒரு நூல் ஆரம்பம் என்றும் பயனுள்ள முயற்சி என்றும் குறிப்பிட்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பவானி பசுபதிராஜா, டாக்டர் ந.சிவராஜா, எஸ்.கோபாலகிருஸ்ணன் உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர்.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் நூலை வெளியிட்டு வைக்க டாக்டர் கமலா அருணாச்சலம் நூலின் முதல்பிரதியைப் பெற்றுக் கொண்டார். வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்க உதவி செயலாளர் செ.நிர்மலகுமாரி நன்றி நவின்றார். (10)



அண்மையில் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் அப்பர் சுவாமிகள் குருபூசை விழாவில் செல்வி கஜப்பிரியா புவிராஜசிங்கம் மங்கள விளக்கேற்றலுக்கு ஆயத்தமாவதை படத்தில் காணலாம்.

## இடிந்து விழும் நிலையில் முள்ளி மயான மடம்

(வரணி)

வரணி முள்ளி ஐயன்கண்டி மயானம் நீண்ட காலமாக திருத்தப்படாததால் பற்றைக்காடாகவும் கழிவுப் பொருட்கள் வீசும் இடமாகவும் காட்சியளிக்கின்றது.

அண்மையில் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து பற்றைகளை வெட்டி துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டனர். இம்மயானத்தில் தற்போது உடல்கள் தகனம் செய்ய செல்வோர் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இந்த மயானத்தில் 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட மடம் விழும் நிலையில் காணப்படுகிறது. இந்த இறுதியான உறைவிடத்தை மிகவும் நேர்த்தியான முறையில் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நலன்விரும்பிகள் கேட்டுக் கொள்கின்றனர். (150)

## முட்டையின் விலை வீழ்ச்சி; பண்ணையாளர்கள் பரிதவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் முட்டைகளின் விலை சரிந்தையடுத்து கோழி வளர்ப்பில் ஈடுபடுவோர் பெரிதும் பாதிக்கப் பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

வாழ்வாதார எழிச்சித்திட்டத்தின் கீழ் மீள் குடியேறிய மக்களில் கோழி வளர்ப்புப் பயனாளிகள் இதனால் பெரிதும் நெருக்கடி நிலைக்கு ஆளாகியிருப்பதாகவும், வருமானமின்றி சிரமப்படுவதாகவும் தெரியவருகின்றது.

இது தவிர சிறிய, பெரிய பண்ணைகளாக வைத்து நடத்துபவர்களும் முட்டையின் விலை வீழ்ச்சியையடுத்து பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், முட்டைகளின் விலை ஆகக் குறைந்தது 9 ரூபாவாக சரிந்ததையடுத்து நுகர்வோர் அதிகளவு முட்டைகளை வாங்கிச் செல்வதாகவும் தெரியவருகின்றது. (138)

## பாட்டியின் காலை பதம்பார்த்த நெல் மூடை

(யாழ்ப்பாணம்)

நெல் மூடை விழுந்து வயோதிபப் பெண்ணின் கால் முறிவடைந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கொக்குவில் பகுதியில் நேற்று முன்தினம் மதியம் 3.30 மணிக்கு இவ்விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த நடேசு குணமணி (வயது - 60) என்ற வயோதிபப் பெண்மணியே கால், பாதம் முறிவடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

## 40 ரூபா கத்தரிக்காய் 100 ரூபாவாக உயர்வு

(வரணி)

யாழ்.குடாநாட்டில் தற்போது சந்தைகளில் மரக்கறி வகைகள் விலையேற ஆரம்பித்துள்ளன. கடந்த சில நாட்களாக 40 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட கத்தரிக்காய் 100 ரூபா வரை விலையேறியுள்ளது.

இதேபோல ஏனைய மரக்கறிவகைகளும் விலையுயர்வு அடைந்துள்ளன. இனிவரும் மாதங்களில் ஆலய உற்சவங்கள் தொடர்வதால் மரக்கறி வகைகள் இன்னும் விலையுயர்வு அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (150)

## முரசின் இன்றைய பலன்

(13.05.2012 - ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் சித்திரை மாதம் 31 ஆம் திகதி. அட்டமி முன்னிரவு 8.40 வரை.
நட்சத்திரம் அவிட்டம் மரணயோகம் முன்னிரவு 11.24 வரை. அட்டமி நவமி
இராகுகாலம் 4.23 - 5.53 வரை. சுபநேரம் 8.53 - 10.23 வரை.
எமகண்டம் 11.53 - 12.03 வரை. குளிகைகாலம் 2.53 - 4.23 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சகோதரர் உதவுவார், பொறுப்புக்கள் அதிகரிக்கும், மருந்துகள் பாவிப்பதில் எச்சரிக்கை. |
| ரிஷபம் | தொழிலில் தேர்ச்சி, பாகப்பிரிவினை முடிவுக்கு வரும், அரசமான்யம் கிடைக்கும் |
| மிதுனம் | முன்தினம் போல் கவனம் தேவை, பெற்றோர்கள் உதவி, கல்விச் செலவுகள் அதிகரிக்கும். |
| கடகம் | பயணம் தவிர்க்கவும், புத்திரரால் செலவுகள், குடும்பத்தில் ஏட்டிக்குப் போட்டி. |
| சிம்மம் | மன மகிழ்ச்சி, பயண அனுகூலங்கள், பழிச்சொல் நீங்கி மன நிம்மதி, சுபகாரியங்கள். |
| கன்னி | வீண் அலைச்சல், பரிசும் பாராட்டும் கிடைக்கும், போக்குவரத்தில்கவனம், எதிர்பாராத தனலாபம், |
| துலாம் | பொருளாதாரத்தில் சிக்கல், இளைய சகோதரர் உதவி, மாமன் மைத்துனன் தொல்லை. |
| விருச்சிகம் | கீர்த்திகள் உண்டாகும், எதிர்பாராத இடமாற்ற அலைச்சல், உறவினரால் பிரச்சினை. |
| தனுசு | தொழில் விருத்தி, கௌரவமான பதவிகள், முயற்சிகள் வெற்றிபெறும், தாராள பணவரவு. |
| மகரம் | பகட்டு வாழ்க்கை, பழப்பழயாக பிரச்சினைகள் தீரும், உறவினர் உதவி, சொத்துக்களால்செலவு. |
| கும்பம் | சுபச்செலவுகள், சொத்துக்களால் முதலீடு, சகோதரவழியில் செலவுகள், எச்சரிக்கை. |
| மீனம் | நல்ல நாள், பிணைபோக வேண்டாம், மனைவியின் சேமிப்பு உதவும், வாக்குவாதம் தவிர். |

## வடலூர் பாடசாலைக்கு அதிபர் வெற்றிடம்

(வேலணை)

தீவகக்கல்வி வலயத்தில் யா/அனலைதீவு வடலூர் அ.த.க. வித்தியாலயத்தில் அதிபர் வெற்றிடம் ஏற்படவுள்ளது. இப்பதவிக்கு தீவகக்கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமும் விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்காதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, தரம் 2-I தரம் 2-II இனைச் சேர்ந்த தீவகக்கல்வி வலய ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களை தீவகக்கல்வி வலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்ப முடிவுத்திகதி 10.06.2012 ஆகும்.

## சிட்டிவேரம் கண்ணகைக்கு அன்னதான மண்டபம்

(வரணி)

வரணி அருள்மிகு சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் இதுவரை காலமும் அன்னதான மண்டபம் இல்லாததால் அடியார்கள் மரங்களின் கழ்தான் சமயல் செய்து அன்னதானம் வழங்கப்பட்டது. தற்போது ஆலய நிர்வாகத்தினால் அன்னதான மண்டப வேலைகள் துரித கதியில் நடைபெற்ற வண்ணமுள்ளன. அடுத்த மாதம ஆலய உற்சவம் இங்கு நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது. (150)

## கணித செயற்பாட்டு போட்டி முடிவுகள்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிற்கிடையே நடத்தப்பட்ட கணிதச் செயற்பாட்டுப் போட்டி முடிவுகள் வலயக் கல்விப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கணிதச் செயற்பாட்டு ஆக்கப் போட்டியில் பண்டத்தரிப்புப் பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி டிலக்ஷனா பரமசீலன் 1 ஆம் இடத்தையும் வசாவிளான் மத்திய பாடசாலை மாணவன் பேராதரன் சுகேதன் 2ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

இந்த கணிதச் செயற்பாட்டு ஆக்கப் போட்டியில் மேலும் 8 சிறப்பாக்கங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இணுவில் இந்துக் கல்லூரி மாணவன் புஸ்பராஜன் நிலவரசன், மல்லாகம் மகா வித்தியாலய மாணவன் ஜோன்சன் டியோன், உடுவில் மான்ஸ் மகா வித்தியாலய மாணவி ஆ.சங்கீதா, வசாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவன் அரிச்சந்திரன் சஞ்சீவ்குமார் மெமொறியல் பாடசாலை மாணவன் திபாகர, சுதுமலை சின்மைய பாரதி வித்தியாலய மாணவன் த.தஜீ வன், மயிலிட்டி வடக்கு கலை மகள் வித்தியாலய மாணவி யே.லட்சிகா, ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய மாணவன் த.தணிகன் ஆகியோரின் ஆக்கங்களே தெரிவு செய்யப் பட்டுள்ளன.

வலயமட்ட கணித ஆக்கப் போட்டியில் முதல் 2 இடங்களையும் பெற்ற மாணவர்கள் மாகாணமட்டப் போட்டியில் பங்கு பற்றும் தகுதியினைப் பெற்றுள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (06)

## கொலை வெறியை மிஞ்சும்

(கொல்கத்தா)

கங்குலியின் சாதனைகள் தொடர்பான வீடியோவை இன்டர்நெட்டில் இலட்சக்கணக்கானோர் பார்த்துள்ளனர். இதன் 'ஹிட் ரேட்' கொலை வெறிப் பாடலை மிஞ்சும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அணியின் வெற்றிக் கப்டனாக விளங்கியவர் கங்குலி. கடந்த 2008இல் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வை அறிவித்த இவரை, தனியார் இன்சூரன்ஸ் நிறுவனம் ஒன்று மூன்று ஆண்டுகளுக்கு விளம்பர தூதுவராக ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த நிறுவனம், சௌரவ் கங்குலி – தி மூவி என்ற பெயரில் ஒரு குறும்படம் தயாரிக்க முடிவு செய்தது. இதில் கங்குலியின் வாழ்க்கை, தலைமைப் பண்பு, சாதனைகள், கிரிக்கெட்டில் சந்தித்த ஏற்ற, தாழ்வுகள் உள்ளிட்ட பல்வேறு சுவையான தகவல்கள் இடம் பெற உள்ளன. இதற்கான மூன்று நிமிடங்கள் கொண்ட டிரைலர் சமீபத்தில் இன்டர்நெட்டில் வெளியிடப்பட்டது.

பொலிவுட் ஸ்டைலில் உருவாக்கப்பட்ட இந்த டிரைலருக்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இதுவரை மூன்று இலட்சத்திற்கும் அதிகமான ரசிகர்கள் இந்த வீடியோவை கண்டு ரசித்துள்ளனர்.

# நானே தலைவன்



(புனே)

புனே வாரியர்ஸ் அணியின் கப்டனாக நானே நீடிக்கிறேன். இந்த சீசன் முடியும் வரை நான்தான் கப்டன். அதில் எந்தமாற்றமும் இல்லையெனகங்குலிதெரிவித்துள்ளார்.

புனே வாரியர்ஸ் அணியின் கப்டன் பொறுப்பில் இருந்து கங்குலி விலகி, இனி பயிற்சியாளராக மட்டும் செயற்படஉள்ளதாகவும் அந்த அணிக்கு எஞ்சியுள்ள 3 லீக் ஆட்டங்களிலும் அவருக்கு பதிலாக இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும் என்றும் தகவல் வெளியானது. இந்தத் தகவல் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மீதமுள்ள லீக் ஆட்டங்களிலும் விளையாடுவேன். சில போட்டிகளில் சிறப்பாக விளையாடிய நிலையில், சில போட்டிகளில் தடுமாறியது உண்மைதான். ருவென்ரி 20 போட்டிகளில் இது சகஜம். பல முன்னணி வீரர்கள் கூட இம்முறை ஓட்டம் குவிக்க முடியாமல் திணறுகின்றனர். ஆனால், என்னை மட்டுமே எல்லோரும் விமர்சிக்கின்றனர்.

கடந்த 15 ஆண்டுகளாகவே இது வாடிக்கை ஆகிவிட்டது. அணியில் 4 வெளிநாட்டு வீரர்களே இடம் பெறமுடியும் என்ற கட்டாயத்தால்தான், கப்டனாக இருக்கும் விட்டோரி, சங்கக்கரா அணியில் இடம் பெறாமல் மற்றவர்களுக்கு வாய்ப்பு கொடுத்தார்கள். எனக்கு அது பொருந்தாது எனத் தெரிவித்தனர்.

## சுற்றுலாச் செலவு

இலங்கையின் முன்னணி பட்மின்ரன் விளையாட்டு வீரரான நிலுக்க கருணாரத்னவுக்கு விமான டிக்கட் உட்பட மற்றும் செலவுகளுக்காக 1 கோடி 3 இலட்சத்து 92,000 ரூபா செலவிடப்பட்டுள்ளதாக விளையாட்டுத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒலிம்பிக்கில் வெற்றி கொள்வதற்காக நடைபெற்றுள்ள விளையாட்டுப் போட்டி சுற்றுலாக்களுக்காகவே இந்தப் பணம் செலவிடப்பட்டுள்ளது.

இவ்வருடம் பெப்ரவரி மாதத்தில் இருந்து விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே விளையாட்டு நிதியத்தில் இருந்து மாதாந்தம் 50,000 ரூபா கொடுப்பனவு வழங்கி வந்துள்ளார். எதிர்காலத்திலும் இவரின் விளையாட்டுத்துறை மேம்பாட்டுக்காக தேவையான வசதிகள் அமைச்சினால் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒலிம்பிக் இலங்கையிலும் ஒளிபரப்பு

(கொழும்பு)

லண்டன் ஒலிம்பிக் விழாவை இலங்கையில் ஒளிபரப்பும் உரிமை எம்.டி.வி.'. எம்.பி.சி ஊடக வலையமைப்புக்கு கிடைத்துள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளை சகலரும் அறிந்துகொள்ளும் பொருட்டு எம்.டி.வி.'. எம்.பி.சி ஊடக வலையமைப்பு வழங்கும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டார்.

ஒலிம்பிக் விழாவில் பங்கேற்க தற்போதே இலங்கை தயாராகவுள்ளதாக குறிப்பிட்ட அவர் இலங்கை சார்பாக தற்போது மூன்று வீரர்கள் ஒலிம்பிக் விழாவில் போட்டியிடத் தகுதி பெற்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் நாட்களில் மேலும் சில வீர, வீராங்கனைகள் இலங்கை சார்பாக போட்டிகளில் பங்கேற்கத் தகுதிபெறுவார்கள் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சிரசதொலைக்காட்சி ஒலிம்பிக்போட்டிகளை ஒளிபரப்பத் தயாராக உள்ளது. இந்தப் போட்டிகளையும் ஏனையபோட்டிகளையும் சகலரும் அறிந்துகொள்ள உங்கள் நிறுவனம் வழங்கும் ஒத்துழைப்புக்கு விசேடமாக நாம் நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## காயமே உனக்கு நன்றி

(சிட்னி)

எனக்கு ஏற்பட்ட காயமே என் கிரிக்கெட் வாழ்க்கையை காப்பாற்றியது என அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சல் மிஞ்சல் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

6 மாத இடைவெளிக்குப் பின்னர் விரைவில் தொடங்கவுள்ள அயர்லாந்து மற்றும் இங்கிலாந்துக்கு. எதிரான ஒரு நாள் தொடருக்கான அவுஸ்ரேலிய அணியில் இடம் பிடித்தது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தென்னாபிரிக்காவுக்கு எதிராக ஜோகனஸ்பர்க்கில் நடந்த 2ஆவது டெஸ்டின் போது, என்னால் சிறப்பாக செயற்பட முடியுமா? என்பதில் எனக்கே நம்பிக்கை இல்லை. இதனால் போட்டியில் இருந்து விலகி விட்டு, சிறிது காலம் கழித்து திரும்பலாம் என்று விரும்பினேன். அந்த நேரத்தில் தான் எனக்கு காயம் ஏற்பட்டது. ஏனெனில் அப்போது எனக்கு கிரிக்கெட் விளையாடும் ஆர்வமும் குறைந்திருந்தது. ஒரு வேளை நான் காயம் அடையாமல் இருந்திருந்தால், தொடர்ந்து மோசமாக விளையாடியிருப்பேன். பிறகு அணியில் இருந்து நீக்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக ஓய்வு முடிவுக்கும் வந்திருப்பேன் எனத் தெரிவித்தார்.

## தொடரும் புனேயின் சோகம்

(புனே)

இந்தியன் பிறிமியர் லீக் ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற புனே வொரியர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 35 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிறிஸ் கெய்ல் 31 பந்துகளில் 57 ஓட்டங்களைப் பெற்றதுடன் திலகரத்ன டில்சான் 53 ஓட்டங்களைப் பெற்றார்.பந்து வீச்சில் அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் ராகுல் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 174 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய புனே வாரியர்ஸ் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது.

இதில் ரொபின் உத்தப்பா 38 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் வினாய் குமார் 3 விக்கெட்டுக்களையும் முத்தையா முரளிதரன் மற்றும் சகீர்கான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக் கிறிஸ் கெய்ல் தெரிவு செய்யப்பட்டார்.

## கெய்லுக்கு அழைப்பு

(போர்ட் ஆப் ஸ்பெயின்)

மேற்கிந்தியத்தீவுகள் அணியில் மீண்டும் பங்கேற்பது குறித்து பேச வருமாறு கிறிஸ் கெய்லுக்கு அந்த நாட்டு கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்துள்ளது.

முன்னதாக கடந்த ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி குறித்து கெய்ல் அளித்த பேட்டியால், அவருக்கும், மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபைக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது. இதனால் அந்த நாட்டு அணியில் கடந்த ஓராண்டுக்கு மேலாக இடம் பெறவில்லை. இப்போது ஐ.பி.எல். போட்டியில் கெய்ல் சிறப்பாக விளையாடி வருகிறார். இந்நிலையில் அவரைமீண்டும்தேசிய அணியில் சேர்த்துக் கொள்ள விரும்பும் மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபை இது தொடர்பாக பேச அழைப்பு விடுத்துள்ளது.

## முன்னணி வீரர்கள் அதிர்ச்சித் தோல்வி



(மாட்ரிட்)

மாட்ரிட் ஓப்பன் ரெனிஸ் தொடரின் முன்னணி வீரர்களான ஜோகோவிச், நடால், மரிய ஷரபோவா ஆகியோர் அதிர்ச்சித் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியுள்ளனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில், உலகின் முதல் நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், சகநாட்டு வீரரான ஜோன்கோ டிப்சரேவிச்சை எதிர்கொண்டார். யாரும் எதிர்பாராத வகையில் ஜோகோவிச் இப்போட்டியில் 7-6 (7.'.2), 6-3 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வி அடைந்து, தொடரிலிருந்து வெளியேறினார். டிப்சரேவிச் அரையிறுதியில் பெடரரை எதிர்கொள்கிறார்.

மற்றுமொரு மூன்றாவது சுற்று ஆட்டத்தில் ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் சக நாட்டு வீரரான பெர்னாண்டோ வெர்டாஸ்கோவிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தார். இந்த ஆட்டத்தில் நடாலை 6-3, 3-6, 7-5 என்ற செட் கணக்கில் தோற்கடித்த பெர்னாண்டோ வெர்டாஸ்கோ அடுத்த சுற்றுத் தகுதி பெற்றுள்ளார். இதேவேளை, பெண்களுக்கான ஒற்றையர் காலிறுதிப் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 6,1, 6,3 என்ற நேர் செட்களில் மரியா ஷரபோவாவை (ரஷ்யா) வென்றார்.

## சிறந்த பயிற்சி

கட்டார் டயமன் லீக் மெய்வல்லுநர் போட்டிகள் லண்டன் ஒலிம்பிக் விழாவுக்கு சிறந்த முன்னோடி பயிற்சியாக அமையுமென ஜமெய்க்கா குறுந்தூர ஓட்ட வீரரான அசபா பவெல் கூறுகின்றார்.

டயமன் லீக் மெய்வல்லுநர் போட்டிகளில் 100 மீற்றர் பிரிவில் திறமை வாய்ந்த பல வீரர்கள் பங்கேற்கவுள்ளனர்.

100 மீற்றர் ஓட்டத்தில் முன்னாள் உலக சம்பியனான அசபா பவெல், டோஹாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் டயமன் லீக் மெய்வல்லுநர் போட்டிகள் தொடர்பாக கருத்து வெளியிட்டார்.

உலக சம்பியனான உசேன் போல்ட் இந்தப் போட்டியில் பங்கேற்றாலும், தமது ஆற்றல்களை மேம்படுத்திக்கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தவுள்ளதாக அசபா பவெல் தெரி விக்கின்றார்.

29 வயதுடைய அசபா பவெல் 2005 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 2008 மே மாதம் வரை 100 மீற்றர் உலக சாதனையை தம்வசம் வைத்திருந்தார்.

எனினும் அதன் பின்னர் மற்றுமொரு ஜமெய்க்க வீரரான உசேன் போல்ட் அந்த சாதனையை தம்வசப்படுத்திக்கொண்டு இதுவரை உலக சாதனையாளராக திகழ்கின்றார்.

## பயம் இல்லை

சம்பியன்ஸ் லீக் இறுதிப்போட்டியில் பங்குபற்றுவது குறித்து செல்சி கழகத்திற்கு எந்தவிதப் பயங்களும் கிடையாது என செல்சியின் பயிற்றுவிப்பாளர் ரொபேர்ட்டோ டை மற்றியோ தெரிவித்துள்ளார். அரையிறுதிப்போட்டியில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட பார்சிலோனா கழகத்தை வெற்றிகொண்டதன் பின்னரே எந்த அணியையும் வெற்றிகொள்ள முடியும் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது. பார்சிலோனா கழகத்தை அரையிறுதிப் போட்டிகளின் இரண்டு போட்டிகளூடாக வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற முடியுமானால், உலகிலுள்ள அணிகள் அனைத்தையும் வெற்றிபெற முடியும் என அவர் தெரிவித்தார்.

## பயிற்சியாளர் இராஜினாமா

(சிட்னி)

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் பந்து வீச்சு பயிற்சியாளராக கடந்த ஒரு ஆண்டுகளாக இருந்து வந்த முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் கிரேக் மெக்டெர்மோட் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். அவுஸ்ரேலிய அணியின் வெளிநாட்டுப் பயணம் அதிகமாக இருப்பதால் தன்னால் அணியினருடன் செல்ல முடியாத நிலை இருக்கிறது. எனவே பந்து வீச்சு பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து கிரேக் மெக்டெர்மோட் விடுத்துள்ள செய்திக்குறிப்பில், அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் பந்து வீச்சு பயிற்சியாளர் பதவியில் இருந்து விலக எடுத்த முடிவு கடினமானது. நான் இந்த பணியில் தொடக்கம் முதலே முழுமையாக அனுபவித்து ஈடுபட்டு வந்தேன். அணியின் போட்டிகள் அதிகம் இருப்பதால் தனிப்பட்ட முறையிலும் தொழில் ரீதியாகவும் நான் எடுத்த விலகல் முடிவு சரியானது என்று தெரிவித்துள்ளார்.

## புதிய தலைவராக டேவ் ரிச்சட்ஸன்

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக சர்வதேசக் கிரிக்கெட் சபையின் தற்போதைய பொது முகாமையாளரான டேவ் ரிச் சட்ஸன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தற்போதைய பிரதம நிறைவேற்று அதிகாரியான ஹரூன்லோகார்ட்டின் பதவிக்காலம் நிறைவடையவுள்ளதை அடுத்தே புதிய பிரதம நிறைவேற்று அதிகாரி தெரிவு செய்யப்பட்டுள்ளார். மும்பையில் இடம்பெற்று வந்த சர்தேசக் கிரிக்கெட் சபையின் தேர்வுக் குழு கலந்துரையாடல்களை அடுத்தே டேவ் ரிச்சட்ஸன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள டேவ் ரிச்சட்ஸனின் பெயர் எதிர்வரும் ஜூன் மாதத்தில் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் வருடாந்த மாநாட்டில் பரிந்துரைக்கப்படும். அங்கு வைத்து புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியாக டேவ் ரிச்சட்ஸன் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுவார்.

டேவ் ரிச்சட்ஸனுக்கு போட்டியாகக் காணப்படுவார் எனக் கருதப்பட்ட இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி டேவிட் கொலியரை டேவ் ரிச்சட்ஸன் தனது அனுபவம் காரணமாக தோற்கடித்துள்ளார்.

# 19 வயது கால்பந்தாட்டம் சம்பியனானது பற்றிக்ஸ்



(படப்பிடிப்பு : சுரேஷ்)

(பருத்தித்துறை)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கால்பந்துத் தொடரின் 19 வயதுப் பிரிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனானது.

இப்போட்டித் தொடரின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் கடந்த 10ஆம் திகதி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும், மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதின.


இரு அணிகளுமே ஆரம்பம் முதல் சிறப்பான முறையில் ஆடியது. இருப்பினும் இறுதியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி அணியும், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும் மோதின. இப்போட்டியில் ஆரம்பம் முதல் மிக விறுவிறுப்பாக நடைபெற்றது. சிறப்பான முறையில் விளையாடிய சென். அன்ரனீஸ் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும், ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி அணியும் மோதின.

போட்டியின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி முற்பாதி ஆட்டத்தில் 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

பிற்பாதி ஆட்டம் தொடங்கி மிக விறுவிறுப்பாக இடம்பெற்றவேளையிலும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்களின் சிறப்பான ஆட்டத்திற்கு முன்னாள் ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ் கல்லூரி அணியால் ஈடுகொடுத்து விளையாட முடியவில்லை. இறுதியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மாவட்ட சம்பியனானது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும், மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (20)



## விளையாட்டை மேம்படுத்த வடக்கிற்கு நிதியுதவி

வடக்கு மாகாண விளையாட்டு அபிவிருத்தியை மேம்படுத்தும் முகமாக அவுஸ்ரேலிய விளையாட்டு அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் எச்.ஈ. ரொபின் முடி, அரசசார்பற்ற நிறுவனமான சோஆ அகதிகள் பராமரிப்பு நிறுவனத்திடம் ரூபா 2,287,166 பெறுமதியான காசோலையை, அந்நிறுவனத்தின் தலைவர் ஜெரார்ட் சீவிட்டிடம் கையளித்தார்.

அவுஸ்ரேலிய விளையாட்டு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்நிதி இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலுள்ள கிராமங்களில் செயற்படும் விளையாட்டு கழகங்கள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் அதிகரித்த விளையாட்டுச் செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படும். இதன் மூலம் 1,400 இளைஞர்கள் நன்மை அடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிதி விரைவில் உரிய மாவட்டங்களுக்கு பகிரிந்தளிக்கப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

விளையாட்டு செய்திகள்

# வவுனியா மாவட்ட கால்பந்தாட்டம் பூம்புகாரை வீழ்த்திய கனகராயன்குளம்



(வவுனியா)

வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியில் நடப்புச் சம்பியனான வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயத்தை வீழ்த்தி கனகராயன்குளம் மகாவித்தியாலயம் சம்பியனானது.

இப்போட்டி புதுக்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் செட்டிகுளம் மகாவித்தியாலய அணியும் கனகராயன்குளம் மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி கனகராயன்குளம் மகாவித்தியாலய அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் பூம்புகார் கண்ணகி வித்தியாலய அணியும், தரணிக்குளம் கணேஷ் வித்தியாலய அணியும் மோதின. இதில் போட்டியின் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய பூம்புகார் கண்ணகி வித்தியாலய அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் கனகராயன்குளம் மகாவித்தியாலய அணியும், பூம்புகார் கண்ணகி அணியும் மோதின. இரு அணிகளும் பலமான அணி என்பதால் இப்போட்டி மிகவும் விறுவிறுப்பான முறையில் இடம்பெறும் என பார்வையாளர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு நிலவியது.

ஆட்டம் ஆரம்பமாகி மூன்றாவது நிமிடத்தில் கனகராயன்குளம் மகாவித்தியாலய அணி கோல் ஒன்றை பெற்றுக் கொள்ள முற்பட்டது. ஆனாலும் பூம்புகார் கண்ணகி வித்தியாலய கோல் காப்பாளரின் சாதுரியமான ஆட்டத்தால் அது தடுக்கப்பட்டது. முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வரும்வரை கனகராயன்குளம் மகாவித்தியாலய அணியின் ஆட்டம் மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்றது.

பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி இரு அணிகளுமே கோல் அடிக்கும் முயற்சியை தீவிரப்படுத்தியபோதும் இரு அணிகளின் பிற்கள வீரர்களின் சாதுரியமான ஆட்டத்தால் அது தடுத்து நிறுத்தப்பட்டது.

இறுதியில் பிற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளையும் இரு அணிகளாலும் கோல் எதனையும் போட முடியவில்லை.

இந்நிலையில் தண்ட உதை மூலம் வெற்றிதோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 4-3 என்ற கோல் கணக்கில் கனகராயன்குளம் மகாவித்தியாலயம் வெற்றிபெற்று மாவட்ட சம்பியனானது.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான போட்டியில் தரணிக்குளம் கணேஷ் வித்தியாலயத்தை வீழ்த்திய செட்டிகுளம் மகாவித்தியாலய அணி மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (93, 12)

## கொக்குவில் இந்துவில் நாளை கரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கரம் போட்டி நாளையும், நாளை மறுதினமும் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வயது அடிப்படையில் இடம்பெறவுள்ள இப்போட்டி ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் நடைபெறவுள்ளது.

இதில் 15 மற்றும் 19 வயதுப் பிரிவு வீர, வீராங்கனைகளுக்கிடையில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் வலய மட்டத்திற்கு வெற்றிபெற்று தெரிவாகியுள்ள வீர, வீராங்கனைகளைக் குறித்த நேரத்திற்கு வருகை தந்து போட்டியை சிறப்பான முறையில் நடத்தி முடிக்க ஒத்துழைப்பு தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

இதேவேளை, இப்போட்டியில் வெற்றியீட்டுவோர் மாகாண மட்டப் போட்டிக்கு தகுதி பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது. (12)

# மாவையின் 'மன்னிப்பு'க்குப் பின்னால் 2 நோக்கங்கள்

யாழ்ப்பாண மேதின மேடையில் சம்பந்தன் ரணிலோடு சேர்ந்து சிங்கக் கொடியை உயர்த்திப் பிடித்த நிகழ்வு இன்னும் 'சூடு தணியாத' விவகாரமாக இருக்கின்றது. இலங்கையிலிருந்தும் இலங்கைக்கு வெளியிலிருந்தும் கண்டனங்கள் வருகின்றன. மாவை சேனாதிராசா தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்டிருக்கிறார்.

சிங்கக் கொடி தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அவமானச் சின்னம் என்பதால் அதற்கு மதிப்பளிப்பது துரோகச் செயல் என்று சேனாதிராசா போன்றவர்கள் கூறுகின்றார்கள். கடந்த கால சம்பவங்களைத் தலைவர்கள் மறப்பதில்லை. ஆனால் மக்கள் மறந்திருப்பார்கள் என்ற நினைப்பில் பேசுகின்றார்கள்.

1966ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று (பெப்ரவரி-4) யாழ்ப்பாணத்தில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் சிங்கக் கொடியை ஏற்றிச் சுதந்திர தினக் கொண்டாட்டத்தை ஆரம்பித்து வைத்ததாக T.D.S.A திசாநாயக தனது நூலொன்றில் கூறியிருக்கின்றார்.

இதேபோல், மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிங்கக் கொடியை ஏற்றிச் சுதந்திர தினக் கொண்டாட்டத்தை ஆரம்பித்து வைத்ததாகவும் அந்த நூலில் அவர் கூறுகின்றார். அது "தந்ததென் தன்னைக் கொண்ட துன் தன்னை"எனக் கூறித் தமிழரசுக்கட்சி ஐக்கிய தேசியக்கட்சியுடன் சங்கமித்திருந்தகாலம்.

தமிழரசுக் கட்சி வழிவந்த தலைவர்களின் வீர வசனங்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடனான இரகசிய உறவுக்குள் மறைந்து போவது வழமையானது. ஐக்கிய தேசியக் கட்சியைத் திருப்திப்படுத்துவதற்காக ஒன்றைச் செய்வதும் பின்னர் மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக வேறு தொனியில் பேசுவதும் இவர்களுக்குக் கைவந்த கலை.

மாவட்ட சபை வழங்கப்படும் என்ற உறுதி மொழியின் அடிப்படையில் 1965ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் இணைந்தார்கள். திருச்செல்வம் கபினற் அமைச்சராகப் பதவியேற்றார். 1968 மே மாதம் டட்லி சேனநாயக இவர்களை அழைத்து மாவட்ட சபை தருவது சாத்தியமில்லை எனக் கூறியதும் அதை ஏற்றுக் கொண்டு தொடர்ந்தும் அரசாங்கத்தில் இருந்தார்கள். கோணேஸ்வர ஆலய விவகாரத்தைக் காட்டி 1969 ஏப்ரல் மாதத்தில் அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிரணி வரி சையில் இருந்த போதிலும் தொடர்ந்து அரசாங்கத்துக்கு ஆதரவளித்துவிட்டு, 1970 பொதுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் "ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இனப்பாகுபாடு காட்டியது" எனக் கூறி மக்களை ஏமாற்றினார்கள்.

எஸ். ஜே.வி. செல்வநாயகமும் மற்றவர்களும் 1966ஆம் ஆண்டு சிங்கக் கொடி ஏற்றியது ஐக்கிய தேசியக் கட்சியைத் திருப்திப்படுத்துவதற்காக. யாழ்ப்பாண. மேதின மேடையில் சம்பந்தன் சிங்கக் கொடியை உயர்த்திப் பிடித்ததும் ஐக்கிய தேசியக் கட்சியைத் திருப்திப்படுத்துவதற்காக.

> **இனப்பிரச்சினை தீர்வின்றிக் கொதி நிலையில் இருப்பதே இவர்களின் அரசியல் இருப்புக்கு உத்தரவாதம் என்பதால் நடைமுறைச் சாத்தியமான தீர்வு முயற்சிகளையெல்லாம் திட்டமிட்டுக் குழப்பி வந்திருக்கின்றார்கள்.**

**- சங்கர சிவன்**

மாவை சேனாதிராசா பகிரங்கமாக மக்களிடம் மன்னிப்புக் கேட்டதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று அரசியல் தீர்வுக்கு எதிரான உணர்வலையை மக்களிடம் வளர்ப்பது. மற்றது சம்பந்தனைத் தலைமையிலிருந்து அகற்றுவதற்கான தளச் செப்பனிடல். எதிர்பாராத விதமாகச் சிங்கக் கொடியைக் கையில் திணித்ததும் பதற்றமடைந்த சம்பந்தன் அக் கொடியை உயர்த்திப் பிடித்தார் எனக் கூறுவது சம்பந்தன் நிதானமாகச் சிந்தித்துச் செயற்படும் தன்மையை இழந்துவிட்டார் என்பதை வலியுறுத்துவதற்காகவே.

கிறிமினல் சட்டத்தரணியான சம்பந்தன் இதைச் சரியாக விளங்கிக் கொண்டார். அதனாலேயே, நன்றாகத் தெரிந்துகொண்டே சிங்கக் கொடியை உயர்த்திப் பிடித் ததாகவும் அதற்காக மன்னிப்புக்கேட்க வேண்டிய அவசியமில்லை என்றும் கூறினார்.

மக்களிடம் மன்னிப்புக் கேட்கத்தான் வேண்டும். அது சிங்கக் கொடியை ஏந்தியதற்காக அல்ல. ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து மேதினம் கொண்டாடியதற்காக.

தமிழ் மக்கள் ஒரு போதும் மறக்க முடியாத எத்தனையோ சம்பவங்கள் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக் காலத்தில் நடந்தன. யாழ்ப்பாண நூலக எரிப்பு, சிறைச் சாலைக்குள் தமிழ்க் கைதிகளின் கொலை, கறுப்பு ஜூலை இன சங்காரம் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். இந்தக் கொடுஞ்செயல்களுக்காகத் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்க விரும்பாத ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரை ஊர்வலமாக அழைத்துச் சென்று மேடையில் ஏற்றி அழகு காட்டியதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். ஆனால்,அதைச் செய்யமாட்டார்கள். ஏனென்றால் ஆட்டுவிக்கும் மேல்நாடுகளின் நிகழ்ச்சி நிரலில் அது இல்லை.

இந்தக் கூட்டு மேதினம் மேற்கு நாடுகளின் இரண்டாவது முயற்சி. இலங்கையில் ஆட்சி மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்காக மேற்கு நாடுகள் மேற்கொண்ட முதலாவது முயற்சி சரத் பொன்சேகாவைப் பொது ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கியது. எல்லாத் தரப்பினரின் வேட்பாளர் என்ற தோற்றத்தைக் கொடுப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அதில் இணைத்துக் கொண்டனர்.

இலங்கை சிங்களவர்களின் நாடு என்றும், சிங்களவர்கள் கொடுப்பதைப் பெற்றுக் கொண்டு சிறுபான்மையினர் பேசாமல் இருக்க வேண்டும் என்றும் இராணுவத் தளபதியாக இருந்தபோது கூறியவர் சரத் பொன்சேகா. வரிந்து கட்டிக் கொண்டு அவரை ஆதரிப்பதில் கூட்டமைப்பினருக்கு எவ்வித தயக்கமும் இருக்கவில்லை.

இப்போது ஆட்சி மாற்றத்துக்காக மேற்குலகின் இரண்டாவது முயற்சி. ரணிலின் தலைமையில் "பொது அணி" என்ற தோற்றத்தைக் கொடுப்பதற்கான ஆரம்ப நகர்வே யாழ்ப்பாணத்தில் கூட்டு மேதினம்.

விக்கிரமபாகுவும் இந்த அணிக்குள் வருகின்றார். அவர் புரட்சிகர இடது சாரித்துவத்தைக் கைவிட்டுவெகுகால மாகிவிட்டது. இப்போது மனோ கணேசனுடனும் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் கூட்டுச் சேரும் சந்தர்ப்பவாத அரசியல்.

இந்தப் 'பொது அணி'யின் பிரதான இரண்டு கட்சி களிடமும் இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்கான கொள்கையோ மூலோபாயமோ இல்லை. இவர்களை ஆட்டுவிக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இதைப்பற்றிய கவலை இல்லை. தமக்கு அடக்கமான அரசாங்க மொன்று அமைய வேண்டும் என்பதே அவற்றின் கவலை.

மேற்குலக நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுகின்ற அதேவேளை, ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வைத் தவிர்ப்பதற்கான நகர்வுகளையும் கூட்டமைப்பு வட்டாரங்களில் அவதானிக்க முடிகின்றது. தேசியக் கொடிக்கு எதிரான பிரசாரத்தின் உள்நோக்கம் இதுவே. தமிழ் மக்களைத் தவறாக வழிநடத்திச் சென்று மீண்டுமொரு முள்ளிவாய்க் கால் அவலத்துக்கு ஆயத்தமாகும் அரசியல் என்று இதைக் கூறலாம்.

ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு காண்பதைத் தவிர இனப்பிரச்சினையின் தீர்வுக்கு வேறு வழி இல்லை என்ற சமகால யதார்த்தத்தை இவர்கள் விளங்கிக்கொள்ள முடியாதவர்களல்ல. இனப்பிரச்சினை தீர்வின்றிக் கொதிநிலையில் இருப்பதே இவர்களின் அரசியல் இருப்புக்கு உத்தரவாதம் என்பதால் நடைமுறைச் சாத்தியமான தீர்வு முயற்சிகளையெல்லாம் திட்டமிட்டுக் குழப்பி வந்திருக்கின்றார்கள்.

அரை நூற்றாண்டுக்கு மேலாக இனப்பிரச்சினைதான் இந்தத் தமிழ்த் தலைவர்களை அரசியலில் வாழவைத்து வருகின்றது. இந்த "வாய்ப்பை" இழக்க இவர்கள் விரும்புவார்களா? தீர்வு முயற்சிகளைக் குழப்புவதற்கு இவர்களிடம் 'நொண்டிச் சாட்டுக்கள்' கைவசம் இருக்கின்றன.

எல்லோரையும் எல்லாக் காலங்களிலும் ஏமாற்ற முடியாது.



# தெரிவுக்குழுவுக்கு கூட்டமைப்பை அழைத்துவர முடியும்



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் கலந்துரையாடல்களில் கலந்துக் கொள்ள செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியினால் உதவ முடியும் என அதன் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் நேர்மையாகவும் நேரடியாகவும் செயற்பட்டு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த இணங்குமானால் எதிர்க்கட்சிகள் பொருத்தமான வேலைத்திட்டங்களின் கீழ் செயற்படும் கோரிக்கை விடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் அவ்வாறு செய்யுமானால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்கேற்கச் செய்வதற்கான உதவிகளை ஐக்கிய தேசியக் கட்சி வழங்கும் எனவும் அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். இதற்காக எதிர்க்கட்சிகளின் அனைத்து உதவிகளையும் பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

இதற்காக அரசாங்கம் நேர்மை மற்றும் நம்பிக்கையை பாதுகாக்கும் வகையில் செயற்பட வேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம் எனவும் அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

# தொலைபேசியால் தொல்லை

(கொழும்பு)

செல்லிடத் தொலைபேசி கொள்ளை தொடர்பாக நீதிமன்றில் ஆஜரான நபர் ஒருவரின் செல்லிடத் தொலைபேசி நீதிமன்ற அறையில் ஒலித்ததால் அவருக்கு 1500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கந்தப்பளையை சேர்ந்த நபர் ஒருவருக்கே நீதிமன்ற செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் நீதவான் கனிக விஜேரட்ன நேற்று வெள்ளிக்கிழமை இந்த அபராதத்தை விதித்தார்.

காலிமுகத் திடலில் 8 வயது சிறுவனொருவன் தனது பெற்றோருடன் நடந்து சென்றுகொண்டிருந்தபோது அச்சிறுவனிடமிருந்து 20,000 ரூபா பெறுமதியான செல்லிடத் தொலைபேசியை அபகரித்ததாக இந்நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

## 15.422 மில்லியன் ரூபா கடனை

# கோடீஸ்வர வர்த்தகர்கள் அரச வங்கிகளுக்கு செலுத்தவில்லை

(கொழும்பு)

அரச வங்கிகளிலிருந்து கடன் பெற்றுக் கொண்ட கோடிஸ்வர வர்த்தகர்கள் வங்கிக்கு 15.422 மில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளதாக நாடாளுமன்றத்தில் தகவல் வெளியிடப்பட்டது.

இதில் மக்கள் வங்கிக்கு 9.909 மில்லியன் ரூபா செலுத்தப்பட வேண்டியுள்ளது.

இலங்கை வங்கிக்கு 4.722 மில்லியன் ரூபாவும், இலங்கை அபிவிருத்தி வங்கிக்கு 811 மில்லியன் ரூபாவும் செலுத்தப்பட வேண்டியுள்ளதாக அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க முன்வைத்த பிரத்தியேக யோசனை விவாதத்தில் கலந்துகொண்டபோதே இந்தத் தகவலை அமைச்சர் வெளியிட்டார்.

100 மில்லியன் ரூபாவிற்கு மேல் அரச வங்கிகளிடமிருந்து கடன் பெற்றுக்கொண்டு அதனை மீளச் செலுத்தாதவர்களின் பெயர்களை வெளியிடுமாறு ரவி கருணாநாயக்க இதன்போது கோரிக்கை விடுத்தார். எனினும், இந்தக் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்தது.

ரவி கருணாநாயக்கவின் கோரிக்கைக்கு பதிலளித்த நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், வங்கி கொடுக்கல், வாங்கலில் உள்ள இரகசியத் தன்மையை பாதுகாக்க வேண்டியது கட்டாயம் என்பதால் பெயர் விபரங்களை வெளியிட முடியாது எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறான பாரிய மோசடிக்காரர்களை அரசாங்கம் பாதுகாத்துக்கொண்டு, சிறிய அடகு ஒன்றை மீட்டுக்கொள்ள முடியாத நடுத்தர மக்களை அரசாங்கம் மேலும் துன்பப்படுத்தக் கூடாது என ரவி கருணாநாயக்க எம்.பி. இதன்போது தெரிவித்தார்.

# மேர்வினின் ஆலோசனை

(கொழும்பு)

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பென்ஃய் சிலைகளை உபயோகப்படுத்துவதால் பொன், பொருள் உள்ளிட்ட அதிர்ஷ்டங்கள் வீடு வந்து சேரும் என்றும் அதற்கு தன்னை சிறந்த உதாரணமாகக் கொள்ளுமாறும் மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா கூறினார்.

பலாகல, பரவனகம பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள வீர கெப்பட்டிபொல சிலையைத் திறந்துவைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேர்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பௌத்த விவகார அமைச்சின் செயலாளர் கெஷியன் ஹேரத்தும் கலந்து கொண்டிருந்தார்.

பொதுமக்கள் மத்தியில் தனது பொன்னான இரகசியத்தை தெரிவித்துக்கொண்டிருந்த அமைச்சர் திடீரென பௌத்த விவகார அமைச்சின் செயலாளரைச் சுட்டிக் காட்டி, இதோ இந்த செயலாளரது மனைவிதான் இலங்கைக்கு பென்ஃய் சிலைகளை இறக்குமதி செய்கிறார் என்று கூறினார்.

அத்துடன் தானும் பென்ஃய் சிலைகளை வணங்கி வருவதாக தெரிவித்த அமைச்சர், அவற்றின் மீது உள்ள நம்பிக்கையின் காரணமாகவெ தங்க நகைகளையும் அணிந்துள்ளேன் என்றும் குறிப்பிட்டார்.

# மேன்முறையீட்டு மனு ஏற்பு

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவினால் சண்டே லீடர் பத்திரிகை நிறுவனத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மானநஷ்ட வழக்கை விசாரித்து வந்த நீதிபதியை மாற்றுவதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீட்டு மனு, உயர்நீதி மன்றத்தினால் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மேன்முறையீட்டு மனு மீதான தீர்ப்பு வரும்வரை இந்த மானநஷ்ட வழக்கு தொடர்பில் மாவட்ட நீதிமன்றின் சகல நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்கும்படி உயர்நீதிமன்றம் பணித்துள்ளது.


மேன்முறையீட்டாளராக சண்டேலீடர் சார்பில் எம்.ஏ.சுமந்திரனுடன் விரன் கொரயா, ஏமிஸா ரெகல், யுவானிற்றா அருளானந்தம் ஆகியோர் ஆஜராகினர். மனுதாரரான கோட்டபாய ராஜபக்ஷ சார்பில் அலி சப்ரி ஆஜரானார்.

# சர்வதேச கடற்படை பயிற்சிக் கல்லூரி இலங்கையில் அமைக்க ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

சர்வதேச தரத்திலான கடலோட்ட பயிற்சிக் கல்லூரி ஒன்றை இலங்கையில் அமைப்பதற்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளக் கூடிய அம்சங்களைக் கொண்ட கடலோட்ட பயிற்சி நிலையத்தை துரிதமாக இலங்கையில் ஸ்தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மகிநத ராஜபக்ஷ கப்பல் கூட்டுத் தாபனத்தின் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.



இந்த மத்திய நிலையம் அமைக்கப்பட்டதன் பின்னர், கப்பல்துறைக்கு தேவையான அனைத்து பிரிவுகளிலும் தொடர்புடைய தரப்பினர் உள்வாங்கப்படவுள்ளனர்.

பயிற்சி நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு பொறுப்பானவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளக் கூடிய கடலோட்ட பயிற்சி மத்திய நிலையத்தின் ஊடாக பாரிய அந்நிய செலாவணியைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எச்.ஐ.வி. தொற்றிக் கொள்வதை தடுத்து நிறுத்த முடியும்

## அமெரிக்க நிபுணர்கள் இமாலய சாதனை




(கொழும்பு)

உலகில் வேகமாகப் பரவி வரும் "எயிட்ஸ்" நோய்க்கு காரணமான எச்.ஐ.வி. தொற்றிலிருந்து மனித குலத்தைப் பாதுகாக்க முடியும் என்று அமெரிக்க நிபுணர்கள் நிரூபித்துள்ளனர்.

சுகதேகிகளுக்கு எச்.ஐ.வி ஆட்கொல்லி நோய் தொற்றுவதில் இருந்து தடுப்பதற்கான தடுப்பு ஔடதமொன்றை அமெரிக்க சுகாதார நிபுணர்கள் முதன் முதலாக கண்டுள்ளனர்.

அதிக அளவில் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாக கூடும் என கருதப்படுபவர்கள் ட்ருவாடா என்னும் வில்லையை தினமும் உட்கொள்பவர்களுக்கு இந்தத் தொற்று ஏற்படாது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ விஞ்ஞானிகளின் பரிந்துரைகளை அமெரிக்க உணவு மற்றும் ஔடத அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தப் புதிய கண்டுபிடிப்பு எச்.ஐ.வி. ஆட்கொல்லி தொற்று தடுப்புக்கான நடவடிக்கைகளின் பாரிய மைல்கல்லாக ஏற்றுக்கொள்வதாக நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# அஞ்சல் ஊழியர்கள் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது

(கொழும்பு)

கட்டட நெருக்கடி உள்ளிட்ட பல கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அஞ்சல் சேவையாளர்கள் மேற்கொண்டு வந்த சேவைப்புறக்கணிப்பு நிறைவுறுத்தப்பட்டுள்ளது.

அஞ்சல் தொழிற்சங்க ஒன்றியத்தின் ஊடகப் பேச்சாளர் சிந்தக பண்டார இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, தமக்கு அவசியமான வசதிகளை பெற்றுக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2 இரண்டு தினங்களாக இந்தப் போராட்டம் காரணமாக கொழும்பு மத்திய அஞ்சல் பறிமாற்றகத்தில் 15 இலட்சத்திற்கும் அதிகமான அஞ்சல் பொதிகள் தேங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இப்போது அஞ்சல்களை பகிர்ந்தளிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




வெசாக் பண்டிகையை முன்னிட்டு அலரிமாளிகையில் நடைபெற்ற அன்னதான நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டு உணவு பரிமாறினார்.

# இன்று அன்னை

# அம்மா!

**ம**னிதகுலத்தின் உதடுகளிலிருந்து வெளிப்படும், உலகின் தலைசிறந்த சொல் "அம்மா" என்பதுதான். தலைசிறந்த அழகிய அழைப்பும், "என் அம்மா!" என்ற அழைப்புத்தான். இதயத்தின் அடியாழத்திலிருந்து வெளிவந்து, நிறைந்த நம்பிக்கையையும், அன்பையும் தரும் இனிய பாசச் சொல் அது. அன்னைதான் எல்லாமே - நம் கவலைகளுக்கு ஆறுதல் அவள். நம் துன்பங்களுக்கு நம்பிக்கை அவள். நம் பலவீனத்திற்குப் பலம் அவள். அன்பு, கருணை, இரக்கம், மன்னிப்பு ஆகியவற்றின் ஊற்றுக்கண் அவள். தாயை இழந்தவர் ஆத்மாவையும் இழந்தவர். அவளல்லவா ஒருவரை வாழ்த்தி, இடைவிடாமல் காப்பாற்றி வருபவள்?



இயற்கையின் பொருட்கள் யாவும் தாயின் பெருமையையே பேசுகின்றன. பூமியின் தாய் கதிரவன். அது, வெப்பத்தின் சாரத்தை பூமிக்குத் தருகின்றது. கடலின் பாடலாலும், பறவைகள் நீரோடைகளின் தேவ கீதங்களாலும், இரவில் பூமியை உறங்கச் செய்யும் வரை, கதிரவன், பிரபஞ்சத்தை விட்டுச் சென்று விடுவதே இல்லை.

மரங்கள், மலர்களின் தாய் இந்த பூமி. அது, அவற்றைப் பெற்றெடுக்கின்றது, வளர்க்கின்றது, பிறகு தனியே வளர விட்டு விடுகின்றது. அந்த மரங்களும், மலர்களும், பழங்களும், விதைகளுக்குத் தாய் ஆகிவிடுகின்றன. எல்லாப் படைப்புகளின் உயிர் மூலமாகிய அந்தத் தாய், அழகும் அன்பும் நிறைந்த நிரந்தர ஆன்மா.

**- கலீல் ஜிப்ரான்**
**(முறிந்த சிறகுகள்)**

"**எ**னக்கு ஞாபகமுள்ள பௌர்ணமிகள்" என்னும் தேவதச்சனின் கவிதையைப் படித்திருக்கிறீர்களா? வேறு வேறு சந்தர்ப்பங்களில் பார்த்த பௌர்ணமி நிலவுகளை, நினைவுகூரத்தக்க அந்தச் சந்தர்ப்பங்களோடு சேர்ந்து எழுதியிருப்பார். இரவில் இந்த உலகின் மீது ஒளிபடர விடும் நிலவை, நமக்கு வழங்கப்பட்ட அரி தான பரிசு என்று எப்போதாவது நாம் உணர்ந்திருக்கிறோமா? அதே போல்தான் அம்மாவும்.

அவள் இருக்கும் வரை அவளுடைய அபூர்வத் தன்மை நமக்குத் தெரிவதே இல்லை. ஏகபோக உரிமை கொடுக்கப்பட்டது போல் உணர்வின்றி மொத்தமாக அவளை உபயோகிக்கிறோம். அவள் நம் வாழ்க்கையை விட்டு நீங்கிய பிறகுதான் தெரிகிறது, அவள் நிலவைப் போல எவ்வளவு அபூர்வம் என்று.


காலையில் வெளியே போய்விட்டு வருவதற்குள் பித்துப் பிடித்து சாப்ளினை நீண்ட தனிமையின் பாதைக்குள் விடும் சாப்ளினின் அம்மாதானே அவருக்குப் பெரிய தூண்டுதல். அம்மா என்ற உறவின் பிம்பம் மட்டுமே இன்னும் அதிக அளவு கட்டுடைக்கப்படாதது.

எனக்கு எட்டாவது படிக்கும்போது காலாண்டு விடுமுறை தினத்தில் இரவு கடலின் மேல் இருந்த நிலவு ஞாபகம் வருகிறது. அன்று காலை அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஏதோ சண்டை. இயல்பானதை விட அன்று கூடுதல். அம்மா அப்பாவிடம் நிறைய அடிகள் வாங்கியிருந்தாள். இடையில் புகுந்த எனக்கும் அடிகள் விழுந்திருந்தன.

இருவரும் வேலைக்குச் சென்ற பிறகு, அழுகை உலர்ந்த முகத்துடன் குளிக்காமலேயே தொந்தரவும், நடுக்கமும் இன்னும் உடலில் மிச்சமிருக்க... விளையாடிக் கொண்டிருந்தேன். எதிர்பாராத விதமாக அம்மா மதியம் பன்னிரண்டு மணிக்கே அலுவலகத்திலிருந்து திரும்பி வந்தாள். புழுதி படிந்திருந்த என்னைப் பார்த்து, "கால் கையை கழுவிட்டு வா" என்றாள். ஏதோ பிரச்சினை, நமக்கு இதுவரை தெரியாத ஒரு முனையிலிருந்து உருவாகியிருக்கிறது என்பது மட்டும் புரிந்தது.

நான் சோற்றை விழுங்க இயலாமல் விழுங்கிக் கொண்டிருந்தேன். அம்மா கனத்த முகத்துடன் என்னைப் பார்த்து விட்டு, விட்டத்தைப் பார்த்துக் கொண்டே உருண்டை

# அம்மாவும்



# அம்மா எழு!

கல்லறை உயிர்
மௌனம் தடவிய
செம்மண் மேட்டருகில்
முழங்காலிட்டு வெறித்திருக்கிறேன்.

நேற்று மழை
தொட்டுவிட்டுப் போன
அங்குதான்
உள்ளே நீயிருக்கிறாய்
உன் ஆத்மா
எழ எத்தனிப்பதற்கான
அதிர்வுகள்
எங்கும், எனைச் சுற்றிலும்.

தவித்திருக்கிறாயா?

சொல்லை மென்று
விழுங்கிய போது - அது
கண்ணீராய் கொட்டியது.

நெருப்பில் வாட்டிய
வெண்கல மணிகளாய்
கறுத்திருந்தன
கண்ணீர் விதைகள்.

காற்றின் வீச்சில் - அவை
பூமியில் சிதறி
கொடியாய் வளர்ந்து
மஞ்சள் பூக்கள் மலர்ந்தாயிற்று.

உயிர்த்திருந்த
உன் கல்லறை ஆழமாக
சுவாசித்ததில் தள்ளாடிய
பட்டாம்பூச்சிகள் கூவித் திரிகின்றன.
மஞ்சள் பூக்காடு வியர்த்ததில்
எல்லாம் அமைதியிழந்து விட்டது.

உயிர் மொத்தமும்
இழுத்துத் தைக்கப்பட்ட
ஒற்றை விரலில்
இறுகிய மணல் கீறுகிறேன்.

கல்லறை வீடு அசைவுற்றதில்
உன் ஆத்மா
வெளியேறத் துடிப்பதற்கான
அதிர்வுகள்.
அம்மா!
எழு போகலாம்.

**- ஜெயராணி**

**மிகையில். . .**

**உ**னக்கு நினைவிருக்கிறதா. நம் பால்ய நாட்களை. நேசிப்பார் எவருமின்றி, நோய்மையால் பீடிக்கப்பட்டு, தனக்குள்ள ஒரே நண்பனாக நம் தகப்பனை மட்டுமே ப்ரியம் செய்தபடி, அவமானத்தையும் கசப்பையும் தாங்கிக்கொண்டு, வெற்றுக் கோப்பையென உலர்ந்து போயிருந்த அம்மாவின் கடைசி நாட்களை மறந்துவிட முடியுமா என்ன? ஒவ்வொரு நாளும் அவள் நம் ஐவரையும் அழைத்துப் படுக்கையின் விளிம்பில் உட்காரச் சொல்லி இமைக்காது பார்த்தபடியிருந்தாளே... அது எதற்காக?

அந்த கண்கள் உலர்ந்த தானியத்தைப் போலயிருந்தன. அவளது பெருமூச்சு உஷ்ணம் மிக்கது. எதையோ பேச விரும்பினாள். ஆனால் வார்த்தைகள் துளிர்க்கவேயில்லை. எத்தனை இரவுகள் தகப்பனின் காலைக் கட்டிக்கொண்டு தன்னை நேசிக்கக்கூடாதா என்று கண்ணீர் விட்டிருக்கிறாள்.

தாயின் பார்வைக்குள் நம்முடைய பால்யகாலம் குவளையில் அடுக்கப்பட்ட மலர் போல ஒன்றாகக் கூடியிருந்தது நினைவிருக்கிறதா?

யாருமற்றவர்களாக வளர்க்கப்பட்டவர்கள் என்ற நினைவே நம்மைக் கொல்கிறதல்லவா.

மிகையில்,

பச்சைச் சாராயம் ஊற்றித் தகப்பன் கொல்லப்பட்ட தீர்க்கச் சேதி வந்த உடன் எனது உடல் நடுங்கி, வாயில் நுரை தள்ளி, வலிப்பு வந்து விழுந்தபோது பல்வெட்டி ஏற்பட்ட காயம் இன்னமும் என் உதட்டில் உள்ளது.

தாயும் தகப்பனும் இல்லாதவர்கள் துயரத்தைத் தவிர வேறு எதையும் கொண்டிராதவர்கள் என்று அன்று இரவில் நீ கூறியது இப்போதும் கேட்டுக் கொண்டேயிருக்கிறது.

மிகையில், உயிர் வாழ்வதே நமக்குப் பெரிய அதிர்ஷ்டம் என்பதுபோலாகிவிட்டதே.

இப்போது தனிமையில் எரியும் மெழுகு வர்த்திகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அம்மாவின் நினைவுகள் சுவரில் ஊர்ந்து நகர்கின்றன.

சைபீரியாவின் பனியில் சூரியன் ஒளிர்வதைப் பார்க்கும்போது அம்மா இறந்து போன துக்கம்தான் மேலிடுகிறது.

மிகையில், நான் ஏன் எழுத்தாளனாக மாறினேன். தனிமை மிக மோசமானது. மனதில் வார்த்தைகள் மட்டும் இல்லாமல் போய் விட்டால் மனிதர்களால் வாழமுடியாமல் போய் விடும்.



## தஸ்தாயெவ்ஸ்கி

**- "தஸ்தாயெவ்ஸ்கியின் சங்கீதம்" நாடகத்திலிருந்து...**

**வெள்ளை வெள்யாட்டுச் செச்சை போலத்**
**தன்னோர் அன்ன இளையர் இருப்பப்**
**பலர்மீது நீட்டிய மண்டையென் சிறுவனைக்**
**கால்கழி கட்டிலிற் கிடப்பித்**
**தூவெள் அறுவை போர்ப்பித் திலதே.**

*(ஔவையார் – புறநானூறு – திணை கரந்தை)*

**செ**ன்னையில் என் மூன்றாம் நாவல் 'பின்தொடரும் நிழலின் குரல்' வெளியீட்டு விழாவுக்குப் பின்பு கலையும் கூட்டத்தில் நண்பர்களிடம் அளவளாவிக் கொண்டிருந்த போது ஒரு குரல், "ஆரெண்டு தெரியுதா?" என்று கேட்டது. தெரியவில்லை. "யோகராஜா" என்றார் சிரித்தபடி. "அடடே..." என்று கூவியபடி அவர் கரங்களைப் பற்றிக் கொண்டேன்.

கடிதங்கள் மூலம் அறிமுகமாகும் முகமறியா ஈழ வாசகர்களில் ஒருவர். சட்டென்று தொடர்பு அறுந்து போகும். அது இயற்கைதான். மீண்டும் சந்திக்க நேர்வதுதான் அபூர்வம். "எங்கே இருக்கிறீர்கள்?" என்றேன்.

"ஒல்லாந்தில் இருக்கிறம். ஆறுதலா வாங்க, கதைப்போம்" என்றார் யோகா. சாலிகிராமத்தில் தன் மச்சாள் கூட தங்கியிருப்பதாகச் சொன்னார்.

யோகாவின் மூத்த மகன் இயக்கத்தில் சேர்ந்த விஷயம் எனக்குத் தெரியும். பிறகு அவன் போரில் மரணமடைந்ததாகவும், அவர் புலம் பெயர்ந்ததாகவும் கேள்விப்பட்டிருந்தேன்.


மறுநாள் நானும் ஒரு சென்னை நண்பரும் சாலிக்கிராமம் போய் யோகாவைச் சந்தித்தோம். பெரிய கூடத்தில் விரிக்கப்பட்ட கோரைப்பாயில் மின்விசிறியின் கீழே கனத்த கரிய உடலில் சட்டையில்லாமல் யோகா படுத்துக் கிடந்தார். அருகே தமிழ் இதழ்கள், புத்தகங்கள், கூஜாவில் தண்ணீர். சிரித்தபடி, "சுகமெண்டு சொல்லுவது இதுதான்..." என்றார்.

ஹொலந்தில் இதெல்லாம் சாத்தியமே இல்லை. யாழ்ப்பாணத்தில் அவருக்கு விரிந்த வீடு இருந்தது. அதில் ஞாயிறு மதியங்களில் இப்படி படுப்பதுதான் வாழ்க்கையின் உச்சகட்ட இன்பம் என்றார் யோகா. கூடவே செம்பருத்தி பற்றியும் சொன்னார். சாலிக்கிராமத்தில் இரண்டு வீதிகளில் செம்பருத்திச் செடியைப் பார்க்க முடிந்தது. யாழ்ப்பாணத்தில் செம்பருத்தி இல்லாத வீடே இல்லை. யாழுக்குத் திணை ஒன்று கற்பிதம் செய்ய வேண்டுமானால், அது செம்பருத்திதான்.


இலக்கிய விசாரணைகள், வம்புகள் என்று பேச்சு நீண்டு போய், அவரது புலம் பெயர்ந்த வாழ்க்கை பற்றித் திரும்பியது. மகனை இழந்த பின்பு மகளுடனும் மருமகளுடனும் யோகா ஹொலந்தில்

**நா**ன் சிறுவனாக இருந்தபோது ஊரில் தெருப்பிள்ளைகளோடு விளையாடிவிட்டு இரவு சாப்பாட்டு நேரத்திற்கு வீட்டுக்கு வருவேன். அம்மா சோறிடுவாள். ஒரு நிலைக்கு மேல் அளவுக்கதிகமாய்ச் சாப்பிடும் எனக்கு உடம்புக்கு ஏதாவது வந்துவிடுமெனப் பயந்து அம்மா "போதும்ப்பா" என்பாள். நானும் அதற்காகக் காத்திருந்தவன்போல் கை கழுவிவிட்டுப் படுக்கைக்குச் சென்றுவிடுவேன். அம்மா வேலைகளை அசமடக்கிவிட்டு அவளுக்குச் சாப்பாடு போட்டு எடுத்துக்கொண்டு தெருவாசலுக்கு வருவாள். பிசைந்த சாதத்தோடு தூக்கத்திலிருக்கும் என்னை எழுப்பி சாதத்தைக் கைகளில் உருட்டித் தருவாள். அவளும் சாப்பிடுவாள். சாப்பிடும் உணர்ச்சியே குறைந்துவரும் இக்காலகட்டத்திலும் கூட இந்நினைவு எப்போதாவது சுவாரஸ்யமாகத் தட்டுப்படுவதுண்டு. அம்மா மட்டும்தான் அவள் சாப்பிடும் வேளைகளில் நான் சாப்பிட்டிருப்பேனா என்று நினைத்துப் பார்க்க முடியும். சாம்பல் படிந்த கூரைவீட்டில் அவள் அமர்ந்து சாப்பிடும் ஒவ்வொரு கவளச்சோறும் நானிருந்த கருவறையில் என்னைத் தேடிச்சென்று விழும்.

**- ஜே. பி. சாணக்யா**
**(கனவுப்புத்தகம் முன்னுரையில்)**



# ...னையர் தினம்!



உருண்டையாக சோற்றை வாயில் போட்டுக் கொண்டிருந்தாள். கடைசி உருண்டை முடிந்ததும் தட்டில் கைகழுவியபடி, "திருச்செந்தூருக்குப் போகிறோம்" என்றாள்.

"ஒரு விசேஷமும் இல்லையே, திருச்செந்தூருக்கு 'எதற்கு?" காரணம் எதுவும் இல்லாமல் என் மனம் கேட்டது. ஆனால் அம்மாவிடம் கேட்கத் தோன்றவில்லை. "டிரஸ் எடுக்கணுமா?" என்றேன். "வேண்டாம்" என்று உறுதியாகச் சொன்னாள்.

## ...வும் நிலவும்



நயினார் குளம் பஸ் நிறுத்தத்தில் இரு கழுதைகள் வெயிலில் சமைந்து சிலைகள் போல் நின்று கொண்டிருந்தன.

எங்களுக்கு ஜன்னலோர சீட் கிடைக்கவில்லை. நான் பக்கவாட்டில் உட்கார, அம்மா நடுவில் உட்கார்ந் தாள்.

புதுக்கோட்டைக்கு முன்னுள்ள பாலத்தைக் கடக்கும் போது அம்மாவிடம் கேட்டேன்: "எதற்கு திருச்செந்தூர் போகிறோம்?"

"எனக்கு இனி இருக்கப் பிடிக்க வில்லை. அந்த முருகன் சந்நிதியில் தான் எனக்கும் உங்கப்பாவுக்கும் கல்யாணம் ஆச்சு. அவனோட கோயிலுக்குப் பக்கத்திலேயே கடல் லயே மூழ்கி இறந்துடலாம்னு நினைக்கிறேன். உன்னைத் தனியாக என்னால விட்டுவிட்டுப் போக முடியாது. நீயும் வர்றியா?" என்றாள்.

எனக்கு சிறு வயதில் பார்த்த நல்லதங்காள் படம்தான் ஞாபகத்துக்கு வந்தது. எவ்வளவு பெரிய கடல்! நாழிக் கிணற்றில் மூழ்குவ தென்றால் கூடப் பரவாயில்லை. நான் அம்மாவிடம் உறுதியாகச் சொல்லிவிட்டேன், என்னால் முடியாதென்று. நான் வராவிட்டால் அவளும் போகமாட்டாள் என்று என் மனம் நம்பியது.

திருச்செந்தூர் கோவில் பிரகாரத்தைச் சுற்றி வந்தோம். வெளியிலிருந்தே அம்மா தனக்குப் பிடித்த முருகனை தரிசித்தாள். "கந்தசஷ்டி கவசம் படிக்கிற பெண்கள் எல்லாருக்குமே இவன் கஷ்டத்தைத் தவிர வேறெதையும் கொடுப்பதில்லை" என்றாள்.

அம்மாவும் நானும் பிரகார கல்திண்ணையில் உட்கார்ந்து சமோசா சாப்பிட்டோம். சமோசா அன்று எனக்கு எளிதாக உள்ளிறங்கவில்லை. அப்பாவை மிரட்டி, திருத்தும் உரிமையுடைய அவருடைய தாய்மாமன் ஒருவர் தூத்துக்குடியில் இருந்தார். எங்களுக்கு அவர் தாத்தா. "பாட்டியிடமும் தாத்தாவிடமும் பேசினால் அப்பா உன்னை அடிக்க மாட்டார்" என்றேன் அம்மாவிடம்.

"எத்தனை தடவை அவங்ககிட்ட பேசினாலும் அவரு திருந்த மாட்டாரு" என்றாள் அம்மா.

கடைசியில், நான் தூத்துக்குடி தாத்தா வீட்டுக்குப் போய் எங்கள் நிலையைச் சொல்வது. சரிவராவிட்டால் திரும்ப வந்து அம்மாவுடன் சேர்ந்து கடலுக்குள் மூழ்கி விடுவது என ஒருவழியாக முடிவு செய்தோம். நான் திரும்பி வரும்வரை அம்மா இருப்பாள் என்ற தைரியம் இருந்தாலும், ஒரு சிறிய மன அழுத்தம் அவளை விட்டுச் செல்வதில் இருந்தது.

யார் துணையும் இல்லாமல் தனியாகச் செய்த முதல் தூரப் பிரயாணம் அது. மனக்குமைச்சல் கடைவிரித்திருப்பது போல, தூத்துக்குடியின் தெருக்களில் குப்பை. வெயில் விடைபெறும் தருணத்தில் இருந்தது.

தாத்தாவுக்கும் ஆச்சிக்கும் இது சகஜமான விஷயம்தான். ஆனால் அம்மா திருச்செந்தூரில் உட்கார்ந்து என்னை அனுப்பியதுதான் வழக்கமற்ற தன்மையில் இருந்தது.

"தாத்தாவுக்கு உடல்நிலை சரியில்லை. உன்னுடன் அவர் வரமுடியாது. அப்பாவை நாங்கள் அழைத்துப் பேசுகிறோம். உடனே நீ போய் அம்மாவை சீக்கிரம் அழைத்து வந்துவிடு. நைட் அங்கு இருக்காதீங்க. நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள் ஆச்சி.

திரும்ப திருச்செந்தூர் கோயில் வாசலில் இறங்கும்போது நன்கு இருட்டியிருந்தது. வள்ளிக்குகை அருகிலுள்ள பிரகாரத்தில் நடக்கத் தொடங்கினேன். இறக்கத்தில் கடல் மினுமினுத்துக் கொண்டிருந்தது. திருப்பத்தில் திரும்பினால் போதும் அம்மா தெரிந்து விடுவாள். "இனிமேல் எல்லாம் சரியாகி விடும். தாத்தாவும் பாட்டியும் வீட்டில் நமக்காகக் காத்திருக்கிறார்கள். அம்மா உன் உருவம் எனக்குத் தெரியும் வரை அங்கேயே உட்கார்ந்திரு" கண்ணை மூடிக்கொண்டு பிரகாரத்தில் ஓடத் தொடங்கினேன். பாதி ஓடி கண்ணைத் திறந்தேன். படிக்கட்டில் அம்மா அமர்ந்திருந்தாள். நாங்கள் இரண்டு பேருமே அப்போது பெருமூச்சு விட்டிருக்க வேண்டும்.

இந்நிகழ்ச்சியை நினைக்கும் போதெல்லாம் பிரகாரத்திலிருந்து பார்த்த கடலின் மேலே நிலவும் சேர்ந்து ஒரு சோபையைக் கொடுக்கிறது. ஆனால் நான் அன்று பார்த்த கடலில் நிலவு இருந்ததா? எனக்கு நிச்சயமாகச் சொல்லத் தெரியவில்லை.

**- சங்கர ராமசுப்ரமணியன்**

## ஒரு தேள் வந்த இரவு

என் தாயாரை ஒரு தேள் கொட்டிய
இரவு எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது.
பத்துமணி நேர அடைமழையில்
அரிசி மூடையின் கீழே
பதுங்கியிருந்தது அத்தேள்.
விஷம் கக்கிய பின்
இருட்டு அறை விட்டு
நகர்ந்து, வெளியே,
மழையில் சென்றுவிட்டது.
உறவினர்கள் புற்றீசலாய் வந்தனர்.
இறைவன் பெயரை நூறுமுறை
உச்சாடனம் செய்தனர் - தீய விஷத்தை
முறிப்பதற்காய்.
கைகளில் மெழுகுவர்த்திகளும்,
லாம்பு விளக்குகளும்
சூரியன் சுட்டெரித்த என் வீட்டின் சுவர்களின்
மேலே,
பிரமாண்டமாய் தேளின் நிழல்களைத்
தோற்றுவித்தன.
அவர்கள் தேளைத் தேடினர். காணவில்லை.
நாக்கால் 'உச்' கொட்டினர்.
"தேளு நகர நகர அம்மா ரத்தத்தில்
விஷம் ஏறுங்க" - அவர்கள் சொன்னார்கள்.
"அந்தத் தேள் அசையாது இருக்கட்டும்."
"உங்கள் பூர்வஜென்ம பாவம் பொசுங்கட்டும்."
"உங்க துன்பம் அடுத்த பிறவி துன்பத்தைப்
போக்கட்டும்."
"இந்த வலியால் துயரமெல்லாம் போய்
நல்லது வரட்டும்."
"இந்த விஷம் ஆசைகளை
சுத்தம் பண்ணட்டும்."
முகத்தில் அமைதியுடன் பின்னர் எல்லோரும்
அம்மாவைச் சுற்றித் தரையில் அமர்ந்தனர்.
மேலும் மெழுகுவர்த்திகள் வந்தன.
மேலும் லாம்பு விளக்குகள்.
மேலும் உற்றார்
மேலும் பல பூச்சிகள்
இடைவிடாத மழை.
ஒரு பாயின் மேல் என் தாய்
துவண்டுகொண்டிருந்தாள்.
பகுத்தறிவுவாதியான என் தந்தையோ
எல்லாவற்றையும் சபித்தார்.
விஷக்கடி முறிய
பவுடர், மருந்துக் கலவை, மூலிகை
எல்லாம் பிரயோகித்தார்.
கடிவாயின் மேல் மெழுகு ஊற்றி,
நெருப்புக்குச்சியால் சுட்டார்.
நான் தீயின் ஜ்வாலை
என் தாயைத் தீண்டுவதைக் கண்டேன்.
ஒரு பூசாரி விஷம் முறிக்க
மாந்திரீகம் செய்ததைக் கண்டேன்.
இருபது மணி நேரம் கழிந்து
விஷம் இறங்கியது.
என் தாய் இதுமட்டுமே சொன்னாள்:
"கடவுளுக்கு நன்றி! அந்தத் தேள்
என்னைக் கொட்டியது.
என் பிள்ளைகளை விட்டுவிட்டது!"

**- நிஸிம் இஸக்கியேல்**

இருந்தார். வசதியான வாழ்க்கையில் இருந்து நடுவயதுக்குப் பி[illegible]த நாடு மாறி, தொழில் மாறி மறுபிறப்புக் கொள்வது எத்தனை பெரிய வதை என்பதை உணர்ந்தேன். யோகா தன் வாழ்க்கையின் சாரமாக எண்ணியிருந்த இலக்கியம் கூட எங்கோ விழுந்து விட்டது.

யோகாவின் மனைவி சாப்பிட அழைத்தார். தேங்காயின் மாறுவேடங்களால் ஆன யாழ்ப்பாணச் சாப்பாடு என் கேரள நாக்குக்கு மிகவும் பிடித்திருந்தது. இறால் பொரியல், நண்டுக் குழம்பு, சொதி... யோகாவின் மனைவி வெளிறிய முகம் கொண்ட தடிமனான பெண்மணி. "ஒல்லாந்து பிடித்திருக்கிறதா?" என்றேன்.

## பெற்ற நெருப்பு...

**- ஜெயமோகன் (சங்கச் சித்திரங்கள்)**



"நல்லம்" என்றார். முருங்கைக்காய், கொத்துமல்லித்தழை எல்லாமே பச்சையாகக் கிடைக்கும். குளிர்தான் சற்று அதிகம். அதுவும் பழகிவிட்டது.

இந்தப் பயணத்திலும் சுந்தர ராமசாமியைப் பார்க்க முடியாதே என்று யோகா வருந்தினார். இதன் நோக்கமே வேறு. ராமேஸ்வரம் சென்று சில சாந்திபலிச் சடங்குகள் செய்ய வேண்டியுள்ளது. யோகாவின் குடும்பத்தில் மட்டும் போரிலும் கலவரத்திலுமாக இறந்தவர்கள் மொத்தம் பதினெட்டுப் பேர்.

அமைதி அடையாத ஆத்மாக்கள் ஹொலந்திலும் நோர்வேயிலும் கனடாவிலும் பிரான்ஸிலும் மற்றவர்களைப் பின்தொடர்கின்றன. கனவுகளில் மௌனமாக வந்து கண்ணீர் வடிக்கின்றன. எல்லாருமாக வந்து ராமேஸ்வரம் கடலில் ஒரு பிராயச்சித்த பூசை செய்ய முடிவாயிற்று. யாழ்ப்பாணக் கடற்கரையில் செய்ய வேண்டிய சடங்குகள். கரை இரண்டானாலும் கடல் ஒன்றுதானே என்றார் யோகா.

ஆனால், ஒரே ஒருவருக்கு மட்டும் எந்த சாந்தி பூசையும் தேவையில்லை என்று யோகா சட்டென்று மாறுபட்ட குரலில் சொன்னார். "உங்களுக்கே தெரியும், என் மூத்த மகன் குலசிங்கம் இயக்கத்தில் சேர்ந்து களப்பலியானான். குண்டுகளை உடலில் கட்டிக்கொண்டு கவசவண்டிக்கு நேராகப் பாய்ந்தான். இறந்த அக்கணமே அவன் ஆத்மா சாந்தி அடைந்திருக்கும். பொய்யாகச் சொல்லவில்லை. எங்கள் கனவுகளில் அவன் துப்பாக்கியும், கையுமாகச் சிரித்தபடிதான் வருகிறான்..."

யோகாவின் குரல் உணர்ச்சியால் ஓங்கியது. "ஒருநாள் வந்து தலைவருடன் இரவுச் சாப்பாட்டுக்கு அழைப்பு வந்திருப்பதாகச் சொன்னான். அவன் அம்மாவுக்கு அதன் பொருள் என்ன என்று புரியவில்லை. நான் அவனை அணைத்து, 'தம்பி, நம் மூதாதையர் பேரைக் காப்பாற்று, முன் வைத்த காலை பின் வைக்காதே' என்றேன். அவன் பலியான விஷயத்தைப் 'பொடியன்கள்' வந்து சொன்னபோது, 'மகனே, நீ எங்கள் குலத்தின் மானத்தைக் காப்பாற்றினாய்' என்றுதான் அலறினேன்..." யோகா சொன்னார்.

எத்தனை கேட்டாலும், எத்தனை கற்பனை செய்தாலும் அந்த வேகம் இந்தியத் தமிழனுக்குப் புரிவதேயில்லை. யோகா உருகிய உலோகம் போன்று கொதிநிலையில் இருந்தார். "ஆயிரம் வருசம் ஆனாலும் எங்களுக்கெண்டு ஒரு நாடு வராமப் போகாது. அங்க எண்ட மகனுக்கு ஒரு நடுகல் இருக்கும்..." என்றார். 'எங்கள் குலமே இனி அவன் பேரால்தான் அழைக்கப்படும். அவனது தந்தையாகத்தான் என் வாழ்க்கைக்கு அர்த்தம் வருகிறது...'

போன் வந்திருப்பதாகக் கீழேயிருந்து வீட்டு உரிமையாளரின் மகன் வந்து சொன்னான். யோகா இறங்கிப் போனார். அவரது பாத ஒலி மறைந்ததும் அவர் மனைவி வேகமாக வந்தார். அவர் உதடுகள் துடிப்பதைக் கண்டேன். யோகாவிடம் ஒரு விஷயம் சொல்ல முடியுமா? என்றார். "என்ன?" என்றேன் எச்சரிக்கையுடன். 'ஒரு முறை புட்டபர்த்திக்குப் போக வேண்டும்..." "அதற்கென்ன யோகாவிடம் சொல்கிறேன்..." என்றேன்.

"இது குலம் விஷயமாக. நான் சொன்னேன் என்றால் அவர் ஒப்புக்கொள்ள மாட்டார்..." அந்த அம்மாளின் கண்களிலிருந்து நீர் உதிர்ந்தது. யோகா போன வழியைப் பதற்றத்துடன் பார்த்தார். "என் கனவில் குலம் வராத நாள் இல்லை. கையில் புத்தகக் கட்டும் அரை டிராயருமாக வருவான். துக்கத்துடன் ஏதோ சொல்ல ஆரம்பிப்பான். அதற்குள் கனவு கலைந்துவிடும். என் குழந்தைக்கு, என்னிடம் ஏதோ சொல்ல வேண்டும். அது என்ன என்று அவனிடம் நான் கேட்க வேண்டும். பாபா நினைத்தால் முடியும் என்று சொல்கிறார்கள்..."

யோகா வரும் ஒலி கேட்டு, அவர் உள்ளே போனார். நான் மனம் கலங்கி நின்றிருந்தேன். பின்பு புறநானூற்றின் ஓர் அன்னையைக் கண்டுடைந்தேன். தமிழ் மரபு வீரம் என்றும் அறம் என்றும் முன்வைத்துப் போற்றும் அனைத்தையும் தன் அடிவயிற்றுத் தீயால் பொசுக்கும் அன்னையின் குரலை...

**வெள்ளாட்டு மந்தை போல**
**அவனைப் போன்ற இளைஞர்**
**கூடியிருந்த போதும்**
**பலருடைய தலைக்கு மேலாக**
**மன்னன் நீட்டிய கள்மொந்தை**
**என் சிறுவனை இதோ**
**காலில்லாத கட்டிலில் கிடத்தி**
**தூய வெள்ளாடையால்**
**போர்த்தியிருக்கிறது.**

வெள்ளாட்டு மந்தை என்று மறவர் கூட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுவதில் உள்ள சுடுவிஷம் தமிழ்க் கவிதையில் மிக அபூர்வமாகவே காணக் கிடைக்கிறது. எந்தச் சித்தாந்தமும் மரபும் அறமும் அன்னையின் அடிவயிற்றின் தீயைப் புரிந்து கொள்வதில்லை போலும்.

மிதுனம்



# குருப் பெயர்ச்சி பலன்கள்



**17-05-2012 முதல் 28-05-2013**

**மிருக சீர்ஷம் 3, 4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3 பாதங்கள் வரை**

**(பெயரின் முதல் எழுத்துக்கள் : க, கா, கி, கு, ஞ, ச, கே, கோ உள்ளவர்களுக்கும்)**

சாமர்த்தியமாக பேசி சமாளிக்கும் ஆற்றலைப் பெற்ற மிதுன ராசி நேயர்களே!

எடுத்த முடிவை திடீரென மாற்றிக் கொள்பவர்கள் நீங்கள். உங்கள் சிந்தனை "ஜெட்" வேகத்தில் இருக்கும். செயலாக்குவதிலும் கெட்டிக்காரர்கள். பொதுத் தொண்டில் உங்கள் நாட்டம் அதிகமாகவே இருக்கும். அதனால் தான் உங்களைத் தேடி ஏதேனும் ஒரு பதவி தானாகவே வந்து சேருகிறது.

ஒரு வேலையைத் தொடங்கி விட்டு, அதை பாதியிலேயே விட்டு விலகுவீர்கள். அதன்பிறகு வேறொரு காரியத்தில் உங்கள் கவனத்தை செலுத்துவீர்கள். இது தான் உங்கள் ராசிக்குரிய இயற்கைக் குணம். இந்தக் குணத்தை மட்டும் நீங்கள் கொஞ்சம் மாற்றிக் கொண்டால், உங்கள் முன்னேற்றத்தில் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும்.

பெற்றோரை காட்டிலும் மற்றவர்களையே நீங்கள் அதிகம் நேசிப்பீர்கள். உங்கள் வெற்றிக்கு பின்னால் யார் யாரை எல்லாம் வைத்திருக்கிறீர்கள் என்பதை வெளிப்படையாக சொல்ல மாட்டீர்கள். இரகசியமாக வைத்திருப்பர்கள்.

**வந்தது குருப்பெயர்ச்சி**

இத்தனை மகத்துவம் வாய்ந்த உங்கள் ராசிக்கு பதினோராமிடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் 17.5.2012 முதல் பன்னிரெண்டாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இலாப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த குரு விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறதே என்று கவலைப் படவேண்டாம். உங்கள் ராசிக்கு 7, 10 இற்கு அதிபதியானவர் குரு. கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் பன்னிரெண்டில் மறை யும் பொழுது, மிகுந்த நன்மைகளை அள்ளி வழங்கும் என்பது நியதி.

களத்திர ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான குரு பகவான் கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகமாக விளங்குவதால் தான், இந்த ராசிக்காரர்களுக்கு தொழிலிலும் ஏற்ற இறக்கமாக இருக்கிறது. சண்டையும், சமாதானமும் மாறி மாறி வரும் குடும்பமாக இந்த ராசிக்காரர்களுக்கு அமைகிறது.

பண விரயம், வெளிநாட்டு பயணம், தியாக வாழ்க்கை, கடன் தீருதல், சுக போகம், மனப்போராட்டம், இடமாற்றம், பணி நீக்கம், மூதாதையர் சொத்து பிரச்சினை, பகைவர் பயம், பாத நோய்கள், விலங்கு வளர்ப்புகள் இவற்றையெல்லாம் தெரிந்து கொள்ள உதவும் பன்னிரெண்டாமிடத்தில் இப்பொழுது, குரு சஞ்சரிக்கப்போவதால், அந்த இடங்களுக்கு உள்ள காரகத்துவங்களை எல்லாம் நல்ல விதமாக முடித்து வைப்பார்.

கோச்சாரம் எப்படி இருந்தாலும், உங்களுக்காக கணிக்கப்பட்டிருக்கும் சுய ஜாதகமும், அதற்கு ஏற்ற விதத்தில் தெசாபுத்திகளை நடத்த வேண்டும். அப்பொழுது தான், உங்களைத் தேடி வரும் பலன்கள் உன்னதமான பலன்களாக இருக்கும்.

**வெற்றிகளை குவிக்கும் வியாழனின் பார்வை!**

எல்லா கிரகங்களை காட்டிலும் குருவிற்கு ஒரு பெருமை உண்டு. மற்ற கிரகங்கள் பார்த்தால், பார்க்கிறது என்று தான் சொல்வோம். ஆனால், குரு பார்த்தால் மட்டும் கோடி தோஷ நிவர்த்தி என்று சொல்வோம். அப்படிப்பட்ட குரு உங்கள் ஜாதகத்தை பொறுத்தவரை எப்படிப்பட்டவராக இருந்தாலும், பார்க்குமிடம் புனிதமடைகிறது என்பதால் உங்களுக்கு நன்மைகள் கிடைக்கிறது.

விரயங்களை சுப விரயமாக்கலாம். வீடு மாற்றம், இட மாற்றம், வேற்று மொழி பேசுபவர்களின் தொடர்பு அனைதும் உருவாக்கும். உடல் நலத்தில் மட்டும் அச்சுறுத்தல் வந்தால் உடனுக்குடன் கவனித்துக் கொள்வது நல்லது. மூதாதையரின் சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். அந்நிய தேசத்திற்காக செய்த முயற்சிகள் இதுவரை அமைதியாக இருக்கிறதே என்று நீங்கள் நினைத்திருக்கலாம். இனி பயணத்திற்கான அறிகுறிகள் தோன்றும்.

**புனிதமடையும் இடங்கள்!**

குருவின் பார்வை பலத்தால் 4, 6, 8 ஆகிய இடங்கள் புனிதமடைந்து அந்தந்த இடங்களுக்குரிய செயற்பாடுகளை தீவிரப்படுத்துவதோடு, தித்திப்பான பலனையும் உங்களுக்கு வழங்கப் போகிறது.

பொதுவாக, பொன்னவன் பன்னிரெண்டில் சஞ்சரித்தால் பூமியுடன் வீட்டு மனை வாங்கும் யோகம் மின்னலென வந்திடுமாம் என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. நான்காமிடத்தில் பதியும் குருவின் பார்வை பலத்தால் மனை கட்டும் யோகம் இந்த குருப்பெயர்ச்சியால் உங்களுக்கு செயறபடப் போகிறது. அவ்வாறு வீடு கட்டும் பொழுது உங்கள் குடும்பத்தில் யாருடைய ஜாதகத்தில் செவ்வாய் பலம் பெற்று இருக்கிறதோ அதற்கேற்ற குபேர திசை பார்த்து வாயில்கள் அமைத்துக் கொண்டால் வசதிகள் பெருகும். வ்ருமானம் அதிகரிக்கும்.

பன்னிரெண்டாமிடம் விரய ஸ்தானம் என்பதால், எந்தெந்த வழிகளில் எல்லாம் விரயம் செய்ய விருப்பப்படுகிறீர்களோ, அந்தந்த வழிகளில் எல்லாம் நீங்கள் விரயம் செய்யத் தயாராக இருக்க வேணடும். உத்தியோகத்தில் உடனிருப்பவர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும் தொழில் மாற்றம், ஊர் மாற்றம் செய்ய நினைத்தவர்களுக்கு அது கைகூடலாம். விருப்ப ஓய்வு பெற நினைப்பவர்களின் விருப்பம் நிறைவேறலாம்.

குரு, இந்த முறை பெயர்ச்சியாகும் போது பகை கிரகமான சுக்ரன் வீட்டில் சஞ்சரிப்பதாலும் கேதுவுடன் கூடியிருப்பதாலும் சர்ப்ப சாந்தியை செய்து கொள்வது நல்லது. எந்த வழிபாடும் யோக பலம் பெற்ற நாளில் செய்வது யோகம் தரும்.

**வாட்டத்தை போக்குமா வக்ர குரு**

ரிஷப ராசிக்குள் சஞ்சரிக்கும் குரு 12.10.2012 முதல் 6.2.2013 வரை வக்ர கதியல் இயங்குகிறார். உங்கள் ராசியைப் பொறுத்தவரை 7, 10 இற்கு அதிபதியாக இருப்பதால் நன்மையையே கொடுக்கும். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற குரு, தனது வக்ரகாலத்தில் அதிர்ஷ்ட வாய்ப்புகள் பலவற்றையும் வரவழைத்துக் கொடுப பார். வெளியேறிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர். தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும்.

தொகை வருவதிலிருந்த தடை அகலும. எதிர்பார்த்த கடன் உதவிகள் கிடைத்து, புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். தொழில் முயற்சிகளில் இதுவரை இருந்த குறுக்கீடுகள் அகலும்.

**மிதுன ராசியில் பிறந்த பெண்களுக்கு**

இந்த குருப்பெயர்ச்சியால் உடல் நிலை சரியாகி உற்சாகத்தோடு பணிபுரியப் போகிறீர்கள். கடன் சுமைகள் படிப்படியாக குறையும். கௌவுரவம், புகழ் கூடும். குருவின் பார்வை பலத்தால் சென்ற குருப்பெயர்ச்சியில் பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடரப் போகிறீர்கள். கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். இனிவரும் காலம் இனிய காலமாக மாற உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உயர்பதவிகள் கிடைக்கும். (தொடரும்)

# பாலியல் கல்வி தொடர்பான விழிப்புணர்வு தேவை

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கிடையில் காணப்படும் பாலியல் பிரச்சினைகளுக்கு மாணவரிடையே காணப்படும் பாலியல் கல்வி தொடர்பான விழிப்புணர்வு குறைபாடே காரணம் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் ஆ.கேதீஸவரன் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலையில் மாணவர்களுக்கு பாலியல் கல்வி தொடர்பாக கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் வெட்கப்படுகின்றார்கள். இதனால் உரியமுறையில் பாலியல் கல்வி கற்பிக்கப்படுவதில்லை. இதனாலேயே பாடசாலை மாணவர்களுக்கு இடையில் பாலியல் பிரச்சினைகள் எழுகின்றன.

பாடசாலைகளில் இடம்பெறும் பரீட்சைகளில் பாலியல் கல்வி தொடர்பான வினாக்களையும் தொடுக்கப்படல் வேண்டும். அவ்வாறு தொடுக்கும் இடத்து மாணவர்களின் மனங்களில் எழும் பாலியல் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

தீர்வு கிடைக்கும் பட்சத்தில் மாணவர்கள் பாலியல் பிரச்சினைகளில் சிக்கிக்கொள்ள வேண்டிய தேவை இருக்காது என்றும் தெரிவித்தார்.

மேலும் பாலியல் கல்வியின் முக்கியத்துவம் பற்றிப் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு விளக்கமளிக்கும் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எஸ்)

# முப்பது புலி உறுப்பினர்கள் திருமலையில் கைது

(கொழும்பு)

திருகோணமலையில் மக்களோடு மக்களாக நடமாடி வந்த எழிலன் குழுவைச் சேர்ந்த 30 பேர் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் திருகோணமலை, அதனை அண்டிய பிரதேசங்களில் வசித்துக் கொண்டு புலிகளுக்காக சம்பூர் மற்றும் நிலாவெளி பகுதிகளில் செயற்பட்டு வந்ததாக அறிய கிடைத்ததாக தெரிவித்துள்ள பாதுகாப்பு தரப்பினர், கைது செய்யப்பட்டுள்ளோர் பாதுகாப்புப் படையிடம் சரணடையாமல் இருந்துள்ளார்கள் எனவும் தெரிவிக்கின்றனர். திருமலை புலித் தலைவராக இருந்த எழிலன் மட்டும் சரணடைந்து தற்போது பூசா முகாமில் இருக்கின்றார்.

மேலும் இப்புலிகள் திருகோணமலை கடற்படை முகாம் மீதான தாக்குதலில் தொடர்புபட்டவர்கள் என்று பாதுகாப்புப் படையினருக்கு தகவல் எட்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# வடமராட்சியில் ஆங்கில தினப்போட்டி

(பருத்தித்துறை)

வடமராட்சி கோட்டமட்ட ஆங்கில தினப்போட்டிகளில் பார்த்து எழுதுதல், ஆக்கத்திறன் போட்டி, சொல்வதெழுதல் ஆகியன எதிர்வரும் 17 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்படி பருத்தித்துறை கோட்டத்திற்கு மெதடிஸ்த உயர்தரப் பெண்கள் பாடசாலையிலும், கரவெட்டி கோட்டத்திற்கு வதிரி திரு இருதயக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எஸ்)

# வட மாகாண தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

வடக்கு மாகாண தமிழ் தினப்போட்டிகளில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களது விபரங்கள் வருமாறு,

**ஆக்கம் - எழுத்து**

அ.வெற்றிதரன் (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி -வலிகாமம்), பி.விபிசாளினி (பூந்தோட்டம் ம.வி -வவுனியா), செ.இமான் மொறியன்ரஸ் (மன்னார் புனித சவேரியர் ஆண்கள் பாடசாலை -மன்னார்).

**கட்டுரை வரைதல்**

ப.பவதார்கன் (யாழ். இந்துக் கல்லூரி -யாழ்ப்பாணம்), ந.அபிராமி (கிளிநொச்சி - திருவையாறு ம.வி - கிளிநொச்சி), யு.தர்சிகா (விததியானந்தாக் கல்லூரி - முல்லைத்தீவு).

**கட்டுரை வரைதல்**

சு.கஜனி (பாண்டியன்குளம் ம.வி. -துணுக்காய்), த.கேசிதா (உடுவில் மகளிர் கல்லூரி - வலிகாமம்), வி.ஆன்கில்டா (தோட்டவெளி அ.த.க.பாடசாலை - மன்னார்).

**கட்டுரை வரைதல்**
**இலக்கியம் நயத்தல்**


ம.பகிர்தா (கலைமகள் வித்தி - முல்லைத்தீவு ), பா.சிந்துஜா (கிளிநொச்சி மத்திய கல்லூரி - கிளிநொச்சி), இ.சிந்துஜா ( மீசாலை வீரசிங்கம் ம.வி. - தென்மராட்சி), க.கஜனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி - தென்மராட்சி).

**தமிழியற் கட்டுரை வரைதல்**
**இலக்கியம் நயத்தல்**

க.கஜனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி - தென்மராட்சி) த.மேரி தயாளினி (புனித வளனார் றோ.க.த.வி - மன்னார்), இ.மோகன வதனி (வவுனியா இந்துக் கல்லூரி - வவுனியா தெற்கு).

**இலக்கணப் போட்டி**

தா.கீர்த்தனா (வட.இந்து மகளிர் கல்லூரி - வடமராட்சி), த.தனுஜன் (கனகராயன்குளம் ம.வி - வவுனியா வடக்கு), சி.தனஞ் சிகா (புதுக்குடியிருப்பு ம.கல்லூரி - முல்லைத்தீவு ), சி.கௌதமன் (கிளிநொச்சி ம.வி - கிளிநொச்சி). (தொடரும்...)




# கல்வி முரசு

## ஆங்கிலம் மூலம் அறிவோம்



## Better the foot slip than the tongue




Possible interpretation: It is better to take a bad step in walking than to say the wrong thing in talking. We can do a lot of damage when we say something by mistake. The elliptical nature of this saying may make it difficult to understand. The full version might be something like: "It is better that your foot should slip than that your tongue should slip."

Note: foot (noun): the end part of the leg on which we stand or walk | slip (verb): slide by accident | tongue (noun): large, movable fleshy part in the mouth that we use for talking and tasting

## Ripped




Meaning: intoxicated, drunk, drugged


For example:

Why do people think they have to get ripped on drugs to have a good time?

Mike was drinking way too much at that party. He was totally ripped!

Variety: This slang is typically used in American and Australian English but may be used in other varieties of English too.

## Made of money





Meaning: If you are made of money, you have lots of money.

For example:

When I was in poor countries, everyone thought I was made of money because I could afford to take time off work and travel so far to their country.

That guy Howard acts as if he's made of money, but I know for a fact that he's actually quite poor.



A 79-year-old man was slightly injured on Saturday while waiting in his brand new convertible in a drive-through lane at Burger Prince Restaurant. Herman Sherman of Northville suffered a mild burn about 9:00 p.m. when a young female employee accidentally spilled a cup of coffee into his lap. Sherman said the coffee was hot but not scalding.

He refused medical aid, saying the only problem was the stain on his slacks, but it would wash out. He was given a fresh refill. Before Sherman drove off, the restaurant manager, John Johnson, gave him two free gift certificates—one for an extra-large coffee and one for the restaurant's newest sandwich, the McRap.

The employee, who was a new hire, was let go later that evening. She was quite upset. She said she would probably sue Burger Prince for letting her go. She said it was the man's fault for ordering something that she might be able to spill.

# ஆங்கில மொழி மூலம் நன்றி தெரிவித்தல்




ஆங்கில மொழியினர் தம்மிடையே சிறுசிறு செயல்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளும் பழக்கத்தை வழக்கமாகக் கொண்ட்வர்களாவர். கணவன் மனைவிக்கும், தாய் பிள்ளைக்கும் கூட நன்றி தெரிவித்துக் கொள்வர். இருப்பினும் இடம், சூழ்நிலை, நபர், உதவியின் தன்மை போன்றவற்றின் அடிப்படையில் சம்பிரதாய வழக்கப்படி (Formal) நன்றி சொல்லல், சம்பிரதாய வழக்கின் படி அல்லாமல் (Informal) நன்றி சொல்லல், தாழ்மையுடன் நன்றி சொல்லல், உணர்வு மிகுதியுடன் நன்றி சொல்லல் என பல முறைமைகள் உள்ளன.

உண்மையில் "நன்றி தெரிவித்தல்" என்பதே உணர்வை வெளிப்படுத்தும் ஒரு செயல் அல்லவா? ஆம்! முதலில் நன்றி உணர்வை வெளிப்படுத்தும் முறைமைகள் எத்தனை எனப் பார்ப்போம்.

01. Thanks
02. Thanks for . . .
03. Thanks for your . . .
04. Thanks to . . .
05. Thanks a lot
06. Thanks a lot for . . .
07. Thanks so much
08. Thanks very much
09. ways to say thanks thank you in English
10. Thank you
11. Thank you for . . .
12. Thank you kindly
13. Thank you for your . . .
14. Thank you so much
15. Thank you very much
16. Thank you very much for . .
17. Thank you very much for your . . .
18. I can't thank you enough
19. I don't know how to thank you

இனி இவற்றின் பயன்பாடுகளை விரிவாகப் பார்ப்போம்.

How many ways can say thanks in english

சாதாரணமாக யாரேனும் ஒருவர் ஏதேனும் ஒரு சிறு உதவியைச் செய்தால் அல்லது அன்பாக "எப்படி சுகம்?" என வினவினால் "Thanks" எனலாம். இது ஒரு சம்பிரதாய (Formal) முறைமையாகும்.

How are you?
Fine, thanks.
I'm fine, thanks.
I am very well, thank you.
How is your wife?
She's fine, thanks.
List of Thanks Phrases Words

யாரேனும் ஒருவர் அன்பான அணுகுமுறையுடன் ஏதேனும் ஒன்றை உங்களுக்கு வழங்க முற்பட்டால், அல்லது "வேண்டுமா?" எனக் கேட்டால் அதனை தாழ்மையுடன் ஏற்கும் விதமாக "நன்றி" சொல்லி ஏற்கலாம். (A polite way of accepting sth that sb has offered you.)

Would you like cup of coffee?

Usage thanks and thank you
Oh, thanks.
Thanks very much.
Thanks so much.
usage of thanks

ஏதேனும் ஒன்றை உங்களுக்கு "இன்னும் கொஞ்சம் வேண்டுமா?" என யாரேனும் ஒருவர் கேடடால், அதனை வேண்டாம் என மறுத்துக் கூறுவதுடன், வேண்டுகோளுக்கான நன்றியையும் தாழ்மையுடன் தெரிவித்தல் ஆங்கில வழக்காகும். (A polite way of refusing sth that sb has offered you.)

Would you like some more?
No, thanks.
Do you want some more milk in your coffee?
No that's fine, thanks.
Polite ways to say thanks in aangilam

யாரேனும் ஒருவர் ஏதேனும் ஓர் உதவி அல்லது நன்மை செய்திருந்தால், அதற்கு நீங்கள் மிகுந்த நன்றியைத் தெரிவிக்க விரும்பினால், கீழுள்ளவாறு கூறலாம். (Used to show that you are very grateful to sb for sth they have done.)

Thanks a lot.
Thanks a bunch.
Thanks a million.
Thanks a billion.
Thanks a bundle.
English polite forms
Thanks a lot for your help.
Thanks a lot for all you've done.

சுருக்கமாக நன்றி தெரிவிக்கும் முறைமைகள் சிலவற்றைப் பார்க்கவும்.

Thank you.
Thank you, Mr. Obama.
Thank you, Sir John.
Thank you,Good question.

யாரேனும் ஒருவர் ஏதேனும் ஒரு உதவியை அல்லது அறிவுரையை தாமாகவே வழங்க எத்தனிக்கும் போது, அதனை "என்னால் செய்துகொள்ள முடியும், கேட்டலுக்கு நன்றி" என்பதுப் போன்று கூறும் வழக்கம் ஆங்கிலத்தில் உள்ளது. (To tell sb firmly that you do not need their help or advice.)

Shall I do that?
Can I help you?
I can do it myself, thank you.

ஒருவரது உதவிக்கு தாழ்மையாக (Polite way) நன்றி கூற விரும்பினால்:

"Thank you kindly." எனலாம்.

ஒருவர் செய்த உதவிக்கு அல்லது நன்மைக்கு "எவ்வாறு உங்களுக்கு நன்றி சொல்வதென்றே தெரியவில்லை!" என்பது போல் சம்பிரதாய வழக்காக அல்லாமல் (Informal) நன்றி உணர்வை மிகைப்படுத்திக் கூறும் வழக்கமும் ஆங்கிலத்தில் உள்ளது.

I don't know how to thank you.
I don't know how to thank you for your help.
I don't know how to thank you for your great service.

"உங்களுக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் போதாது" என்பது போன்றும் தமது நன்றி உணர்வை வெளிப்படுத்திப் பேசலாம். (Informal)

I can't thank you enough.
I can't thank you enough for your kindness.
I can't thank you enough for your kind consideration.

செயலை குறிப்பிட்டு நன்றி தெரிவித்தல்

Thanks for . . .
Thanks for your . . .
Thanks very much for . . .
Thank you for . . .
Thank you for your . . .
Thank you so much for your
Thank you very much for your . . .


மேலுள்ள சொற்றொடர்களைப் பாருங்கள். அச்சொற்றொடர்கள் முழுமையானவை அல்ல. அவற்றின் முடிவில் புள்ளிகள் இட்டுக் காட்டப்பட்டுள்ளன. அவற்றை முழுமையான சொற்றொடர்களாக்குவதானால், நீங்கள் எதற்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றீர்களோ, அச்சொல்லை குறிப்பிட்டு நன்றி கூறவேண்டும்.

**எடுத்துக்காட்டாக:**

Thanks for coming.
Thanks for your kindness.
Thanks very much for your kind words
Thank you for not smoking.
Thank you for your comments
Thank you so much for your hospitality.
Thank you very much for your cooperation.

ஒருவர் எந்த விடயத்திற்கு வேண்டுமானாலும் நன்றி தெரிவிக்கலாம். நன்றி உணர்வை மிகுதியாக தெரிவிக்க விரும்பீன் "so much / very much" போன்ற சொற களை இணைத்து தெரிவியுங்கள். ஆனால் நீங்கள் நன்றி தெரிவிக்க விரும்பும் விடயத்தின் ஆங்கிலச் சொற்களை அறிந்து வைத்துக் கொள்ளல் பயன்மிக்கது.

*(to be continued)*



# கல்வி முரசு



ஆங்கிலம் மூலம் அறிவோம்

# How is Rain Formed?

Water in the Air

Rain is a form of precipitation in which water falls back to earth as a liquid. Precipitation that occurs in a solid form is snow or hail. There is always some water in the air, but the amount of water the air can hold depends mostly on temperature. Very warm air can contain more water than cooler air. Sudden drops in temperature can force water to fall, or precipitate, out of the air. In fact, this happens every morning when the cooler night air loses some of its moisture as dew.

The Water Cycle

Water moves on the earth in a great cycle. The water that falls as rain comes mainly from oceans, but also to a lesser extent from lakes and rivers. Heat from the sun causes water to evaporate, that is, to change phase and become a vapor. The water vapor rises and, as it does, reaches a level in the atmosphere where the temperature is cool enough for it to change back into a liquid. The change of phase from vapor to liquid is called condensation — the exact same process that causes steam from a hot shower to fog up a cold mirror.

Water condenses in the air in tiny droplets about 1/100 of a millimeter in diameter, so small they remain aloft as clouds. Usually for rain drops to form there must also be small solid particles suspended in the air. If there air, the water droplets collect around these particles, growing larger and larger. When they are too heavy to remain in the sky, they fall back to earth as rain. The water then runs into lakes, rivers and ultimately the ocean, completing the water cycle.



Other Rain

Rain can also be produced by a process called seeding. Frozen particles of silver iodide, carbon dioxide or salt are released into the air, not only cooling it, but providing a substrate on which water droplets will condense. Cloud seeding is used in the United States to bring rain to drought-stricken areas, to prevent the formation of large hailstones, and to reduce fog around airports. The People's Republic of China has the largest cloud seeding program in the world. Prior to the 2008 Beijing Olympics, China launched rockets with silver iodide over Beijing to induce rain storms which cleared some of the city's notorious air pollution.

High levels of pollution in the atmosphere, especially sulfur and nitrogen, react to form acidic compounds. These can combine with water in clouds to create rain that falls to earth with unusually low pH, a phenomenon called acid rain. Acid rain has harmful effects on plants and animals, including humans, and can damage infrastructure and buildings.

# Types of men that women can't resist

The great question that has never been answered, and which I have not yet been able to answer, despite my thirty years of research into the feminine soul, is "What does a woman want?"

Sigmund Freud the widely regarded father of modern psychology once quoted, the complexity of the female psyche often draws a startling contrast against the perceived simplicity of her male counterpart.

It could be safely assumed that a woman herself is often baffled by her own desires; this is in part owing to the sub conscious nature of human motives that fuel desire, on the other hand centuries of social pressure compelling women to exhibit often nonexistent graces have created inhibitive mechanisms that detach them from their instinctual cravings.

Thankfully social research has now identified a list of attractions that may very well constitute a woman's fantasies. Given below are three primary portrayals of what a woman is looking for in her man!

## The free spirited bad boy

More often than not women find themselves in relationships with men who neither have a steady income nor an ounce of worldly grace and even in the face of such adversity the woman finds it difficult to leave this carefree daredevil. Characteristic of this type of guy is the rugged just got out of bed look coupled with the motor cycle and the drinking problem, we all know the type and we all have at one time or another tried to persuade someone out of such a relationship.

Why he's attractive

The bad boy represents an element of risk and danger that most women appreciate in their lives. The carefree attitude is often seen as deliciously spontaneous and this appeals to the rebel within any woman. Often the unlucky damsel who falls for this guy tries to shape his ways and tame his nature. It isn't unheard of for these relationships to be abusive by nature and the element of consideration is often missing and is replaced by exciting fast paced romances.



## The foreign artist



This is a classic and every girl has been swept off her feet by the mysterious foreign accent and the ambiguous job description. The type includes foreigners, musicians, artists, actors and anything in between. These guys are easily identified by the hordes of admirers and the constant dazed look. Stability isn't the biggest contributor in these relationships.

**Why he's attractive**

Mystery is the primary appeal for women star struck by the artistic type. The artistry directly addresses the sophistication of the female psyche and places these guys on a pedestal far above the rest of the foul mouthed simple minded men in her social circle. These relationships tend to be short lived specially due to the inability of anyone to keep up with the artist's whacky lifestyle while lack of stability and security is also a major obstacle. While the relationship lasts however it isn't uncommon for the target of the artist's adoration to be stifled by romantic over the top gestures that make the rest of us gag, serenading moonlight dinners and long walks on the beach included.

## Mr. Nice guy

This is the guy she most often ends up with but most commonly she needs to get the other two types and a few other types out of her system first. The nice guy is exactly what the name suggests stable guy with no particular area of flare but an actual job and a level of consideration that surpasses most other types. Key indicators of a nice guy is the decent car that's been washed the previous morning, office attire with the shirt tucked in, genuine smile and absolute lack of any fascinating detail in his personality.



Why he's attractive

Security is the name of this game. After all of the great romantics come to an end the typical woman's biological clock ticks with alarming intensity. Evolutionarily women need be provided for and bear children. All of modern day feminism has done very little to get in the way of this innate instinct present in every woman that's where the nice guy fits in. It's the obvious option and the absolute epitome of security more often than not her friends and parents will welcome the nice guy with open arms and immense relief further solidifying her decision. The down side however is whether she will be satisfied with perfection. Cos like the saying goes perfect is so boring and in the moonlight every woman wants to dance with the stars.

By Dilshan Seneratne

# யாழில் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது

## திருநெல்வேலி பால் கொள்வனவு விற்பனை நிலைய பொதுமுகாமையாளர் தயாளினி



(நிரு,சுகன்யா)

கடந்த வருடத்தை விட இந்த வருடம் பால் உற்பத்தி அதிகரித்துள்ளதாக திருநெல்வேலி பால் கொள்வன்வு மற்றும் விற்பனை நிலைய பொது முகாமையாளர் தயாளினி புஸ்பராசா தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டு 98,000 லீற்றராகக் காணப்பட்ட பால் உற்பத்தி, இந்த ஆண்டு 100,000 லீற்றராக அதிகரித்திருக்கின்றது. யாழ் மாவட்டத்தில் ஒரு நாளைக்கு சராசரியாக 3,000 லீற்றருக்கு மேல் கொள்வனவு செய்வதாகவும் மாதம் 100,000 லீற்றர் பால் சேகரிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

1 லீற்றர் பாலை 48 ரூபாவுக்கு கொள்வனவு செய்து, 60 ரூபாவுக்கு விற்பனை செய்வதாக கூறிய முகாமையாளர் தயாளினி புஸ்பராசா, பால் மூலம் தமக்கு கிடைக்கும் வருமானத்தை விட பால் உற்பத்திப்பொருட்கள் மூலம் கிடைக்கும் வருமானமே அதிகம் என்றார்.

இந்த நிலையத்தில் சுவையூட்டிய பால், யோக்கட், மில்க் லொலி, ஐஸ்கிறீம் போன்றவற்றை பாலிலிருந்து உற்பத்தி செய்வதாகவும், இந்த உற்பத்திகளை மேலும் பெருக்குவதற்கு கூலர் வாகனம், ஐஸ்கிறீம் தயாரிக்கும் இயந்திர வசதிகளை அதிகரிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

தைப்பொங்கல், வருடப்பிறப்பு போன்ற பண்டிகை காலங்கள் மற்றும் விரத காலங்களில் பால் வாங்குவோரின் எண்ணிக்கை கூடுதலாக இருப்பதால், பதனிட்டு பக்கெற்களில் அடைக்கப்பட்டிருக்கும் பாலை விற்பனை செய்வதாகவும் கூறியதுடன், இங்கிருந்து பல முன்பள்ளிப் பாடசாலைகளுக்கு பால் விநியோகம் செய்யப்படுவதனால், விடுமுறைக் காலங்களில் பால் அதிகமாக எஞ்சுகின்றது. இதனை சேகரிப்பதற்கான சேமிப்பு கலன்கள் வசதிகள் இங்கு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (சி)

# உயர்தரப் பாடசாலையாகும் கிளி.பாரதி வித்தியாலயம்

(பிரமிலன்)

அரசாங்கத்தின் 1000 பாடசாலைத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி பாரதிபுரத்திலுள்ள கிளி.பாரதி வித்தியாலயம் இந்த ஆண்டு முதல் 1AB பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலையில் இதுவரை காலமும் தரம் 01 தொடக்கம் தரம்11 வரையிலான வகுப்புக்களே நடைப்பெற்று வந்தன. இந்த வருடம் முதல் க.பொ.த உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், முதற்கட்டமாக கலைப்பிரிவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த பாடசாலை அதிபர், 2013 ஆம் ஆண்டளவில் ஏனைய பாடப்பிரிவுகளும் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

கிளி. பாரதி வித்தியாலயத்திற்கு அன்மையில் உள்ள பாடசாலை மாணவர்கள் இனி க.பொ.த உயர்தர கற்கைநெறிகளை இந்தப் பாடசாலையில் கற்கமுடியும் என்றும் அவர் மேலும் கூறினார். (சி)

# உடல், உள சமூக மனவெழுச்சிப் பாதிப்புக்குள்ளான மாணவர்களுக்கு உதவும் நூல்




(பகீ)

2007ஆம் ஆண்டு பல்துறை இலக்கியத்திற்கான உயர் விருதைப் பெற்ற 'விசேடகல்வி அறிமுகமும் பிரயோகங்களும்' என்ற நூல் உடல், உள சமூக மனவெழுச்சிப் பாதிப்புக்குள்ளான மாணவர்களுக்கு பெரிதும் உதவுவதாக இந்த நூலின் ஆசிரியர் யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரி விசேட கல்வித்துறை ஆசிரியர் த.சிவகுமார் குறிப் பிட்டார்.வடமாகாணகல்வி பண்பாட்டு அலுவல்கள், விளை யாட்டு அமைச்சினால் விருது வழங்கபட்டமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் தமிழ் மொழி மூலம் விசேட கல்வித்துறையை யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரியிலேயே முதன்முதலில் ஆரம்பித்து, ஆசிரிய பயில்வை மேற்கொண்டு வருவதாகவும், இந்தத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஆர்வமுள்ளவர்களுக்கும் இந்த நூல் மிகுந்த பயனுடையதாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விசேட கல்வி தேவைப்படும் பிள்ளைகள் சமுதாய வாழ்வில் மகிழ்வுடன் வாழவும், கண்ணியமாக வாழவும், வழிகாட்டுதல் தொடர்பான உயர் சேவைகள் வெளிநாடுகளில் மிக உன்னதமாக மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இத்துறை சார்ந்த விருத்திகள் போதாமையுள்ளன. இதைப் போக்கும் விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களை பல பரிணாமங்களில் மேற்கொள்ளவேண்டியிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாண தேசிய கல்வியற்கல்லூரியினால் வெளியிடப்படப்பட்டுள்ள 'ஒப்பிலாமணி வெற்றிக்கு வழி' என்ற குறுந் திரைப்படத்தில் நடிகராகவும் இந்த நூலாசிரியர் த.சிவகுமார் நடித்துள்ளார். (சி)

# மதுப்பிரியர்களின் அட்டகாசத்தால் முல்லையடி மக்கள் பாதிப்பு

(அனு)

பண்டத்தரிப்பு-முல்லையடிப் பகுதியில் உள்ள சில மதுப்பிரியர்கள் இரவில் போதையில் அயலவர்களுடன் வாய்த் தகராறில் ஈடுபடுவதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

வீட்டில் இருக்கும் பெண்களுடன் தகாத வார்த்தைகளில் பேசுவதாகவும், வீதியில் வீழ்ந்து கிடப்பதாகவும் இவர்கள் பற்றி பல முறைப்பாடுகள் கூறப்படுகின்றன.

இந்த நிலை நீண்ட நாட்களாக காணப்படுவதனால் தாம் இரவில் நிம்மதியாக உறங்க முடியாதுள்ளதாகத் தெரிவித்த அப்பகுதி மக்கள், மதுப்பிரியர்களின் இவ்வாறான செயற்பாடுகள் தமது பிள்ளைகளைப் பாதிப்பதாகவும் குறிப்பிட்டனர். (சி)



# பதிவிறக்கப் பெட்டகம்

**அம்மா!**
**பிறந்த குழந்தை**
**பெற்றவளுக்குச் சூட்டிய பெயர்.**

உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை
உமையவ ளென்றறியீரோ, உணர்ச்சி கெட்டீர்?
பண்டாய்ச்சி ஔவை "அன்னையும் பிதாவும்"
பாரிடை "முன்னறி தெய்வ" மென்றாளன்றோ?
தாய்க்குமே லிங்கேயோர் தெய்வ முண்டோ?
தாய் பெண்ணே யல்லளோ? தமக்கை, தங்கை
வாய்க்கும் பெண் மகவெல்லாம் பெண்ணே யன்றோ?
**– சுப்பிரமணிய பாரதி**

அள்ளி யிடுவது அரிசியோ? ஆத்தாள் தன் தலையில்
கொள்ளி தனை வைப்பேனோ கூசாமல்? – மெள்ள
முகம் மேல் முகம் வைத்து முத்தாடி என்னை
மகனே என அழைத்த வாய்க்கு? **– பட்டினத்தார்**

கண்ணம்மாவைக் கண்டதுண்டா?
நான் – என் அம்மாவைத்தான்
கண்டுள்ளேன்
அவளும் இப்போது இல்லை.
**– நகுலன்**

இப்படி நான்
பாழாய்ப் போவேனென்று
யாருக்குத்தான் தெரியும்
பெத்தவள் புதைந்தாள்
மத்தவர் பார்க்கிறதுக்கு
வேடிக்கைப் பொருள் நான்
**– காலசிவன்**

இப்போது என்னால் பார்க்க முடிகிறது:
அம்மா ஆகாயத்தில் நட்சத்திரங்களின் பின்னே ஓடுவதையும்
சந்திரனின் தட்டிக் கவிழ்ந்த பால்பாத்திரத்தை
நேராக வைப்பதையும்
அயல்கிரகங்களில் பசுவுக்குப் புல் தேடி அலைவதையும்
நட்சத்திரங்களைத் துடைத்துச் சுத்தப்படுத்துவதையும்
பறந்து திரிகின்ற ஆத்மாக்களுடன் பேசுவதையும்
சூரியனின் விடியல் கற்றைகளின் வழியாக
தன் பேரக்குழந்தைகளைத் தழுவக் கை நீட்டுவதையும்
சாரல் மழை வழியாக உலக நிலவரத்தைப் பற்றி
முணுமுணுப்பதையும்
இடிமின்னலின் பூங்குலையினைப் பிடித்துத் துள்ளுவதையும்
எதிர்காலத்தைப் பற்றித் தெளிவடைவதையும்!
**– சச்சிதானந்தன்**

'ஆனா' எனவெழுத்தும் அன்ன பிறபலவும்
நானாய் அறிந்தேனோ? 'நான்' என்னும் – ஊனாய்
எழுந்திருப்ப துன்னால்! இயல்வதெல்லாம் உன்னால்
அழிந்திடுமோ நெஞ்சின் அழல்? **– தவ சஜிதரன்**

வெளிப்பட்டு வீறிச் செல்கிற நீராவி
ஒரு விசையாய் மாறி எந்திரங்களை உருட்டும்
கொதிகலன் நாள்ப்பட நாள்ப்பட இற்றுப் போகும்
வளர்ச்சிப் பாதையின் ஒரு கட்டத்தில்
செடிகளுக்கு விதையிலைகள் வேண்டாதனவாகிவிடும்
குஞ்சுகள் கோழியாகும் சேவல்கள் கூட வரும்
அடைகாத்த சிறகுகளில் இறகுகள் உதிரும்
காற்றோடு போய் அங்கங்கே வேரூன்றி விடுவன வித்துகள்
சாவிலும் கூடத் தாயோடு வருவன
அடிவயிற்றுத் தழும்புகள்
**– ராஜசுந்தர்ராஜன்**

என் முதல் கவிதையை
உன் காலடியில் இடுகின்றேன்
வெடிப்புற்றுக் குருதி வழியும்
உன் பாதங்களை உலர்ந்த
என் மயிரால் துடைத்த பின்னும்
உள்ளிழுத்துக் கொள்கிறாய்
எனக்குத் தெரியும்
நான் நசுக்கிப் போட்ட
உள்ளார்ந்த உன் கனவுகளை
நீ தேனீர் தயாரிப்பதும்
பதார்த்தங்களை
ருசி பார்ப்பதும் போல
எழுதுவதும் வேலையாயிருக்கிறது
உடலில் ஒட்டிய மகரந்தங்களை
தட்டிவிட்டுப் போகும் யதார்த்தத்தோடு
மலைகள் சூழ்ந்த கிராமத்தையும்
உன்னையும் விட்டுப் போகிறேன்
எங்கோ உன் சாயலான பறவை
பெருங்குரலெடுத்து அழுகிறது
**– சுகிர்தராணி**

அன்பில்லா அம்மா,
நீ உடுத்தாத சுடிதாரை
நான் உடுத்தியதும்
உளம் மகிழ்ந்தாய்
நீ ஓட்டாத சைக்கிள்
நான் ஓட்டியதும்
ஆச்சர்யப்பட்டாய்
நீ வாங்காத பட்டம்தனை
நான் வாங்கியதும் பெருமை
கொண்டாய்
அம்மா, என் காதலை மட்டும்
ஏன் மறுக்கிறாய்
வாழ்க்கை
மகிழ, ஆச்சர்யப்பட,
பெருமைப்பட மட்டுமல்ல
நேசிக்கவும்தான்
**– ஜெக.ராஜா**

# இராணுவ நிலத்தை விற்ற விவகாரம் பல நகரங்களில் சி.பி.ஐ. சோதனை

(புதுடில்லி)

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் உயர் பாதுகாப்பு நிறைந்த சிறிநகர் விமான நிலையம் அருகேயுள்ள இராணுவ நிலத்தை விற்றது தொடர்பாக, இராணுவ அதிகாரிகள் மீதும் மற்றும் சிலர் மீதும் சி.பி.ஐ. பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இதையடுத்து, ஜம்மு, சிறிநகர் உட்பட பல இடங்களில் அதிரடி சோதனையும் நடந்தது.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் சிறிநகர் விமான நிலையம் அருகே, இராணுவத்திற்கு சொந்தமான நிலம் உள்ளது. இந்த நிலம், மாநில அரசின் வருவாய்த்துறை ஆவணங்களில், தனியார் பெயருக்கு இருப்பதாகத் தெரியவந்துள்ளது. இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சிலர் இராணுவ அதிகாரிகளை அணுகி தடையின்மை சான்றிதழ் வாங்கியுள்ளனர். அதைப் பயன்படுத்தி அந்த நிலத்தை தங்கள் பெயருக்கு வாங்கியுள்ளனர். இது தொடர்பாக, இராணுவ அமைச்சகத்திற்கு கடந்த ஆண்டு புகார்கள் வந்தன. புகார்கள் குறித்து மேலோட்டமாக விசாரணை மேற்கொண்டபோது, இராணுவ அதிகாரிகள் தடையின்மை சான்றிதழ் வழங்கியதில் முறைகேடுகள் நடந்துள்ளது தெரியவந்துள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் சிறிநகரில் உள்ள இராணுவத்தின் எஸ்டேட்கள் பிரிவு சார்பில், 70 தடையின்மை சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதும், கண்டுபிடிக்கப்பட்டது. இந்த அடிப்படையில், 200 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தை பலர் வாங்கியுள்ளனர்.

சி.பி.ஐ. விசாரணை இதையடுதது இந்த விவகாரம் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. விசாரணை நடத்திய சி.பி.ஐ. பொலிஸார் அஜய் சவுத்ரி என்பவர் உட்பட இராணுவ அதிகாரிகள் சிலர் மீதும் மற்றும் பலர் மீதும் வழக்குப் பதிவு செய்துள்ளனர். வழக்குப் பதிவு செய்யப்பட்டவுடன், ஜம்மு, ஸ்ரீநகர், பாட்னா, டில்லி மற்றும் சண்டிகார் போன்ற நகரங்களில் பல இடங்களில் அதிரடி சோதனையும் நடத்தினர்.

# இந்தியர்கள் 11 பேரை சிறைபிடித்த சோமாலிய கடற்கொள்ளையர்கள்



ஓமன் அருகே சோமாலிய கடற்கொள்ளையர்களால், கப்பலில் இருந்த 11 இந்தியர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

லைபீரிய நாட்டிற்கு சொந்தமான எண்ணெய் கப்பல் ஒன்றை ஓமன் அருகே சோமாலிய கடற்கொள்ளையர்கள் கப்பலைக் கடத்திச் சென்றனர்.

கடத்திச் செல்லப்பட்ட கப்பலில் இந்தியாவைச் சேர்ந்த 11 பேர் பணிபுரிந்து வருவதாகத் தெரியவந்துள்ளது. இதனைத் தொடர்ந்த இந்தியர்களை மீட்கும் பணி நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# புதுக்கோட்டை இடைத்தேர்தலில் அ.தி.மு.க- தே.மு.தி.க. நேரடி போட்டி

புதுக்கோட்டை இடைத்தேர்தலை மற்ற கட்சிகள் புறக்கணித்துள்ள நிலையில், அ.தி.மு.க. - தே.மு.தி.க. இடையே நேரடிப் போட்டி ஏற்பட்டுள்ளது.

புதுக்கோட்டை இடைத்தேர்தல் ஜுன் மாதம் 12 ஆம் திகதி நடக்கிறது. வேட்பு மனு தாக்கல் வருகிற 18 ஆம் திகதி தொடங்குகிறது.

அ.தி.மு.க. சார்பில் கார்த்திக் தொண்டமான் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். இதற்காக 32 அமைச்சர்கள் உட்பட 42 பேர் கொண்ட தேர்தல் பணிக் குழு அறிவிக்கப்பட்டுள்ளது. முக்கிய கட்சியான தி.மு.க.



இடைத்தேர்தலை புறக்கணிப்பதாக அறிவித்தது.


அதேபோன்று பாஜக, ம.தி.மு.க, பா.ம.க., இந்திய கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் போன்ற கட்சிகளும் தேர்தலில் போட்டியிட போவதில்லை என்று அறிவித்துள்ளன.

காங்கிரஸ் இன்னும் தனது முடிவை அறிவிக்கவில்லை. புதுககோட்டை இடைத்தேர்தலில் போட்டியிடுவது குறித்து தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மாவட்ட செயலாளர்களுடன் நேற்று முன்தினம் கோயம்பேட்டில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் தீவிர ஆலோசனை நடத்தி முடிவெடுத்தார்.

புதுக்கோட்டை தேர்தலில் தே.மு.தி.க. போட்டியிட முடிவு செய்துள்ளதாக, கட்சி தலைவர் விஜயகாந்த் நேற்று காலை அறிவித்தார். எதிர்வரும் 13ஆம் திகதி தே.மு.தி.க வேட்பாளர் அறிவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போது அதிமுகவும் தே.மு.தி.க.வும் நேரடியாகமோதும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தே.மு.தி.க வேட்பாளர் அறிவிக்கப்பட்ட பிறகு தேர்தல் களம் சூடு பிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போட்டியிலிருந்து விலகிய கட்சிகளும் யாருக்கு ஆதரவு என்பதை தெரிவிக்கவில்லை. அவர்கள் அறிவிப்பை பொறுத்து, தேர்தல்களம் விறுவிறுப்படையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.







# கணவனை மிரட்டுவதற்காக ஜெயலலிதாவிற்கு கொலை மிரட்டல்

(சென்னை)

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு ஈமெயில் மூலம் கொலை மிரட்டல் விடுத்ததாக பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறிவில்லி புத்தூரைச் சேர்ந்த வசந்தா என்ற அந்த பெண், தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வருகிறார்.

கணவனுடன் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து அவரை பழிவாங்கும் நோக்கில் வசந்தா, முதலமைச்சரின் போயஸ்கார்டன் அலுவலகத்திற்கு, தனது கணவர் நாச்சிமுத்து பெயரில் அவருடைய ஈமெயிலிருந்து



முதலமைச்சருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது.

இதேபோன்று மதுரை மீனாட்சி அம்மன் கோயில் மற்றும் சிறிவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயிலுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்ததும் வசந்தா தான் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

# பிரதமர் தீர்வு காண வேண்டும்



(மதுரை)

ஏர் இந்தியா பிரச்சினையில் பிரதமர் மன்மோகன்சிங் தலையிட்டு தீர்வுகாண வேண்டும் என மூத்த விமானிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

மத்திய அரசுக்கு சொந்தமான ஏர் இந்தியா மற்றும் இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனங்கள் 2007 ஆம் ஆண்டு ஒரே நிறுவனமாக சேர்க்கப்பட்டது. அப்போது முதல் ஏர் இந்தியா விமானிகளுக்கும் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானிளுக்குமிடையே சம்பள உயர்வு, பதவி உயர்வு தொடர்பாக பிரச்சினை இருந்து வருகிறது.

வேலைநிறுத்தப் போராட்டம் சட்டவிரோதம் என அறிவித்த நிலையிலும் 5 ஆவது நாளாக நேற்றும் வேலைநிறுத்தம் நீடித்தது. அதனால் 16 விமானங்கள் இரத்து செய்யப்பட்டன. போராட்டத்தை கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என விமான போக்குவரத்து அமைச்சர் அஜீத் சிங் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஏர் இந்தியா நிறுவனத்தின் எக்ஸிகியூடிவ் விமானிகள் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளனர். விமானிகள் வேலை நிறுத்தத்தில் பிரதமர் தலையிட்டு பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் எனவும் ஏர் இந்தியாவும் இந்தியன் ஏர்லைன்சும் ஐக்கியமானபோது செய்யப்பட்ட உடன்பாடுகளை நிர்வாகம் மீறி வருவதாகவும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

# ஆதீனம் மீட்புக்குழு அமைப்பு நித்திக்கு எதிராக நிறுவப்பட்டது

(மதுரை)

மதுரை ஆதீனமாக நியமிக்கப்பட்டுள்ள நித்தியானந்தாவிற்கு எதிராக "மதுரை ஆதீனம் மீட்புக்குழு" என்ற பெயரில் மீட்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

கிரிமினல் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள நித்தியை மதுரை ஆதீனமாக நியமித்ததற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்த அமைப்பு நிறுவப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நித்தியை கைது செய்தால் தான், மதுரை ஆதீனம் அருணகிரிநாதரை மீட்க முடியும் என்று அந்தக் குழு கருத்து தெரிவித்துள்ளது. இதனையடுத்து மீட்புக்குழுவினர் நாளை போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர்.

இந்த அறிவிப்பை அடுத்து, பொலிஸ் பாதுகாப்பபு அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், நித்தியை ஆதீனம் பதவியிலிருந்து நீக்கும் வரை மீட்புக்குழுவின் போராட்டம் தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இனி அமைதியாக இருக்க மாட்டேன்

(சென்னை)

இனி அமைதியாக இருக்க மாட்டேன் என சசிகலாவின் கணவர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

நில மோசடி வழக்கில் சசிகலா கணவர் நடராஜன் கடந்த பெப்ரவரி 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவர் மீது அடுத்தடுத்து 6 வழக்குகள் பதிவு செய்யப்பட்டது.

அனைத்து வழக்குகளிலும் ஜாமீன் கிடைத்ததால் 81 நாள் சிறைவாசத்துக்கு பிறகு நடராஜன் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

பின்னர் திருச்சி கே.கே.நகரில் உள்ள உறவினர் வீட்டில் நிருபர்களுக்கு நடராஜன் அளித்த பேட்டியில்,

என் மீது போடப்பட்ட வழககுகள் அனைத்தும் பொய் வழக்குகள். என் மீது போடப்பட்ட 6 வழக்கில் 2 பேர் தற்போது வாபஸ் பெற்றுள்ளனர்.

நில அபகரிப்பு சட்டத்தை என் மீது மோசடியாகப் பயன்படுத்தி உள்ளனர். இதற்காக தலைமைச் செயலாளர், முதன்மை செயலாளர், உட்துறை செயலாளர், டி.ஜி.பி, திருச்சி ஐ.ஜி, டி.ஐ.ஜி உள்ளிட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க சென்னை ஐகோர்ட்டில் 3 ரிட் மனுக்களை தாக்கல் செய்துள்ளோம்.

ஜெயலலிதா வீட்டிலிருந்து நான் வெளியேறி 20 ஆண்டுகள் ஆகிறது. ஒருபோதும் அவருக்கு எதிராக துரோகம் நினைத்தது கிடையாது.

ஆட்சியை கவிழ்க்கவும் நினைத்ததில்லை. என்னை கட்சியிலிருந்து நீக்கியதாக அறிக்கை வெளியிட்டார். நான் கட்சியில் உறுப்பினராகவே இல்லை. அப்படி இருந்ததாக அவர்களால் நிரூபிக்க முடியுமா? கடந்த 25 ஆண்டாக அவர்கள் விரும்பா விட்டாலும், நானாகவே ஓடோடி சென்று சேவை செய்தேன்.

அவர்கள் என்ன செய்தாலும் அமைதியாக இருந்தேன். இனி அப்படி இருக்க மாட்டேன். நேரடியாக அரசியலில் இறங்குவேன். புதிய கட்சி தொடங்குவது பற்றி இப்போது சொல்ல விரும்பவில்லை. இவ்வாறு நடராஜன் தெரிவித்தார்.

# புனித நூல்கள் எரிக்கப்பட்டதற்கு பழிதீர்க்க இணைய வேண்டும்

## அல் ஜவாஹிரி அழைப்பு

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க விமானப் படைத் தளத்தில் கடந்த பெப்ரவரி மாதம் இஸ்லாமியர்களின் புனித நூல்கள் எரிக்கப்பட்டன. இதற்கு பழிதீர்க்க முஸ்லிம்கள் இணைய வேண்டும் என அல்கொய்தா இயககத்தின் தலைவர் அல் ஜவாஹிரி, இணையத்தளமான அல்ஹஹாபில் வெளியிட்டுள்ள ஒலிநாடா செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், உங்களது நாடுகளை ஆக்கிரமித்து உங்களது செல்வத்தைக் களவாடி புனித அத்துமீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருபவர்களுக்கு எதிராகப் போராடுவதன் மூலம் புனித நூல் எரிக்கப்பட்ட சம்பவத்துக்கு முஸ்லிம்கள் பழிதீர்க்க வேண்டும் என தெரிவித்தார்.

மேலும் அமெரிக்காவும், அதனது நட்புறவு நாடுகளும் குற்றங்களைப் புரிந்து விட்டு பின்னர் மன்னிப்புக் கேட்டு பாசாங்கு செய்வதாக குற்றம் சாட்டினார். புனித நூல்கள் குப்பைகள் எரிக்கும் பகுதிக்கு தவறுதலாக அனுப்பப்பட்டுள்ளதாக அமெரிக்கா மன்னிப்புக் கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# சிறிய இலட்சாதிபதி



அவுஸ்ரேலியாவின் மெல் போர்ன் நகரைச் சேர்ந்த ஐயேலிதா அன்ட்ரே(வயது-5) என்பவர் தனது ஓவியங்கள் மூலம் 100 000 இஸ்ரேலிங்பவுணகளுக்கும் அதிகமாக சம்பாதித்து சாதனை படைத்து வருகின்றார்.

இவருக்கு 2 வயதான போதிலிருந்தே நவீனமுறையில் சித்திரம் வரைவதில் ஆர்வம் இருந்து வந்துள்ளது.

இதை ஊக்குவித்த இவரது பெற்றோர்களின் உதவியுடன் இவர் வளரத்தொடங்கியதிலிருந்து நவீனமுறையில் சித்திரம் வரைவதை ஒரு தொழிலாகவே மாற்றி செய்து வருகின்றார்.

இவர் வரைந்த மிகக் குறைந்த விலையுடைய ஓவியங்களே 3000 இஸ்ரேலிங்பவுண் பெறுமதி வாய்ந்தவை.

ஓவியத் திறமை மேலும் மெருகேற இவர் வரையும் ஓவியங்களுக்கு விலையும் அதிகரித்தது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# கிரேக்க எண்ணெய்க் கப்பல் கடத்தல்

(ஏதென்ஸ்)

கிரேக்கத்துக்குச் சொந்தமான எண்ணெய்க் கப்பல் அரபியக் கடல் பகுதியில் கடத்தப்பட்டுள்ளது. இந்தக் கப்பலில் 1.35 இலட்சம் டன் கச்சா எண்ணெய் இருந்தது. வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் இந்தக் கப்பல் கடத்தப்பட்டதாக கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

லைபீரிய கொடியுடன் துருக்கியிலிருந்து புறப்பட்ட இந்தக் கப்பல் ஓமானுக்கு சோமாலியா வழியாகச் சென்று கொண்டிருந்தது.

இந்தக் கப்பலுடனான தொடர்பு முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தக் கப்பல் கடத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

சோமாலியா வழியாக கப்பல்கள் செல்வது மிகவும் ஆபத்தானதாகக் கருதப்படுகிறது. கடந்த ஆண்டில் மட்டும் இப்பகுதியில் 230 முறை கடற்கொள்ளையர்கள் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். 2008ஆம் ஆண்டிலிருந்து இப்பகுதியில் 10 கடற்படைக் கப்பல்களை ஐரோப்பிய யூனியன் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 4 கிராமங்கள் மூழ்கின; 28 பேர் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் மேற்குப் பகுதியில் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தில் சிக்கி 28 பேர் உயிரிழந்தனர். 20இற்கும் மேற்பட்டவர்களைக் காணவில்லை.

வியாழக்கிழமை இரவு பெய்த தொடர்மழை காரணமாக நான்கு கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின. வடக்கு தக்கார் மாகாணத்தின் பெரும்பாலான கிராமங்களை வெள்ளம் சூழ்ந்தது.

வியாழக்கிழமை நடு இரவில் வெள்ளம் சூழ்ந்ததால், பெரும்பாலான மக்கள் இந்த ஆபத்தை உணரவில்லை. இதனால் இறந்தவர்கள் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

ஆப்கானில் வெள்ளப்பேரழிவு



பெருமளவு வீடுகள் முற்றிலுமாக வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. இது, ஆப்கானில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய இயற்கைப் பேரழிவாகும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். வெள்ளம் சூழ்ந்த கிராமங்கள் நாட்டின் பிற பகுதிகளிடமிருந்து முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால் இக்கிராமங்களுக்கு விமானம் அல்லது ஹெலிகொப்டர் மூலம் மட்டுமே செல்ல முடியும் சூழல் உருவாகியுள்ளது.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட வெள்ளத்தில் 26 பேர் உயிரிழந்தனர். அப்போது 100இற்கும் அதிகமானோரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இப்போது புதிதாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் 28 பேர் உயிரிழந்துள்ளனர்.

# ஒரு நாளைக்கு எட்டுமுறை



பெண்கள் தங்கள் அழகை சரி செய்து கொள்ள, ஒரு நாளைக்கு குறைந்தது எத்தனை முறை கண்ணாடி .பார்க்கின்றனர் என்பது குறித்து சமீபத்தில் ஆய்வு நடத்தப்பட்டது.

பெண்களுக்கு அழகுணர்வு அதிகம். இதனால் தான் பெண்களின் அலங்காரப் பொருட்களை மையப்படுத்தி பல்வேறு நிறுவனங்கள் இலாபம் சம்பாதித்து வருகின்றன.

லண்டனைச் சேர்ந்த "சிம்பிள் ஸ்கின் கேர்" என்ற நிறுவனம், 2,000இற்கும் அதிகமான பெண்களிடம் ஓர் ஆய்வை நடத்தியது.

.இந்த ஆய்வின்படி ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் பெண்கள் எட்டு முறை கண்ணாடி முன் நின்று, தங்கள் அலங்காரத்தை சரி செய்து கொள்கின்றனர்.

கார்க்கண்ணாடி, கடைகளில் வைக்கப்பட்டுள்ள நிலைக்கண்ணாடி, குளிர்ச்சிக்கண்ணாடி என பல கண்ணாடிகளில் இவர்கள் தங்கள் அலங்காரங்களைச் சரி செய்து கொள்வதாக தெரியவந்துள்ளது.

ஒரு காரை கடந்து செல்லும் போது, அதில் உள்ள கண்ணாடியில் குனிந்து பார்த்து தங்கள் அலங்காரத்தை சரிபார்த்துக் கொள்வதாக 10 பேரில் ஒரு பெண் ஒப்புக்கொள்கின்றார்.

குளியலறை கண்ணாடியில் தாங்கள் அழகாகத தெரிய வேண்டும் என, மூன்றில் ஒரு பெண்கள் கண்டிப்பாக எதிர்பார்க்கின்றனர் என இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

மான்செஸ்டர் பல்கலைக்கழக பேராசிரியர் கிறிஸ்டின் பண்டி குறிப்பிடுகையில், பெண்கள் என்ன தான் வேலையாக இருந்தாலும், தன்னுடைய தோற்றப் பொலிவு நன்றாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர். தோற்றப் பொலிவு நன்றாக உள்ள பட்சத்தில் அவர்களுடைய நம்பிக்கையும் அதிகரிக்கிறது என்றார்.

# கொலைக்குற்றவாளி மீது பாதணி வீச்சு

நோர்வேயில் கடந்தாண்டு துப்பாக்கி சூடு மூலமும், கார்க்குண்டுத் தாக்குதல் மூலமும் 77 பேரைக் கொலை செய்த ஆண்டர்ஸ் பெரிங் ப்ரவீக் மீது நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர், தனது பாதணியை வீசியதால் பரபரப்பு ஏற்பட்டது.

ஒஸ்லோ நகரிலுள்ள நீதிமன்றில் ப்ரவீக் வாக்குமூலம் அளித்துக் கொண்டிருந்த போது, ப்ரவீக்கினால் கொல்லப்பட்ட ஒருவரின் சகோதரர் பாதணியை வீசினார்.

நீ எனது சகோதரனை கொலை செய்தாய், நரகத்துக்குப் போ எனக் கூறியவாறு அந்நபர் பாதணியை வீசியுள்ளார்.

# பி.பி.சி.யில் வானிலை அறிவிப்பு இளவரசர் சார்ள்ஸ் வாசித்தார்




பிரித்தானியாவின் இளவரசர் சார்லஸ் அந்நாட்டின் ஊடக நிறுவனமான பிபிசியில் வானிலை அறிவிப்புகளுக்கான செய்தி வாசித்தார். தனது மனைவி கேமிலாவுடன் ஸ்கொட்லாந்தில் சுற்றுப் பயணம் செய்து வருகின்ற சார்ள்ஸ், அங்கு பிபிசி டிவி ஸ்டுடியோவை சுற்றிப் பார்த்தார். பின்னர் பிபிசி செய்தியில் வானிலை தொடர்பான தகவல்களை வாசித்தார்.

எந்த பதற்றமும் இல்லாமல் கமராவை நேரடியாக பார்த்து, ஸ்கொட்லாந்தில் மழை பெய்யுமா, பனிப்பொழிவு நீடிக்குமா போன்ற வானிலைத் தகவல்களை தெளிவாகக் கூறினார். வானிலை தகவல் கூறும்போது தனக்கே உரிய பாணியில் சில கூடுதல் தகவல்களையும் கூறி அனைவரையும் ஆச்சரியப்படுத்தினார். சார்ள்ஸைத் தொடர்ந்து கேமிலாவும் வானிலை செய்திகளை படித்தார்.

இதுகுறித்து பிபிசி வானிலை செய்தியாளர் ஸ்டேவ் டனோஸ் கூறுகையில், இளவரசர் சார்ள்சும் அவருடைய மனைவி கேமிலாவும் நன்கு அனுபவம் வாய்ந்தவர்களை போல வானிலை செய்திகளை அழகாக கூறினர் எனத் தெரிவித்தார்.

# நேட்டோ விநியோக மார்க்கங்களை பாகிஸ்தான் திறக்க வேண்டும்



ஆப்கானிஸ்தானிலுள்ள நேட்டோ படையினருக்கான விநியோக மார்க்கங்களை பாகிஸ்தான் மீண்டும் திறக்க வேண்டுமென நேட்டோ அமைபபின் செயலாளர் நாயகம் அண்டர்ஸ் போக் ரஸ்முசேன் வலியுறுத்தியுள்ளார்.

விநியோக மார்க்கங்களை திறக்காத பட்சத்தில் ஆப்கானின் எதிர்காலம் குறித்த முக்கிய பேச்சுவார்த்தைகளை பாகிஸ்தான் தவறவிடலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் 20 மற்றும் 21ஆம் திகதிகளில் அமெரிக்காவின் சிக்காகோவில் நேட்டோ மாநாடு நடைபெறவுள்ள நிலையில், இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நேட்டோ படையினர் எல்லை தாண்டி நடத்திய தாக்குதலில் 24 பாகிஸ்தான் படையினர்கள் கொல்லப்பட்டதை அடுத்து, இந்த மார்க்கங்களை பாகிஸ்தான் மூடியிருந்தது.


இந்நிலையில், விநியோக மார்க்கங்களை வழங்குமாறு பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளிடம் நேட்டோ மாநாட்டில் கோரிக்கை விடுக்கப்படவுள்ளதாகவும் நேட்டோ அமைப்பின் செயலாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.



# கணினி உலா

AJ.Nimalrajan

## சூரிய சக்தியில் இயங்கும் Key board




Logitech நிறுவனம் கணினிகளுக்கு பயன்படுத்தப்படும் keyboard சூரியசக்தியில் இயங்கக்கூடிய வயர்களற்ற மநலboard ஆக அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்கு முன்னர் இருந்த வயர்களற்ற keyboardகள், பற்றரி மூலமே இயங்கி வந்தது. ஆனால் Logitechன் புதிய keyboard சூரிய ஒளியின் மூலம் இயங்குகிறது. ஒரு தடவை முழுமையாக சார்ஜ் செய்தால் சுமார் 3 மாத காலம் வரை தொடர்ச்சியாக இதனைப் பயன்படுத்த முடியுமென Logitech நிறுவனம் தெரிவிக்கின்றது. இதன் விலை 80 அமெரிக்க டொலர்கள்.

## புரோகிராம்களை பாதுகாக்க

உங்களது கணினியை பலரும் பயன்படுத்தும் வகையில் இருந்தால், நீங்கள் பயன்படுத்தும் புரோகிராம்களை மற்றவர்களுக்கு தெரியாதபடி மறைக்கலாம்.

குறிப்பிட்ட சில புரோகிராம்களை மட்டுமே மற்றவர்கள் கையாளும் வகையில் அமைக்கலாம். (உங்களிடம் இருப்பது விண்டோஸ் 7 ஹோம் பதிப்பு என்றால் இதனைச் செயல்படுத்த முடியாது.)




விண்டோஸ் ஸ்டார்ட் மெனு செல்லுங்கள். அங்கு gpedit.msc என டைப் செய்திடவும். பின்னர் எண்டர் அழுத்துங்கள். இங்கு கிடைக்கும் User Configuration பட்டியலில் Administrative Template என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

இப்போது ஒரு புதிய பட்டியல் கிடைக்கும். இதில் சிஸ்டம் என்ற கோப்பறையில் கிளிக் செய்திடவும். இனி வலது பக்கம் இருக்கும் பிரிவில் கீழாகச் சென்று Run Only Specified Windows Application என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

இங்கு Enable என்று உள்ள ரேடியோ பட்டனில் செக் செய்திடவும். அடுத்து ஒப்ஷன் தலைப்பில் உள்ள Show என்ற பட்டனில் கிளிக் செய்திடவும்.


இப்போது ஷோ டயலொக் பொக்ஸ் கிடைக்கும். மற்ற பயனாளர்களுக்கான அப்ளிகேஷன் புரோகிராம்களை இயக்க ஒவ்வொரு வரியிலும் அப்ளிகேஷன் பெயர்களை அமைத்து பின்னர் ஓ.கே பட்டனைக் கிளிக் செய்திடவும்.

எடுத்துக்காட்டாக ஒருவருக்கு ..பயர்..பொக்ஸ் பிரவுசர் இயக்கும் அனுமதி வழங்க, ஒரு வரியில் Firefox.exe என எழுதவும். பிற பயனாளர்கள் இது போல அனுமதி வழங்கப்படாத புரோகிராம்களை இயக்க முயற்சி செய்தால் இந்த புரோகிராம் இயங்க தடை அமைக்கப்பட்டுள்ளது என்ற செய்தி கிடைக்கும்.

## வைரஸ் தாக்கிய Pen drive இல் இருந்து பைல்களை மீட்டெடுக்க



தற்பொழுது தகவல்களை சேமிக்க பயன்படுத்தப்படுவது USB பென்ட்ரைவ்கள். இதில் முக்கியமான பிரச்சினை வைரஸ் பிரச்சினை வெவ்வேறான கணினிகளில் உபயோகிப்பதால் வைரஸ்கள் சுலபமாக பென்ட்ரைவில் புகுந்து உள்ளே இருக்கும் பைல்களை பாதிக்கிறது. இப்படி பாதிக்கும் பொழுது உங்கள் பென்ட்ரைவில் உள்ள பைல்கள் மறைக்கப் பட்டுவிடும் கணினியில் பென்ட்ரைவை ஓபன் செய்தால் எந்த பைல்களும் இருக்காது காலியாக இருக்கும் ஆனால் properties சென்று பார்த்தால்பைல்கள் இருப்பது போன்றே அளவு காட்டும் காரணம் நம் தகவல்களை வைரஸ்கள் மறைத்து வைத்துவிட்டது. பென்ட்ரைவில் முக்கியமான தகவல் ஏதும் இல்லை எனில் Format செய்து பென்ட்ரைவை திரும்ப பெறலாம். ஆனால் ஏதேனும் முக்கியமான தகவல்கள் இருந்தால் எப்படி அந்த பைல்களை பத்திரமாக மீண்டும் கொண்டு வருவது என பார்ப்போம்.




இதற்கு நீங்கள் எந்த மென்பொருளையும் உங்கள் கணினியில் இன்ஸ்டோல் செய்து உபயோகிக்க வேண்டியதில்லை.உங்கள் கணினியிலேயே சுலபமாக செய்து விடலாம். கீழே உள்ள வழிமுறையின் படி கவனமாக செய்து அந்த பைல்களை மீட்டு எடுக்கலாம்.

1) முதலில் பென்ட்ரைவை உங்கள் கணினியில் சொருகி கொள்ளுங்கள்.

2) Start ==> Run ==> CMD ==> Enter கொடுக்கவும்.


3) இப்பொழுது பென்ட்ரைவ் எந்த ட்ரைவில் உள்ளது என பாருங்கள். ஆல Computer செல்வதன் மூலம் கண்ட றியலாம்.

4) உதாரணமாக E: டிரைவில் பென்ட்ரைவ் இருககிறது என வைத்து கொள்வோம் அதற்கு நீங்கள் E: என கொடுத்து Enter அழுத்தவும்.


5) attrib -s -h /s /d *.* என டைப் செய்யுங்கள் ஒவ்வொரு பகுதிக்கும் Space சரியாக கொடுக்கவும். உதவிக்கு கீழே உள்ள படத்தை பார்க்கவும் உங்களின் விண்டோ இது போல இருக்க வேண்டும்.

- நீங்கள் சரியாக கொடுத்து உள்ளீர்கள் என உறுதி செய்து கொண்டு Enter அழுததுங்கள்.
- சில வினாடிகள் பொறுத்திருங்கள். இப்பொழுது உங்கள் பென்ட்ரைவ் சோதித்து பாருங்கள் உங்களுடைய பைல்கள் அனைத்தும் திரும்பவும் வந்திருக்கும்.


## கூகுள் ட்ரைவை பயன்படுத்தி PDF DOC XLS பைல்களை ப்ளொக்கரில் தெரிய வைக்க




கூகுள் டிரைவ் அளிக்கும் ஒரு பயனுள்ள வசதி இது. ப்ளொக்கர் வலைப்பூக்களில் நேரடியாக PDF பைல்களை அப்லோட் செய்ய முடியாது என்பதால் கூகுள் ட்ரைவை பயன்படுத்தி எப்படி PDF பைல்களை வலைப்பூக்களில் தெரிய வைப்பது எப்படி என காணலாம்.




- முதலில் உங்களின் கூகுள் ட்ரைவ் க்ணக்கை Open செய்து கொள்ளுங்கள். அதில் உள்ள UPLOAD பட்டனை அழுத்தி ப்ளொக்கரில் காட்ட வேண்டிய பைலை அப்லோட் செய்து கொள்ளுங்கள்.
- உங்கள் பைல் அப்லோட் ஆகி முடிந்ததும்கீழே இருப்பதை போல விண்டோ இருக்கும். அதில் உள்ள உங்களின் பைல் மீது க்ளிக் செய்யவும்.




- அப்லோட் செய்தfile மீது க்ளிக் செய்தவுடன் அந்த பைல் இன்று விண்டோவில் open ஆகும்.
- அதில் FILE - EMBED என்பதை அடுத்தடுத்து க்ளிக் செய்யவும்.




EMBED என்பதை கொடுத்தவுடன் உங்களுக்கு ஒரு கோடிங்க காட்டும்

அதை முழுவதுமாக கொப்பி செய்து கொள்ளுங்கள்.


- உங்கள் ப்ளொக்கர் தளத்தில் போஸ்ட் எடிட்டரில் Edit HTML மோடில் பேஸ்ட் செய்யவும்.
- அடுத்து எப்பொழுதும் போல PUBLISH POST என்ற பட்டனை அழுத்தி போஸ்ட்டை வெளியிடவும்.

## விண்டோஸ் 7இன் Start Menu ஐ விண்டோஸ் 8இல் பெறுவதற்கு





கணினி உலகின் அரசனாகத் திகழும் மைக்ரோசொப்ட் நிறுவனமானது தனது விண்டோஸ் இயங்குதளத்தின் புதிய பதிப்பான விண்டோஸ் 8 ஐ அண்மையில் வெளியிட்டிருந்தது. இது முற்று முழுதாக முன்னைய பதிப்பின் பயனர் இடைமுகத்திலிருந்து வேறுபட்டதாக காணப்படுகின்றது.

மேலும் விண்டோஸ் 7இல் Task bar காணப்படும் பகுதியில் Charms Bar எனும் புதிய அம்சம் காணப்படுகின்றது. இதனை உங்களுக்கு கையாளக் கடினமாக இருப்பின் நீங்கள் பழைய பதிப்பான விண்டோஸ் 7ன் Start Menu ஐ வரவழைத்து பயன்படுத்த முடியும். இதற்கு கீழ்காணப்படும் படிமுறைகளை பின்பற்றுக.



1. Win+r ஆகிய விசைகளை அழுத்தியாவாறு Enter விசையை அழுத்தவும்.

2.தோன்றும் Registry Settings விண்டோவில் HKEY_ CURRENT_USER_Software\M icrosoft\ Windows\ CurrentVersion என்பதை தெரிவு செய்யவும்.




3. பின்பு விண்டோவின் வலது பகுதியில் காணப்படும் RPEnabled என்பதை double click செய்க.


4. தொடர்ந்து தோன்றும் DWORD விண்டோவில் Data Value ஐ 0 என டைப் செய்து OK என்பதை கிளிக் செய்க.

# ரோகித் சர்மா அதிரடி சதம்
# மும்பையிடம் வீழ்ந்தது கொல்கத்தா

(கொல்கத்தா)

ரோகித் சர்மாவின் அதிரடியான சதத்தின் மூலம் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் 27 ஓட்டங்களால் மும்பை இன்டியன்ஸ் அணி வெற்றிபெற்றது. ஐ.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் 58 ஆவது போட்டி நேற்று கொல்கத்தா மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மும்பை இன்டியன்ஸ் அணி 15 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதலாவது விக்கெட்டை இழந்தது. இதனைத் தொடர்ந்து இணைந்த கிப்ஸ், ரோகித் சர்மா இணை மிகச் சிறப்பான அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது. இறுதியில் மும்பை இன்டியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரோகித் சர்மா 60 பந்துகளை எதிர்கொண்டு 5 சிக்ஸர்கள், 12 பவுண்டரிகள் அடங்கலாக 109



ஓட்டங்களையும், கிப்ஸ் 60 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர். பதிலுக்கு 183 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கலிஸ் 79, யூசுப் பதான் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் முனாப் பட்டேல், போலாட், ஸ்மித் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக ரோகித் சர்மா தெரிவானார்.

இதேவேளை, இப்போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் 100 சதங்கள் அடித்த சாதனை வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு மேற்கு வங்காள மாநில முதல்வர் மம்தா பானர்ஜி தங்கத் துடுப்பு வழங்கிக் கௌரவித்தார். இவ்விழாவை மேற்கு வங்காள மாநில அரசும் பெங்கால் கிரிக்கெட் சங்கமும் இணைந்து ஒழுங்கு படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க...

சந்தித்து அரசதரப்புக் குழுவினர் விளக்க மளிக்க உள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தலைமையிலான அரசதரப்புக் குழுவினர் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை அமெரிக்கா செல்லவுள்ளது. இக்குழுவில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன மற்றும் அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## தனியாரின்...

இருக்கவில்லை. இந்த நிலையில் நேற்று நண்பகல் திடீரென குறித்த வீட்டிற்கு வருகைதந்த பிரதேச சபை ஊழியர்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றி, மதில் கட்டுவதற்கென அறுக்கப்பட்ட கொங்கிறீட் கற்கள், மற்றும் கட்டுமான கல் என்பவற்றைத் தமது வாகனங்களில் ஏற்றிச்சென்றுள்ளனர். இந்தப் பொருட்கள் ஏற்றிச்சென்றமைக்கான எவ்வித ஆதாரங்களும் வீட்டு உரிமையாளரிடம் கையளிக்கப்படவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக வலி.தெற்குப் பிரதேச சபைத் தலைவர் பிரகாஸிடம் தொடர்புகொண்டு கேட்டபோது,

மதில் கட்டுவது தொடர்பாக அயலவர்கள் கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையிலும், குறித்த வீட்டின் உரிமையாளர் மதிலைக் கட்டிவிடக் கூடாது என்பதற்காகவுமே தாம் கட்டடப் பொருட்களை ஏற்றியதாகவும், அவ்வாறு ஏற்றுவதற்குப் பிரதேச சபைக்கு உரிமை உள்ளது எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக சட்ட வட்டாரங்கள் தகவல் தருகையில், எவ்வித முன்னறிவித்தலுமின்றி, தனிநபர் ஒருவரின் காணிக்குள் அத்துமீறி நுழைந்து பொருட்களை ஏற்றிச் செல்ல முடியாதெனவும், வரிகட்டத் தவறினால் மட்டுமே வீட்டிலுள்ள பொருட்களைப் பிரதேச சபை எடுத்துச் செல்ல முடியுமெனவும் தெரிவித்தார். வலி. தெற்குப் பிரதேச சபையைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே நிர்வகித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## பொன்னாலை...

சபை உறுப்பினர்களான பாலகிருஷ்ணன் (ஜீவன்), செல்வராசா சீறிதரன் (சேகர்) ஆகியோர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அமைச்சர் எடுத்த பெரு முயற்சியின் காரணமாகவே மீளவும் இவ் வீதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நெல்லியான், திருவடிநிலை பாண்டைவட்டை போன்ற பகுதி மக்களுக்கும் கடற்றொழில் மற்றும் மயானம் போன்ற பகுதிகளுக்குச் செல்பவர்களுக்கும் பொன்னாலை - கீரிமலை பிரதான வீதி திறப்பானது அவர்களின் இலகுவான போக்குவரத்துக்கு வழியேற்படுத்தப்பட்டுள்ளது.

## மீனவர் அத்து...

பேச்சுவார்த்தைகளை நடத்திப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளவே தாம் விரும்புவதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன கூறினார்.

ஆயிரக்கணக்கான இந்திய ரோலர் படகுகள் நாளாந்தம் இலங்கை கடற்பரப்புக்குள் நுழைவதால் இலங்கை நீர்ப்பரப்பில் மீன் குறைவடையும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சர்வதேச கடல் எல்லைச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி இந்திய மீனவர்களை இலங்கை நட்பின் அடிப்படையில் அண்மையில் விடுவித்திருந்தது.

அதேநேரம், இலங்கை மீனவர்கள் 20 பேரை இந்தியா கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் விடுவித்திருந்தது. இவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் மீன்பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டதாக மீன்பிடித்துறை அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர். மீனவர் களின் படகுகள் சர்வதேச கடல் எல்லையைத் தாண்டிச் செல்வதைத் தடுப்பதற்கு படகுகளைக் கண்காணிக்கும் திட்டம் கூடிய விரைவில் அமுல்படுத்தப்படவிருப்பதாகவும் இது செய்மதியின் ஊடாகக் கட்டுப்படுத்தப்படும் என்றும் அமைச்சு அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

## டெனிஸ்...

ஆண்டு வரை வைப்பில்லிட்ட விபரம் மட்டும் இருப்பதாக ஊழியர்கள் தெரிவித்தனர். குறித்த விடயம் பற்றி அலுவலக உத்தியோகத்தரிடம் ஊழியர் விளக்கம் கேட்க முற்பட்டவேளை, குறித்த அதிகாரி எந்தவித பொறுப்பான பதிலையும் அளிக்காது தொடர்ந்து வேலை செய்யுமாறு கேட்டுக்கொண்டதாகப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதுபற்றி எமில் என்ற டெனிஸ் கண்ணிவெடி நிறுவனத்தின் உத்தியோகத்தரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது அவ்வாறான எந்த சம்பவமும் இடம்பெறவில்லை எனத் தெரிவித்தார். மேலும் இது குறித்து செயற்திட்ட அதிகாரியிடம் கேட்கும்படி கூறி தொடர்பைத் திடீரென நிறுத்திக்கொண்டார். (151)

## தமிழரசுக்...

கூட்டம் நடைபெறும். அதில் தலைவர், பொதுச் செயலாளர், மூத்த துணைத்தலைவர், இணைச் செயலாளர்கள், இணைப் பொருளாளர்கள், மற்றும் மத்திய குழுவும் தெரிவுசெய்யப்படும்.

தலைவர், பொதுச்செயலாளர், இணைச் செயலாளர்கள், மூத்த துணைத்தலைவர்கள், பொருளாளர் பதவிகளுக்கு போட்டியிட விருப்பமானவர்கள் மாவட்ட கிளைகள் ஊடாக தங்கள் விண்ணப்பங்களை 15 ஆம் திகதி செவ்வாய்கிழமைக்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு பொதுச்செயலாளர் மாவை சேனாதிராசா அறிவித்துள்ளார். 27 ஆம் திகதி பிரதிநிதிகள் மாநாடு, தலைமைபேருரை, பிரகடனம் என்பன இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுச்செயலாளர் பதவிக்கு போட்டியிருக்காது என்றும் மாவை சேனாதிராசாவே ஏகமனதாக தெரிவு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் தலைவர் பதவிக்கு போட்டி இருக்கும் என தெரியவருகிறது.

தற்போது தலைவராக இருக்கும் சம்பந்தனை அப்பதவியிலிருந்து நீக்கிவிட்டு மட்டக்களப்பில் நீண்டகாலமாக தமிழரசுக் கட்சியில் இருக்கும் சட்டத்தரணி ஒருவரை தலைவராக தெரிவு செய்வதற்கு முயற்சிகள் நடைபெறுவதாக மட்டக்களப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழரசுக் கட்சியினரும் ஆதரவு தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## திருமலையில் கைது...

விடுதலையாகி வீடு திரும்பியவர்களின் தகவல்களின்படி 13 பேர் புனர்வாழ்விற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் 21 பேர் வீடு திரும்பியுள்ளதாகக் கூறப்படுகின்றது. வீடு திரும்பியவர்களில் 7 வயதுச் சிறுவனுடன் அழைத்துச் செல்லப்பட்ட தாயும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

5 பேர் தொடர்ந்தும் பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் விடுதலையானவர்களின் தகவல்கள் மூலம் அறியமுடிகின்றது

## சந்தேகத்திற்கு...

இடமான முறையில் நடமாடித்திரிபவர்கள் இரவு நேரங்களில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரிடம் தமது ஆள் அடையாளங்களை நிரூபிப்பதற்குத் தவறுகின்றனர்.

அவ்வாறு தவறும் பட்சத்தில் அவர்கள் திருட்டுச் சம்பவங்கள் மற்றும் கொலைகள் செய்வதற்காகவே நள்ளிரவு வேளைகளில் நடமாடித் திரிகின்றார்கள் எனக் கருதுகின்றோம். அந்த வகையில் தெல்லிப்பளைப் பகுதியில் 3 பேரும், கொடிகாமம் பகுதியில் 4 பேரும், சுன்னாகம் பகுதியில் 3 பேரும், கோப்பாய்ப் பகுதியில் 6 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, யாழ்.மாவட்டத்தில் போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டியது அவசியமானதாகக் கருதப்படுகின்றதாகவும் தெரிவித்தார். மேலும் 17 வயதிற்குட்பட்ட சிறுமிகளைத் திருமணம் செய்து கொள்ளல் போன்ற விடயங்கள், ஆட்கடத்தல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள் அடங்குவதாகவும் அண்மையில் அவ்வாறு 15 வயது சிறுமியை திருமணம் செய்வதாகத் தெரிவித்து தன்னுடன் வைத்திருந்த இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இளவாலை பகுதியில் 4 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதுடன், வைத்திருந்த நபர்கள் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளனர். இவ்வாறு குற்றங்கள் புரிந்தவர்களைக் கைதுசெய்து தண்டனைகள் விதிக்கப்பட்டுவரும் பட்சத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாக இருக்கிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ் பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் சிகேரா, காங்கேசன்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி காமினி பெரேரா, யாழ். பொலிஸ் நிலையப் பொலிஸ் பரிசோதகர் குலதுங்க, கோப்பாய் பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டனர். (எஸ்)

## பரிந்துரை...

முன்தினம் நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய அரசாங்கம் சுயாதீன ஆணைக் குழுக்களை அமைத்து, தகவல் அறியும் சட்டத்தை ஸ்தாபிக்க வேண்டும்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் இவற்றின் முக்கியத்துவம் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. எனவே, இவற்றை அரசாங்கம் செய்யவேண்டும் என நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைகூட இன்னும் சிங்கள மொழியில் அச்சிடப்படவில்லை. நல்லிணக்க ஆணைக்குழு வின் பரிந்துரைகளை அமுல்படுத்துவோம் என அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் உறுதியளித்துள்ளது.

தேர்தல் வெற்றியின் பின்னர் அரசாங்கம் 17 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இரத்துச் செய்தது. பொலிஸ் ஆணைக்குழு, சட்டவாக்கல் குழு, தகவல் அறியும் சட்டம் ஆகியவை நாட்டில் இல்லாதபோது அரசாங்கம் தேர்தலைப் பற்றிப் பேசுகின்றது. தேர்தல்களுக்கு எதிரான மக்கள் அல்லர் நாங்கள். ஆனாலும், ஒழுங்குமுறை காணப்படவேண்டும். அப்படி இல்லாதபோது தேர்தலை நடத்துவதில் பயனில்லை. பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் இறுதிக்கட்டப் போரில் என்ன நடந்தது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டிய நிலையில் அரசாங்கம் உள்ளது. ஆனால், அதற்கு அரசாங்கம் இன்னும் தயாரில்லைப் போன்றே தெரிகின்றது.

அமெரிக்காவிடம் அரசாங்கம் தற்போது செயற்திட்டம் ஒன்றைக் கையளிக்கப் போகின்றது என அறியமுடிகின்றது. அந்தச் செயற்திட்டம் என்னவென்பது எமக்குத் தெரியாது. அமெரிக்காவிடம் கையளிக்கப்படவுள்ள செயற்திட்டம் என்னவென்பது குறித்து அரசாங்கம் நாடாளுமன்றில் பகிரங்கமாக்க வேண்டும். அதற்கென விசேட அமர்வொன்றைக் கூட்டினாலும் பரவாயில்லை.

அமெரிக்காவிடம் சமர்ப்பிக்கப் போகும் செயற்திட்டத்தில் சுயாதீன ஆணைக்குழுவை ஸ்தாபித்தல், தகவல் அறியும் சட்டமூலம் ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதை தெரியப்படுத்தவேண்டும்.

எனவே, அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடனடியாக அமுல்படுத்த வேண்டும். இல்லையேல் அடுத்த வருடம் மார்ச் மாதம் நிச்சயம் சர்வதேச விசாரணையை எதிர்கொள்ளவேண்டி ஏற்படும். இனிவரப்போகும் பிரேரணைகள் பயங்கரமாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிங்கக்கொடி ஏற்றுவதனை ஜனாதிபதியே ஏற்படுத்தினார்



(கொழும்பு)

சம்பந்தன் சிங்கக்கொடியை ஏந்தும் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த ஜனாதிபதி நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் நிச்சயமாக நிறைவேற்றுவாரெனத் தெரிவித்த வெளிவிவகார பிரதியமைச்சர் நியோமல் பெரேரா நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம்பெறாதவர்களுக்கு அரசை விமர்சிக்கும் தகுதியில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் உள்ள 17 ஆவது திருத்தம் பொலிஸ் மற்றும் தேர்தல் பொதுச் சேவை ஆணைக்குழுக்களை நிறுவுதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணைக்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த பிரதி வெளிவிவகார அமைச்சர் மேலும் கூறியதாவது,

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டவற்றில் பல விடயங்களை அரசு ஏற்கெனவே நிறைவேற்றியுள்ளது. கண்ணிவெடி அபாயமுள்ள பகுதிகளில் மட்டுமே இன்னமும் மீள்குடியேற்றம் இடம்பெறவில்லை. தேர்தல்களில் முறைகேடுகள் இடம்பெற்றால் நீதிமன்றத்தினூடாக தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஊடகங்களுக்கு சகல சுதந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளமையை கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் பார்த்து வியப்படைந்தனர். சிறுவர் போராளிகளுக்கு கல்வி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. தேர்தல் மற்றும் பொலிஸ் ஆணைக்குழுக்கள் தொடர்பில் தமது அரசியல் ஆதாயம் கருதியே எதிர்க்கட்சிகள் கூச்சல் விடுக்கின்றன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பல பகுதிகள் துரித கதியில் அபிவிருத்தியடைந்து வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சிங்கக்கொடியை ஏந்துவதற்கான சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிச்சயம் நிறைவேற்றுவார்.

# வருமானவரி செலுத்துவதில் ஆர்வம் காட்டும் மக்கள்

(கொழும்பு)

வருமான வரி செலுத்துவதில் துரித அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த மற்றும் இந்த வருடத்தின் முதல் காலாண்டு பகுதியில் வருமான வரி செலுத்தியமை 120 வீதத்தால் அதிகரித்துள்ளதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் மல்லிகா சமரசேகர தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் வருமான வரி மற்றும் தேசிய கட்டடங்கள் வரி செலுத்தும் நபர்களின் எண்ணிக்கை எட்டு இலட்சத்து 64 ஆயிரம் என அவர் சுட்டிக்காட்டினார்.

இதில் ஏழு இலட்சத்து 70 ஆயிரம் பேர் வருமான வரி செலுத்துவதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் குறிப்பிட்டார்.

இந்த வருடம் 512 பில்லியன் ரூபாவை வருமான வரியாக ஈட்டிக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் மல்லிகா சமரசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 426 பில்லியன் ரூபாவை வருமான வரியாகப் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 18 ஆவது திருத்தத்தின்மூலம் ஜனநாயகத்திற்கு அஞ்சலி

## அரசை சாடுகிறார் மங்கள



(கொழும்பு)

18 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்ததன் மூலம் இலங்கையின் ஜனநாயகத்துக்கு அரசு அஞ்சலி செலுத்தி விட்டதாகத் தெரிவித்த ஐ.தே.க. எம்.பி. மங்கள சமரவீர இலங்கை தற்போது ஆசியாவின் ஜனநாயகமில்லாத நாடாக மாறிவிட்டதாகவும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

நான் வெளிவிவகார அமைச்சராகவிருந்த போது மனித உரிமை மீறல்கள் தொடர்பான பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டன. இதனால் சர்வதேசத்தின் இலங்கை தொடர்பான நிலைப்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இதனால் நாம் செய்ய வேண்டிய சில விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தி ஒரு கடிதம் அனுப்பினேன். கடிதம் அனுப்பியதற்கு அவர் அனுப்பிய பதிலாக நான் 51 நாட்களுக்குள் அமைச்சுப் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டேன்.

இலங்கைக்கு உதவ எத்தனையோ நாடுகள் தயாராகவிருந்தன. நாம் கேட்ட உதவிகளை இந்தியா 24 மணி நேரத்திற்குள் நிறைவேற்றி வந்தது. ஆனால், இந்த அரசின் தவறான நடவடிக்கைகளினால் இன்று அனைத்தும் தலைகீழாக மாறிப்போய்விட்டன.

காலத்திற்கு காலம் ஆணைக்குழுக்களை நியமிப்பதே அரசின் வேலையாகவுள்ளது. 2006 முதல் 2012 வரை 7 ஆணைக்குழுக்களை ஜனாதிபதி நியமித்துவிட்டார். ஆனால் பலாபலன்கள்தான் எதுவுமில்லை.

தற்போதைய நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் ஜனாதிபதிக்கு உலகளவில் புகழைச் சேர்க்கக்கூடியவை. எனவே அதனை அமுல்படுத்த முயற்சிக்க வேண்டும். சுதந்திரமான தேர்தல் 13 ஆவது திருத்தங்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

# ஆடை ஏற்றுமதி இவ்வருடம் வீழ்ச்சி

(கொழும்பு)

ஆடை ஏற்றுமதி இந்த ஆண்டில் வீழ்ச்சியடையும் என்று மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஒப்புக்கொண்டுள்ளார்.

ஐரோப்பிய வலயத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் மாற்றங்களினால் ஆடை ஏற்றுமதி பாதிக்கப்படும்.

இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருவாயில் ஆடை தயாரிப்புகளே 60 வீதம் என்பதால், மொத்த ஏற்றுமதியிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இதனால் இந்த ஆண்டு 11.9 பில்லியன் டொலர் என்ற ஏற்றுமதி இலக்கை அடைய முடியாது.

அத்துடன் இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி இலக்கான 7.2 வீதம் என்ற இலக்கை எட்ட முடியாது போகவும் வாய்ப்புகள் உள்ளன என்றும் அஜித் நிவாட் கப்ரால் மேலும் தெரிவித்துள்ளார்.

# காணிப் பிரச்சினை தீர்க்க குழுக்கள்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் மக்கள் எதிர் நோக்கியுள்ள காணிப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதற்காக மூன்று விசேட குழுக்களை நியமித்துள்ளதாக கிழக்கு மாகாண காணி அமைச்சர் விமலவீர திசாநாயக்க தெரிவித்தார்.

காணிப் பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகளை பதிவு செய்யும் நடவடிக்கைகளை இந்தக் குழுக்கள் தற்போது ஆரம்பித்துள்ளன.

மாகாணத்தில் நிலவுகின்ற காணிப் பிரச்சினை குறித்து இந்தக் குழுக்களிடம் முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்றும் கிழக்கு மாகாண காணி அமைச்சர் விமலவீர திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

# இலங்கையில் பணியாற்றும் இந்திய ஊழியர்கள் அடிமைகள்

## என்கிறது இந்து நாளிதழ்

(சென்னை)

இலங்கையில் செயற்படும் இந்திய முதலீட்டு செயற்றிட்டங்களில் இந்தியர்கள் அடிமைகளைப் போன்று சேவையில் ஈடுபடுத்தப்படுவதாக தகவல் கிடைத்துள்ளதாக இந்து நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய முதலீட்டாளர் ஒருவரினால் கம்பஹா மாவட்டத்தில் முத்தரகம பிரதேசத்தில் உள்ள இரும்பு தொழிற்சாலையில் இந்திய ஊழியர் ஒருவர் மின்சாரம் தாக்கிப் பலியானதை அடுத்தே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

ஜெய்ப்பூரைச் சேர்ந்த குமார் மல்லிக் என்ற 29 வயதான இரும்பு பொருத்துனர் கடந்த செவ்வாய்க்கிழமை இவ்வாறு தொழிற்சாலை விபத்தில் பலியானார்.

இவர் கடந்த டிசம்பர் மாதமளவிலேயே இலங்கை வந்துள்ளார். 153 பேரைக் கொண்ட குறித்த தொழிற்சாலையில் 101 பேர் இந்தியர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# புதையல் தோண்டிய பத்துப் பேர் கைது

(கொழும்பு)

வவுனியா - செட்டிக்குளம் பொலிஸ் நிலையத்திலிருந்து சில கிலோமீற்றர் தூரத்தில் புதையல் தோண்டிவந்த பத்து பேரை பொலிஸார் நேற்று அதிகாலை கைதுசெய்துள்ளனர்.

அவர்கள் பயணித்ததாக சந்தேகிக்கப்படும் மூன்று வாகனங்களையும், பாறைகளை உடைக்க பயன்படுத்தப்பட்ட டெட்டனேட்டர்கள், வெடி மருந்துகள், பூசைக்குத் தேவையான பொருட்கள் உட்பட புதையல் தோண்ட பயன்படுத்திய அனைத்துப் பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து மரபுரிமைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டதைப் போல போலி ஆவணமொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.


பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில்

பாரதியார் பல்கலைக்கழக ஊடக பட்டப்படிப்பு

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைப்புப் பெற்று B.Sc. (Visual Communication) P.G. Diploma (Communicative English) M.A. (Journalism & Mass Communication) ஆகிய கற்கைநெறிகளை யூன் 2012இல் ஆரம்பிக்கவுள்ளது.

கல்வி கற்போர் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உடன் தொடர்புகொள்ளவும்.

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை
பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்
இல.891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021 222 6085

(C/1565)



மாதம் 50,000 ரூபா
வருமானத்துடனான வெளிநாட்டுக் கல்வி!



UK, Australia & Malaysian Certified
Hospitality Management
மலேசிய அரசாங்கத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழான பயிற்சிநெறி

முதல் 3 மாதம்
English & Skillls Training

அடுத்த 9 மாதங்கள்
50,000 ரூபா வருமானத்துடன் கூடிய தொழிற்பயிற்சி

உணவு, தங்குமிட வசதி இலவசம்!

பயிற்சிநெறி முடிவில்
Skills Malaysia Invite, City & Guilds (UK), AETS (Australia)
சான்றிதழ்களுடன்,
மலேசியா அல்லது சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு!

- 9ம் வகுப்பு வரையில் படித்த, 18-45 வயதுக்கு இடைப்பட்ட எவரும் இணைந்துகொள்ளலாம்.
- விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து ஒரு மாதத்தில் பயண உத்தரவாதம்!
- விசா ஏற்பாடுகள் செய்யப்பட்டு, நேரடியாக மலேசியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பயிற்சி நிறுவனத்தில் இணைக்கப்படுவர்.
- பயிற்சிநெறிக் காலத்தில் நேரடிக் கண்காணிப்பு மற்றும் உதவிகள்.

முதல் அணியில் 30 பேருக்கு மட்டுமே வாய்ப்பு
ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்!

நேரடி விளக்கக் கருத்தரங்கு மற்றும் Spot Admission!
19-05-2012 காலை 10.00 மணி
யாழ் ஞானம்ஸ் ஹொட்டேல்

மே 25, 26, 27, 28 இல் | கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு, மலையகம் ஆகிய பிரதேசங்களில் நேரடி கருத்தரங்கு மற்றும் அனுமதி.

MEDIA

சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டல் பிரிவு
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 8060 நேரடி: 0773 616 798

(C/1564)


சிரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மே 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.